# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+4

சுடர் 32 | கதிர் 27 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 08, வெள்ளிக்கிழமை 23.12.2016

## ஜனாதிபதிக்கு முறையிடும் செயலகம் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், டிசெ. 23
ஜனாதிபதிக்கு முறைப்பாடுகளை நேரடியாகத் தெரிவிக்கும் செயலகம் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் அடுத்த ஆண்டில் இருந்து இயங்கவுள்ளது. இந்தத் தகவலை அவரே வெளியிட்டார். வடக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலமைகள் >> 25

*மகிந்த அணியின் பரப்புரை*

## மைத்திரி அரசிடம் முறையிட்டது சீனா

யாழ்ப்பாணம், டிசெ. 23
அம்பாந்தோட்டையில் காணிகளை அபகரிக்க சீனா முனைவதாக, மேற்கொள்ளப்படும் பரப்புரைகள் தொடர்பாக இலங்கை அரசிடம் சீன அரசு அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அம்பாந்தோட்டை சிறப்புப் பொருளாதார வலயத்துக்குக் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளதாகப் பொது மக்கள் மத்தியில் அமைதியின்மை ஏற்படுத்தும் வகையில் >> 25

# அபிவிருத்தி சட்டத்தை ஆதரிக்காது கூட்டமைப்பு

*இது மாகாண சபைகளின் அதிகாரங்களை பறிக்கும் நடவடிக்கை என்கிறார் சுமந்திரன்*



யாழ்ப்பாணம், டிசெம்பர் 23
அபிவிருத்திச் சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் ஊடாக மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறிக்கும் – குறைக்கும் நடவடிக்கைகளை ஒரு போதும் ஆதரிக்க முடியாது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்ட >> 04

## ஐ.தே.க—பசில் 'டீல்' போட்டுடைத்தார் டிலான் பெரேரா

யாழ்ப்பாணம், டிசெ. 23
சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தினால் மீண்டும் விகிதாசார முறைப்படியே தேர்தல் நடத்தப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி பசிலுக்கு உத்தரவாதம் கொடுத்தமையே, ஐ.தே.க. பசில் >> 04

## பன்னாட்டு நீரியல் ஆய்வு மாநாடு யாழ்ப்பாணத்தில்

*அடுத்த ஆண்டு நடத்தத் திட்டம்*

யாழ்ப்பாணம், டிசெ. 23
பன்னாட்டு நீரியல் ஆய்வு மாநாட்டை அடுத்த ஆண்டு ஜனவரி மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் >> 25

## கொழும்பிடமே அதிகாரங்கள்; அவை பகிரப்படவே கூடாது

*ஜனாதிபதியிடம் வலியுறுத்தியது தேசிய படை வீரர்களின் ஒன்றியம்*

யாழ்ப்பாணம், டிசெ. 23
அதிகாரங்கள் கொழும்பு அரசிடமே இருக்கவேண்டும். பகிரப்படக் கூடாது. காணாமற்போனோர் அலுவலகம் படையினரைப் பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கே அமைக்கப்பட்டுள்ளது. >> 25

*நிறைவேற்றதிகாரம் ஒழியாமல்*

## ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக்கூடாது

*எச்சரிக்கிறது ஜே.வி.பி.*



கொழும்பு, டிசெ. 23
நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இன்னும் ஒழிக்கப்படவில்லை. எனவே இனி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக் கூடாது. மீறி நடத்தினால் பலமான வேட்பாளரை நிறுத்தி அதன் மூலமாக அந்த முறையை ஒழித்துக் கட்டுவோம். இவ்வாறு ஜே. வி.பி யின் >> 25

## மைத்திரியிடம் விடைபெற்றார் பான் கீ மூன்

கொழும்பு, டிசெ. 23
ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பதவி யிலிருந்து விடைபெறும் பான் கீ மூன், ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுடன் நேற்றுப் பிற்பகல் தொலைபேசியில் உரையாடினார். இது தொடர்பில் ஜனாதிபதி >> 25

முச்சந்தி முனி



அப்ப அரிசி இங்க மலிவாகவல்லோ விக்கவேணும்...

## நெல் உற்பத்தியில் வடக்கு தன்னிறைவு

*மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 23
நெல் உற்பத்தியில் வடக்கு மாகாணம் தன்னிறைவு கண்டுள்ளதாகவும், மிகை உற்பத்தி ஏனைய மாகாணங்களுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார். >> 25

## குடத்தனையில் சிக்கியது கேரளக் கஞ்சா

யாழ்., டிசெ. 23
வடமராட்சி கிழக்கு குடத்தனையில், 5 கிலோ 685 கிராம் கேரளக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப் >> 25



## சிறிய மனிதப் பேரவலத்துக்கு எதிராக வடக்கு அரசு குரல்

யாழ்ப்பாணம், டிசெ. 23
இனிவரும் காலங்களில் எங்கும் மனிதப் பேரவலம் நிகழக் கூடாது என வடக்கு மாகாண சபையில் நேற்றுக் கூட்டாகக் குரல் எழுப்பப்பட்டது. சிரியப் போரில் கொல்லப்பட்ட மக்களுக்காக வடக்கு மாகாண சபையில் நேற்று அஞ்சலி செலுத் >> 04

## பயனாளியின் பங்களிப்பாக பொருத்து வீட்டுக்கு 6 லட்சம்

*அதனை வேண்டும் என்றே நீக்கிவிட்டு விளம்பரம் செய்கிறார்கள் என்கிறார் மாவை*

யாழ்ப்பாணம், டிசெ. 23
முன்னிர்மாணிக்கப்பட்ட வீட்டுக்குத் தெரிவு செய் யப்படும் பயனாளி 6 லட்சம் ரூபா தனது பங்களிப் பாகச் செலுத்த வேண்டும் என்பதும், கல் வீட்டுக்கு விண்ணப்பித்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை என்பதும் வேண்டும் என்று தவிர்க்கப்பட்டு நீக்கப்பட்டு >> 04

## தற்காலிக கடவுச்சீட்டுடன் சிதம்பரம் செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 23
இந்தியாவின் சிதம்பரத்தில் நடைபெறும் திருவெம்பாவை திருவிழாவுக்கு, யாழ்ப்பாணத்தில் இருந்து செல்ல விரும்பும் யாத்திரிகர்களில் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) இல்லாதவர்களுக்குத் >> 04

## நாடு பிரிப்பை சத்தமின்றி செய்கின்றது கூட்டமைப்பு

*சாடுகிறது ஹெல உறுமய*

யாழ்ப்பாணம், டிசெ. 23
ஆளுநரின் அதிகாரத்தைக் குறைக்கச் சொல்லிக் கேட்பதும், மீளப் பெற முடியாத வகையில் அதிகாரப் பரவலாக்கம் கோருவதும், நாட்டைப் பிரிப்பதற்காகத்தான். இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சத்தமில்லாமல் செய்து கொண்டிருக்கின்றது. ஆபத் >> 04

## எதிர்பாராமல் பெயில் விட்டோம் மாணவரும் மதிக்கமாட்டார்கள்

*கடமை நிறைவேற்று அதிபர்கள் நேற்று வடக்கு மாகாண சபை முன் போராட்டம்*



யாழ்ப்பாணம், டிசெ. 23
அதிபர் தரப் பரீட்சையில் துரதிர்ஷ்டவசமாகப் பெயிலாகி விட்டோம் என்று கூறிய கடமை நிறைவேற்று அதி >> 25



எமது நடைமுறைக் கணக்கு மூலம் நீங்களும் வளர்ச்சி பெறுங்கள்

- நடைமுறைக் கணக்கு
- சேமிப்புக் கணக்கு
- வாகனக் கடன்
- லீசிங்
- தனிநபர் கடன்
- வீட்டுக் கடன்
- கல்விக் கடன்
- வர்த்தகக் கடன்

உங்கள் வளர்ச்சிக்கு உதவி புரியும் சேவைகள் பற்றி மேலும் விபரங்களை அறிந்து கொள்ள எம்மிடம் வாருங்கள்.
24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000 | www.dfcc.lk

DFCC வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிவாஜி அண்ணை! உங்களுக்கு சின்ன விசயத்துக்கும் ரென்சன்"

யாழ்ப்பாணம், டிசெ. 23
வடக்கு மாகாண சபையின் நேற்று முன்தினம் அமர்வில், அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானத்துக்கும், ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கும் இடையில் கடும் சொற்போர் நடந்தது. ஒரு கட்டத்தில் அவைத் தலைவரை நோக்கி-சபா பீடத்தை நோக்கி சிவாஜிலிங்கம் பாய்ந்து சென்றார். இதன் பின்னர் உறுப்பினர்கள் அவரைக் கட்டுப்படுத்தினர். சபையும் ஒத்தி வைக்கப்பட்டது.
சண்டையின் பின்னர்- சபை ஒத்தி வைக்கப்பட்ட நேரத்தில், சபா மண்டபத்துக்கு வெளியில் ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்துடன் உறுப்பினர்கள்" ஆசுவாசமாக' சண்டையின் சுவாரசியத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.
"சிவாஜி அண்ணை! உங்களை ரென்சன் (பதற்றம் - கொந்தளிப்பு) ஏற்றுவதற்காகத்தான் அவங்கள் கதைக்கிறாங்கள். நீங்கள் ரென்சனைக் கட்டுப்படுத்தியிருக்கலாம். உங்களுக்குச் சின்ன விசயத்துக்கும் ரென்சன் வரும் என்று தெரியும்தானே. ஏன் பேந்து (பிறகு) இப்படி நடந்தனிங்கள்" என்று ஆறுதல் வார்த்தைகளை அள்ளித் தெளித்தார் ஆளும் கட்சி உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன்.
"அண்ணை நான் உங்களை இழுத்துப் பிடிக்காட்டி நீங்கள் வந்தவேகத்துக்கு அடித் திருப்பிங்கள். நல்லவேளை நான் பிடித்து விட்டேன்" என்று பெருமைப்பட்டுக் கொண்டார் எதிர்க்கட்சி உறுப்பினர் ஜவாஹிர். (த-5-7)



# வலுப்பெற்றுள்ளது இரு நாட்டு உறவு

## திருப்பதியில் ரணில் தெரிவிப்பு

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நல்லுறவு மிகவும் வலுப்பெற்றுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திருப்பதி தேவஸ்தானத்தில் சிறப்புப் பூசை வழிபாடுகளை மேற்கொண்டார்.
திருப்பதி ஏழுமலையானைத் தரிசிப்பதற்காகப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவரது மனைவி மற்றும் அமைச்சர்களான பழனி திகாம்பரம், டி.எம். சுவாமிநாதன் ஆகியோர் நேற்று முன்தினம் நண்பகல் 1.55 மணியளவில் இந்தியா நோக்கிப் புறப்பட்டுச்சென்றனர்.
திருப்பதி தேவஸ்தானத்துக்குச் சென்றவர்களுக்கு தேவஸ்தானம் சார்பாகச் சிறப்பு வரவேற்பு வழங் கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.
இரவு வணக்கத்துக்குப் பின்னர் திருப்பதி தேவஸ்தானத்திலேயே தங்கிய பிரதமர் உள்ளிட்ட குழுவினர் நேற்று அதிகாலை 5.30 மணியளவிலும் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.
சுவாமி தரிசனத்திற்குப் பின்னர் இந்திய ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே இரு நாட்டு உறவு பற்றி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். இலங்கைக் கடற்படையால் தொடர்ந்து தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்படுவது குறித்து இந்திய ஊடகவியலாளர்கள் கேட்டதற்கு, ரணில் விக்கிரமசிங்க பதிலளிக்க மறுத்துவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-4-5)

# பேருந்துகள் எம்மை அலைக்கழிக்கின்றன

## வெள்ளைப் பிரம்புகள் கையளிப்பில் கவலைப்பட்ட விழிப்புலனற்றோர்




யாழ்ப்பாணம், டிசெ. 23
விழிப்புலனற்றுள்ள எம்மைப் பேருந்துகளில் ஏற்றுகிறார்களில்லை. அவ்வாறு ஏற்றினாலும் எமக்காக ஒதுக்கப்பட்ட இருக்கைகளைத் தருவதில்லை என்று பேருந்துச் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் மீது கிளிநொச்சி மாவட்ட விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் எஸ். ரூபராஜா குற்றஞ்சாட்டினார்.
போரால் பாதிக்கப்பட்டுக் கண்களை இழந்த முன்னாள் போராளிகள் 100 பேருக்கு வெள்ளைப்பிரம்புகள் வழங்கும் நிகழ்வு யாழ்.வணிகர் கழகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கவலை வெளியிட்டார்.
யாழ்.வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் உள்ள 'ரூபா' பல்பொருள் விற்பனை நிலைய உரிமையாளர் விழிப்புலனற்றவர்களுக்கு உதவுவதற்கென ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியிருந்தார். அந்த நிதி மூலமாக 100 வெள்ளைப்பிரம்புகள் கொள்வனவு செய்யப்பட்டு விழிப்புலனற்றோருக்கு நேற்று வழங்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விழிப்புலனற்றோர் சங்கத்தில் உள்ள 295 பேரில் முதல் முறையாக 100 பேருக்கு குறித்த வெள்ளைப்பிரம்புகள் வழங்கப்பட்டன.
போரால் பாதிக்கப்பட்டு இரு கண்களையும் இழந்தவர்களும், ஒரு கண்ணை இழந்து விழிப்புலனற்றவர்களாக உள்ளவர்களும் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் வணிகர் கழகத்தின் ஊடாக உதவுவதற்கு ரூபா வர்த்தக நிலைய உரிமையாளர் முன்வந்திருந்தார். அவற்றை வழங்கும் நிகழ்வில் ரூபராஜா உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:
வெள்ளைப்பிரம்புடன் செல்லும் எம்மை மற்றவர்கள் மதிப்பதில்லை. வங்கிகளுக்குச் சென்றால் கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. வாழ்வாதாரக் கடன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டால் விழிப்புலனற்றோருக்கு வழங்க முடியாதென்று கைவிரிக்கின்றனர். தாம் சட்டத்தின்படி செயற்படுவதாகவும் வங்கி அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.
எனவே விழிப்புலனற்றோர்களுக்கு உதவ அனைவரும் முன்வரவேண்டும்-என்றார்.
இந்த விடயங்கள் தொடர்பில் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனின் கவனத்துக்குக் கொண்டு செல்வதுடன், இலங்கை போக்குவரத்துச்சபை முகாமையாளர் மற்றும் தனியார் போக்குவரத்துச் சபையின் முகாமையாளருடனும் கலந்துரையாடி எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாது நடவடிக்கை மேற்கொள்வதாக யாழ்.வணிகர் கழகத் தலைவர் தெரிவித்தார். (த-4,106,ரி)

# இலங்கையில் 20 இனத்தவர்

## கூறுகிறார் மனோ கணேசன்

இலங்கை இருபது இனங்களைக் கொண்ட நாடு. நான்கு மதங்கள், மூன்று மொழிகள் இங்கு உள்ளன. இதனை மறந்தால் ஒரே நாடாக நாம் வாழ முடியாது. இவ்வாறு தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.
இரத்தினபுரி பிரதேச செயலகத்தில் சிங்கள அரச ஊழியர்களுக்கான தமிழ் பேச்சு மொழிப் பயிற்சி வகுப்பு நிறைவு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
இருபது இனத்தவர்கள் இலங்கையில் வாழ்வதாக எனது அமைச்சில் பதிவாகியுள்ளது. இரண்டு மொழிகள் ஆட்சி மொழிகளாகவும், ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும், பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய நான்கு மதங்களும் இலங்கையில் உள்ளன. இதை மாற்ற முடியாது. இந்த அடிப்படை உண்மைகள் இந்த நாட்டில் வாழும் நம்மில் பலருக்கே தெரியாது.
உலகத்துக்கு இலங்கையில் வாழும் தமிழர்கள் அனைவரும், இலங்கை தமிழர்கள். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால், உள்ளகரீதியாக, ஈழத்தமிழர், மலையகத் தமிழர் என்ற அடையாளங்கள் இருக்கின்றன. இந்த பரஸ்பர அடையாளங்களை அங்கீகரித்து அறிவுப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் - என்றார். (த-5)



தபால் நிலைய ஊழியர்கள் 48 மணிநேரம் மேற்கொண்ட வேலை நிறுத்தம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது. தபால் ஊழியர்கள் நேற்று மீண்டும் தமது வழமையான செயற்பாடுகளை ஆரம்பித்தனர். கடந்த இரு தினங்களாகத் தபால் நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. நேற்று செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பியதை அடுத்து வவுனியா தலைமைத் தபாலகத்தில் முதியவர்கள் தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர். (து)

# புதிய அரசமைப்பால் நல்லாட்சிக்குள் பிளவு

## கூறுகிறது மகிந்த தரப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23
புதிய அரசமைப்புத் தொடர்பில் அரசுக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்புத் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியும் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு நிலைப் பாட்டை முன்வைக்கின்றன.
சிறிலங்கா சுந்திரக் கட்சி வேறு நிலைப்பாட்டைத் தெரிவிக்கின்றது.
ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுந்திரக் கட்சி இணைந்து தேசிய அரசை நிறுவியிருக்கும்போது இரண்டு கட்சிகளுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயமல்ல. இது ஜனநாயகச் செயற்பாடும் அல்ல என்றார். (த-5)

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ். மா[illegible] கூட்டம் தவிர்க்க [illegible] யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார். இந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமானது இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைச்சாலைக்குள் கஞ்சாவுடன் சென்ற பெண் கைதாகினார்

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் கஞ்சா போதைப் பொருளை எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

'குறித்த பெண் தீவகத்தைச் சேர்ந்தவர். அவர் பேருந்தில் பயணிக்கும்போது பேருந்தில் அறிமுகமாகிய ஒருவரே அந்தப் பொதியைக் கொடுத்ததாக விசாரணையில் கூறப்பட்டது. கைதுசெய்த பெண்ணிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன' என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (வ-4)

# பேருந்து கட்டணத்தை உயர்த்தக் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 23

அரை சொகுசு பஸ் களுக்குச் சமமான வசதிகளைக் கொண்ட குறு கிய சேவை பஸ்களிலும், அரைச் சொகுசுப் பயணங்களுக்கான கட்டணத்தை அறவிடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக இலங்கை தனியார் போக்குவரத்து பஸ்உரிமையாளர்கள்சங்கம்தெரிவித்துள்ளது.

இந்த யோசனையை நேற்று முன்தினம் போக்குவரத்து அமைச்சில் ஒப்படைத்ததாகவும், அதற்கான அனுமதி கிடைத்தாலும், கிடைக்கவில்லை என்றாலும் கட்டணம் அதிகரிக்கப்படும் எனவும் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இலங்கையினுள் அரைச் சொகுசு பஸ் சேவை என்ற பெயரில் 500 பஸ்கள் சேவையில் ஈடுபடுவதாகவும், அந்த பஸ்கள் பயணத்துக்காக அதிக கட்டணம் அறவிடுவதாகவும் அவர் கூறினார். (தி)

# லசந்தவுடன் உரையாடியது உண்மையே

## ஒலிப்பதிவு குறித்து மகிந்த விளக்கம்

கொழும்பு, டிசெ 23

நான் லசந்த விக்கிரமதுங்கவுடன் தொலைபேசியில் உரையாடுவது வழமையான ஒன்றாகும், நானும் லசந்த விக்கிரமதுங்கவும் தொலைபேசியில் உரையாடும் வகையில் வெளியாகியுள்ள ஒலிப்பதிவு சிலவேளை உண்மையானதாக இருக்கலாம். எனினும் நான் இதனைக் கதைத்தேனா அல்லது இல்லையா என்று ஞாபகம் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு ஜனவரி8ஆம்திகதிதெகிவளை, அத்திட்டிய பேக் கரிச் சந்தியில் வைத்து லசந்த விக்கிரமதுங்க இனந்தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்டார்.

படுகொலை செய்யப்பட்ட சண்டே லீடர் பத்திரிகையின் முதன்மை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கும் இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் தொலை பேசி உரையாடல் ஒலிப் பதிவு படுகொலை இடம் பெற்று 8 வருடங்கள் கடந்த பின்னர் அம்பலமாகிச் சர்ச்சையைஏற்படுத்தியுள்ளது.

குறித்த உரையாடல் இரவு வேளை இடம்பெற்றுள்ளதாக இருவருக்கும் இடையிலான உரையாடல் மூலம் தெரியவருதோடு மகிந்த ராஜபக்சவுக்கு அறிவுரை கூறும் வகையில் இந்த உரையாடல் அமைந்துள்ளது.

"இந்தச் சம்பவம் இன்று நடைபெற்றதல்ல. அந்தக் காலத்தில் இடம்பெற்ற ஒன்றாகும். அந்த ஒலிப் பதிவு சிலவேளை உண்மையானதாக இருக்கலாம். நான் லசந்த விக்கிரமதுங்கவுடன் தொலைபேசியில் உரை யாடுவதை வழமையாகக் கொண்டிருந்தேன். இது ஒன்றும் புதிய விடயமில்லை. எனினும் குறித்த விடயம் தொடர்பில் கதைத்தேனா அல்லது இல்லையா என்று எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் தொலைபேசியில் கதைப்பதையெல்லாம் லசந்த பதிவு செய்வதை அவருடைய வழக்கமாகக் கொண்டிருந்தார். ஊடகவியலாளர் என்ற வகையில் ஒரு வேளை உரையாடலை ஒலிப்பதிவு செய்திருக்காலம்" என்று மகிந்த தெரிவித்தார். (தி)

# கிழக்குத் தமிழர் ஒரு லட்சம் பேர் இந்தியாவில்

## மாகாணசபை உறுப்பினர் கலையரசன் தெரிவிப்பு

அம்பாறை, டிசெ.23

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சம் தமிழர்கள் இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர் எனக் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

இந்த அகதிகளை இலங்கைக்கு அழைத்துவந்து மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் கூறினார்.

2017ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண சபையின் வரவு -செலவுத்திட்டக் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

இங்கிருந்து இடம்பெயர்ந்து இந்தியாவுக்குச் சென்ற அகதிகளின் நிலமை மற்றும் அவர்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் எவரும் பேச இந்தச் சபையில் முன்வருவதில்லை.

இந்தச் சபையில் இன வீதாசாரம் பற்றிப் பேசப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் குடிசன மதிப்பீடு செய்யப்பட்டபோது 74 சதவீதத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்ந்திருந்தார்கள். தற்போது அந்த வீதாசாரம் 40 சதவீதமாகக் குறைந்துள்ளது. அதற்குக் காரணம் இந்த நாட்டில் இடம்பெற்ற போர் என்பதைச் சகலரும் கவனத்திற் கொள்ளவேண்டும் - என்றார். (த-ய-49)

# நெல்சிப் மோசடி தொடர்பில் உண்மை கண்டறிவே நடந்தது

## வடக்குத் தலைமைச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23

நெல்சிப் திட்ட ஊழல் மோசடிதொடர்பில் உண்மைத் தன்மை அறியும் முதற் கட்ட ஆய்வை மாத்திரமே நாம் முன்னெடுத்திருந்தோம். அதனை அரச அலுவலர்களாகத் தற்போது இல்லாதவர்களை வைத்தும் செய்ய முடியும்.

இவ்வாறு வடக்கு மாகாண தலைமைச் செயலர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

'தாபன விதிக் கோவைகளுக்கு அமைய அரச ஊழியர்கள் விசாரணை மேற்கொண்டாலே குற்றப் பத்திரம் தயாரிக்க முடியும். தலைமைச்செயலர் தனக்கு அறிக்கை தேவை என்றால் வெளி நபர்களைக் கொண்ட விசாரணைக் குழுவை அமைக்க முடியும்' இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா சபையில் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொருநிலையிலேயே தலைமைச் செயலர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் நெல்சிப் திட்டங்களின் போது இடம் பெற்றதாக குறிப்பிடப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில் உண்மைத் தன்மை கண்டறி யப்படவேண்டும். அதன் பின்னரே விசாரணைகள் மேற்கொள்ள முடியும். உண்மைத் தன்மையைக் கண்டறியும் ஆய்வை மேற்கொள்ள குழுவை நியமித்து ஆய்வை மேற்கொண்டோம்.

அவ்வாறு கண்டறியப்பட்ட ஆய்வுத் தகவல்கள் மற்றும் ஆவணங்கள் விசாரணைக்காக மாகாண சபையின் அங்கீகாரத்துடன் பெரிய நிதி மோசடி விசாரணைப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ளன். அரச ஊழியர்களுக்கான ஆரம்ப விசாரணையை அரச ஊழியர்கள்தான் மேற்கொள்ள வேண்டும் என்ற விதி அரச நிதிக்கும், பணியில் உள்ள அரச ஊழியர்களுக்குமே பொருந்தும். நெல்சிப் திட்டத்தைப் பொறுத்தவரையில் மேற்படி விதி பொருந்தாது.

இது ஒரு நேரடி அரச நிதி கிடையாது. இந்தத் திட்டத்தின் கீழ் பணியாற்றிய அல்லது தொடர்புபட்டோர் அனைவரும் அரசஊழியர்களும்கிடையாது. ஊழியர்களுடன் வெளியாரும் உள்ளடக்கம். தனியான குழு ஆய்வை மேற்கொள்வதே நிதி வழங்குநர்களின் நம்பகத் தன்மையையும்அதிகரிக்கும்–என்றார். (த-5-10)

ரவிராஜ் படுகொலை வழக்கு

# முதன்மைச் சாட்சி மன்னம்பேரி பிணையில் விடுவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட வழக்கின் முதன்மைச் சாட்சியான மன்னம்பேரி நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார். வழக்கின் சாட்சியப் பதிவுகள் நிறைவடைந்து இன்று தொகுப்புரை இடம்பெறும் என்று மேல் நீதிமன்றம் அறிவித்தது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் அறங்கூறும் அவை முன்பாக நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நேற்று எதிரிகள் தரப்பின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

இரண்டாம் லெப்டினன்ட் தரத்தைச் சேர்ந்த கடற்படைப் புலனாய்வு அதிகாரியான பிரசாத் ஹெட்டியாராச்சி என்ற சந்தேக நபர் தனது சாட்சியத்தில்:

ரவிராஜ் கொலைச் சம்பவம் நடைபெறுவதற்கு 16 நாள்களுக்கு முன்னர்தான் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பணி இடமாற்றம் செய்யப்பட்டேன். அரச தரப்புச் சாட்சியான மன்னம்பேரி என்னை இரண்டு மாதங்களாகத் தெரியும் என்றது பொய். அவரைப் பணி நிமித்தம் சில சந்தர்ப்பங்களில் கண்டுள்ளேன். பழக்கம் இல்லை. நான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டுள்ளேன். இதே சட்டத்தில் கைது செய்யப்பட்ட பலரை நான் சிறையில் சந்தித்துள்ளேன். அவர்கள் மீது குற்றம் சுமத்தப்படவில்லை. வழக்கு விசாரணை நடக்கவில்லை. இந்த இடத்தில்சந்தோசப்படுகின்றேன். இந்தக்குற்றத்துக்குச் சாவுத் தண்டனை என்பது தெரியும். கொழும்புத் துறைமுகத்தின் மீது புலிகள் தாக்குதல் நடத்தப் போவதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தன. அதனையடுத்துத் துறைமுகப் பாதுகாப்புக்காகவே கொழும்பில் கடற்படைப் புலனாய்வு அலுவலகம் அமைக்கப்பட்டது. அதில் பணியாற்றுவதற்காகவே நான் கொழும்பு வந்தேன். நான் கொலையுடன் தொடர்புபடவில்லை. நீதிமன்றத்தின் ஊடாக எனக்கு நீதி கிடைக்கும் என்று நம்புகின்றேன் – என்றார்.

ரவிராஜ் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக அரசதரப்புக் குறிப்பிடும் கடற்படைப் புலனாய்வு அதிகாரியான காமினி செனவிரட்ன என்ற சந்தேகநபர் சாட்சியத்தில்:

கடற்புலிகளுக்கு எதிரான தாக்குதல்களில் பங்கெடுத்திருக்கின்றேன். பொய்க் குற்றச்சாட்டில் 21 மாதங்கள் 5 நாள்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றேன்.

கொழும்புத் துறைமுகத்தின் மீது புலிகள், மும்முனைத் தாக்குதல் நடத்தப்போவதாகப் புலனாய்வுத் தகவல் கிடைத்தது. துறைமுகப் பாதுகாப்பை அதிகரிக்கவேண்டியிருந்தது. தேசிய புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து நாம் செயற்பட்டோம்.

ரவிராஜை நான் சுட்டதாக அரச தரப்புச் சாட்சி பொய் சொல்லியுள்ளார். ரவிராஜ் கொலை நடந்த இடத்திலிருந்து மீட்கப்பட்ட தடயப் பொருள்களில் கொலையாளியின் குருதி மாதிரி இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் மரபணுப் பரிசோதனை முடிவையும், எனது குருதியின் மரபணுப் பரிசோதனையையும் எடுத்துப் பரிசோதித்துப் பாருங்கள்.

கருணா குழுவைச் சேர்ந்த சுரேஸ் – சரண் ஆகியோரை எனக்குத் தெரியும் என்று அரச சாட்சி மன்னம்பேரி குறிப்பிட்டிருந்தார். அப்படிப்பட்ட யாரையும் எனக்குத் தெரியாது– என்றார்.

கடற்படைப் புலனாய்வாளரான பிரதீப் சமிந்த என்ற சந்தேக நபர் சாட்சியமளிக்கையில்: எனது 22 வருட கடற்படை வாழ்க்கையில் எந்தக் குற்றச்சாட்டும் இல்லை. எனது சேவையைப் பாராட்டி 9 விருதுகள் வழங்கப்பட்டன. அரச சாட்சியான மன்னம்பேரியை நான் சந்தித்ததில்லை– என்றார்.

சந்தேக நபர்கள் சார்பாக, தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் ஜெயவர்த்தன மன்றில் சாட்சியமளித்தார். நீதிமன்றில் சாட்சியமளித்த 63 ஆவது சாட்சியான பொலிஸ் கொன்ஸ்டபிள் அபேயவர்த்தன, ரவிராஜ் கொலை தொடர்பில் உங்களுக்கு ஏற்கனவே தெரிவித்ததாகக் குறிப்பிட்டிருந்தார். அது உண்மையா? என்று பிரதிவாதி சட்டத்தரணி கேட்கப் பணிப்பாளர் இல்லை என்று பதிலளித்தார்.

அரச சட்டத்தரணி தேசியப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரை நோக்கி, சந்தேக நபர்களாக இங்கே உள்ளவர்களில் ஒருவரின் மனைவி உங்கள் பணியகத்தில் பணியாற்றுகின்றார் என்பது உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்க, இன்று (நேற்று) காலை அறிந்துகொண்டேன் என்றார். அந்தச் சந்தேகநபர் யார் என்று தெரியுமா என்று கேட்க, இல்லை என்றார் பணிப்பாளர். இதனைக்கூடத் தெரியாத நீங்கள் தேசியப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளரா? என்று அரச தரப்புச் சட்டத்தரணி கேட்க, அதனைத் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் தனக்கு இல்லை என்றார் பணிப்பாளர்.

'5 கேள்விகள்தான். சந்தேகநபர்கள் சாட்சியாக வந்த தேசியப் புலனாய்வுப் பணிப்பாளர் பொய் சொல்லுகின்றார் என்பதை நிரூபிக்கிறேன். அதற்கு வாய்ப்பு வழங்குங்கள்' என்று மன்றில் கோரினார் பாதிக்கப்பட்ட தரப்பு நலன்சார் சட்டத்தரணியாக மன்றில் முன்னிலையாகிய எம்.ஏ.சுமந்திரன். அதற்குப் பிரதிவாதிகள் தரப்புச் சட்டத்தரணிகள் எதிர்ப்புத் தெரிவித்து, அவருக்கு வாய்ப்புக் கொடுப்பது என்பது சட்டமா அதிபர் திணைக்களத்தின் கையாலாகத்தனம் என்று தெரிவித்தனர். அதனால் சுமந்திரனின் கோரிக்கை மன்றினால் நிராகரிக்கப்பட்டது. (வ-4,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண ஆங்கில வள நிலையம் ( PESC)**
**ஒப்பந்த அடிப்படையில்**
**குத்தகைக்கு வழங்குதல்(சிற்றுண்டிச்சாலை)**
**01.02.2017 தொடக்கம் 31.12.2017 வரை**

**மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மன்னாரில் இயங்கிவரும் PESC இற்குரிய சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்குத் தகுதியான / தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடத்துநர்களிடமிருந்து 01.02.2017 தொடக்கம் 31.12.2017 வரையான காலப்பகுதிக்கு மாகாணக்கல்வித் திணைக்கள திணைக்கள பெறுகைக் குழுவினால் முத்திரையிடப்பட்ட பெறுகைகள் கோரப்படுகின்றன.**

1. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் **வலயக் கல்வி அலுவலகம் மன்னாரில்** கிடைக்கும் 'Application for Bid Documents' என்ற படிவத்தினைப் பூர்த்தி செய்து மீளளிக்கப்படாதபெறுகைக் கட்டணமாக ரூபா.**500** காசாக அலுவலக காசாளரிடம் செலுத்திப் பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் **23.12.2016** தொடக்கம் **05.01.2017** வரையான காலப்பகுதியில் 09.00 மணிதொடக்கம் 16.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
2. விலைக்கேள்விகள் **06.01.2017 ஆம்** திகதி **03.00**மணிக்கு முன்பதாக **வலயக் கல்வி அலுவலகம் மன்னாரின்** கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
3. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினை அலுவலக நேரங்களில் கணக்காளர் **வலயக் கல்வி அலுவலகம் மன்னார் அவர்களின்**தொலைபேசி இலக்கம் **023-4920670** உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
4. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்புக் கூட்டம் (Pre bid meeting) **2016.12.29** ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு **வலயக் கல்வி அலுவலகம் மன்னாரின்** கேட்போர் கூடத்தில் -இடம்பெறும்.
5. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர் / மாகாணக்கல்விப் பணிப்பாளர்,**
**திணைக்கள பெறுகைகள் குழு,**
**மாகாணக் கல்வித் திணைக்களம்,**
**வடமாகாணம்.**

**மாகாண தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப**
**கல்வி நிலையம் ( PICTEC)**
**ஒப்பந்த அடிப்படையில்**
**குத்தகைக்கு வழங்குதல் (சிற்றுண்டிச்சாலை)**
**01.02.2017 தொடக்கம் 31.12.2017 வரை**

**மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மரக்காரம்பளை வவுனியாவில் இயங்கிவரும் PICTEC இற்குரிய சிற்றுண்டிச்சாலை 01.02.2017 தொடக்கம் 31.12.2017 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கு மாகாணக்கல்வித் திணைக்கள திணைக்கள பெறுகைக் குழுவினால் முத்திரையிடப்பட்ட பெறுகைகள் கோரப்படுகின்றன.**

1. நாட்டமுள்ளவிலைக்கேள்விதாரர்கள் **வலயக் கல்வி அலுவலகம் வவுனியா தெற்கில்** கிடைக்கும் 'Application for Bid Documents' என்றபடிவத்தினைப் பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா**500** காசாக அலுவலக காசாளரிடம் செலுத்திப் பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் **23.12.2016** தொடக்கம் **05.01.2017** வரையான காலப்பகுதியில் 09.00 மணிதொடக்கம் 16.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
2. விலைக்கேள்விகள் **06.01.2017 ஆம்** திகதி **03.00** மணிக்கு முன்பதாக **வலயக்கல்வி அலுவலகம் வவுனியா தெற்கின்** கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
3. மேலதிக விவரங்களினை அலுவலக நேரங்களில் கணக்காளர் **வலயக் கல்வி அலுவலகம் வவுனியா தெற்கு அவர்களின்** தொலைபேசி இலக்கம் **024-2222026** உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
4. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்புக் கூட்டம் (Pre bid meeting) **2016.12.29** ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு **வலயக் கல்வி அலுவலகம் வவுனிய தெற்கின்** கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
5. கிடைக்கப் பெற்றவிலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியைமட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுப்பட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர் / மாகாணக்கல்விப் பணிப்பாளர்,**
**திணைக்கள பெறுகைகள் குழு,**
**மாகாணக் கல்வித் திணைக்களம்,**
**வடமாகாணம்.**

(சீ/27229)(11.17.18)

## பயனாளியின்...

நேற்றையதினம் பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

பொருத்து வீட்டுத் திட்டத்துக்கு- முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டுக்கு நாங்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளோம். மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தியுள்ளனர். மீள்குடியேற்ற அமைச்சுக்கு இன்னமும் செயலர் நியமிக்கப்படவில்லை. அப்படியிருக்கையில் மீள்குடியேற்ற அமைச்சின் செயலரைக் குறிப்பிட்டு நேற்று பத்திரிகைகளில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. யார் அந்தச் செயலர்? அது தெளிவுபடுத்தப்படவேண்டும்.

முக்கிய விடயங்களை நீக்கியே இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதாக நாங்கள் அறியக் கூடியதாக இருக்கின்றது. கல் வீட்டுக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை என்ற விடயமும், முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டுக்குத் தெரிவு செய்யப்படும் பயனாளி தனது பங்களிப்பாக 6 லட்சம் ரூபா வழங்கவேண்டும் என்பதுடன், அரசு 10 லட்சம் ரூபாவையும் வழங்கும் என்ற விடயமும் விளம்பரத்தில் நீக்கப்பட்டுள்ளது. மக்கள் இந்த விளம்பரத்துக்குச் செவிசாய்க்கத் தேவையில்லை. கல் வீடு வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டும் - என்றார். (த-5)

## ஐ.தே.க...

'ஃஸ்' என்றாலும், எவராலும் சுதந்திரக் கட்சியை ஒருபோதும் பிளவுப்படுத்த முடியாது.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

2017ஆம் ஆண்டு ஒரு முக்கியமான வருடம். ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து ஏற்படுத்திக் கொண்ட தேசிய அரசின் இரண்டாவது வருடப் பூர்த்தியாகும். 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் பின்னர் சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழுவின் தீர்மானத்துக்கு அமைய ஐக்கிய தேசியக் கட்சியுடன் தேசிய அரசு அமைக்கப்பட்டது. இது ஐக்கிய தேசியக் கட்சியின் அரசல்ல. சுதந்திரக் கட்சிக்கும் அரசில் சமவுரிமை உள்ளது.

2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தேசிய அரசில் தொடர்வதா அல்லது வெறியேறி தனிப்பட்ட ரீதியில் செயற்படுவதா என்று தீர்மானிப்போம். என்னை ஐக்கிய தேசியக் கட்சி வெளியேறுமாறு கூறுகிறது.

நாட்டு மக்களுக்கு 2017 ஆம் ஆண்டு முக்கியமாகும். புதிய அரசமைப்பு, புதிய தேர்தல் முறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல் வலுப்பெறவுள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் கட்டாயம் அடுத்த காலாண்டில் நடத்தப்படும் என்று ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவித்துள்ளார். எங்களுடைய நிலைப்பாடு அதுவே. தேர்தலானது புதிய முறையான தொகுதிவாரி முறைப்படியே நடத்தப்படும்.

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை முறி மோசடி விவகாரத்தை தேசிய அரசில் சுதந்திரக் கட்சி அங்கம் வகித்தமை காரணமாகவே வெளிச்சம் போட்டுக்காட்ட முடிந்தது. மத்திய வங்கி முன்னாள் ஆளுநரின் பதவி நீடிப்பும் சுதந்திரக் கட்சியின் எதிர்ப்பாலேயே நிறுத்தப்பட்டது. சுதந்திரக் கட்சியைப் பிளவுப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச செய்து கொண்டுள்ள உடன்படிக்கை தொடர்பில் பலமுறை தெரிவித்துள்ளதுடன், அவர் உடன்படிக்கை செய்து கொண்ட இடத்தையும் விவாதத்துக்கு வந்தால் தெரிவிப்பேன் எனக் கூறியிருந்தேன்.

சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தினால் மீண்டும் விகிதாசார முறைப்படியே தேர்தல் நடத்தப்படும் என்று ஐ.தே.க. பஸிலுக்கு உத்தரவாதம் கொடுத்தமையே குறித்த உடன்படிக்கை. என்றாலும், எவராலும் சுதந்திரக் கட்சியை ஒருபோதும் பிளவுபடுத்த முடியாது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் 2020 இல் சுதந்திரக் கட்சியின் அரசொன்றை அமைப்பதற்காக அனைத்துச் செயற்பாட்டையும் நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். சுதந்திரக் கட்சியில் உள்ள ஒருவர், இருவர் பசிலுடன் இணைந்துச் செயற்பட்டாலும் ஏனையவர்கள் சுதந்திரக் கட்சியை பிளவுப்படுத்த ஒருபோதும் இணக்கம் தெரிவிக்கமாட்டார்கள்-என்றார். (த-5)

## அபிவிருத்தி...

வட்டமாகத் தெரிவித்துள்ளது. அபிவிருத்திச் சிறப்பு ஏற்பாடுகள் சட்ட வரைவு, மாகாண சபைகளின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்ட வரைவு, புதிய அரசமைப்பின் ஊடாக மாகாண சபைகளுக்குக் கொடுக்கப்படும் அபிவிருத்தி அதிகாரங்களை மீளப் பெற்றுக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. இந்தச் சட்டத்தை வடக்கு - கிழக்கு மாகாண சபைகள் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று தமிழ் சிவில் சமூகத்தினர் எச்சரித்திருந்தனர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை வெளிப்படுத்திய அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன், இந்தச் சட்ட வரைவின் ஊடாக மாகாண சபையின் அதிகாரங்களுக்குப் பாதிப்பு ஏற்படும். மாகாண சபைகளின் அதிகாரங்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளன. அதனை மேலும் வலுவிழக்கச் செய்யக் கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அபிவிருத்தியை எதிர்க்கவில்லை. ஆனால் மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்படுவதை உருவப்படுவதை எதிர்க்கின்றது - என்றார். (த-5)

## நாடு...

தான விடயம். இவ்வாறு நல்லாட்சி அரசின் பங்காளிக் கட்சியான ஹெல உறுமய கூறியுள்ளது.

கொழும்பில் அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், அந்தக் கட்சியின் பேச்சாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புதிய அரசமைப்பின் ஊடாக மீளப் பெற்றுக் கொள்ள முடியாத வகையில் அதிகாரப் பரவலாக்கம் - பகிரல் மேற்கொள்ளப்படவேண்டும் என்று குறிப்பிடுகின்றது. 19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரம் ஏற்கனவே குறைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஆளுநரின் அதிகாரத்தையும் குறைப்பதற்குக் கூட்டமைப்பு சொல்கின்றது. மாகாணத்துக்கும் - கொழும்பு அரசுக்கும் இடையிலான ஒருங்கியைவுப் பட்டியலை நீக்குமாறு கூறப்பட்டுள்ளது. இவை ஆபத்தான விடயங்கள். நாட்டைப் பிரிப்பதற்கான வேலையைக் கூட்டமைப்பு சத்தமில்லாமல் செய்து கொண்டிருக்கின்றது என்றார். (த-5)

## தற்காலிக...

தற்காலிக கடவுச்சீட்டுவழங்கிப் பயணத்தை மேற்கொள்வதற்கு அனுமதிபெற்றுக்கொடுக்கப்படும்.

இவ்வாறு சிவசேனை அமைப் பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்திலிருந்து சிதம்பரத்தில் நடைபெறும் திருவெம்பாவை திருவிழாவின் இறுதி நாளான திருவாதிரை உற்சவதற்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. முதன் முறையாகக் காங்கேசன் துறையிலிருந்து நேரடியாக இந்தியாவின் காரைக்காலுக்குக் கப்பல் சேவை நடைபெறவுள்ளது. கடவுச் சீட்டு இல்லாதவர்களும் பயணத்தை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தற்காலிகக் கடவுச் சீட்டுக்கு, மேலதிகமாவட்ட செயலருடன்தொடர்புகொண்டு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம். எனவே கடவுச் சீட்டு இல்லாதவர்களும் தொடர்பு கொள்ள முடியும் - என்றார். (த-5-101)

## சிரிய...

தப்பட்டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையாக எழுந்து நின்று இரண்டு நிமிட நேரம் மௌன அஞ்சலியைச் செலுத்தினர்.

ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சிரியாவின் அலெப்போ, மியன்மாரில் தினமும் நடைபெறும் மனிதப் பேரவலம், 2009ஆம் ஆண்டு நாம் எதிர்நோக்கி மனிதப் பேரவலத்துக்கு ஈடானது. இவ்வாறான மனிதப் பேரவலம் நிகழ்வது வருந்தத்தக்க விடயமாகும் - என்றார். (த-5-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா நகர சபையை மாநகர சபையாக்க வேண்டும்

## வடக்கு உறுப்பினர் மயூரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.23
வவுனியா நகரசபையை மாநகர சபையாகத்தரம் உயர்த்த வேண்டும். மடு, ஒட்டுசுட்டான், மருதங்கேணி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுகள் தனிப் பிரதேச சபைகளாகப் பிரிக்கப்பட்டுத் தரமுயர்த்தப்பட வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் மயூரன் தெரிவித்தார்.

வட மாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தில் நேற்று முன்தினம் முதலமைச்சரின் அமைச்சுக்கள் தொடர்பான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடைபெற்றது.

அதில் உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியாக தெற்கு பிரதேச சபையிடம் நிதிகள் இருந்த போதும் தமிழ் பகுதிகளில் வீதிகள் திருத்தப்படாதுள்ளன. இயந்திரங்கள் இல்லை, கொள்வனவு செய்வதற்கு அனுமதி கோரப்பட்டபோதும் அனுமதி வழங்கப்படவில்லை.

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்யப்பட வேண்டும். நடமாடும் சேவைகள் ஊடாக அவர்களுக்குச் சுகாதார வசதிகள் கொடுக்கப்படவேண்டும் -என்றார். (ற-7)

# வயோதிபர்கள் இல்லத்தில் இணைப்பு

மழையால் குடிமனைகள் சேதப்பட்ட நிலையில் இருக்க இடம் இன்றி உணவின்றிச் சிரமப்பட்ட வயோதிபத் தம்பதிகள் உட்பட மூன்று வயோதிபர்கள் கைதடி அரச முதியோர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் இணைக்கப்பட்டனர். வடமராட்சி கிழக்கு வத்திராயனைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை ஜெயரூபன் (வயது- 66), ஜெயரூபன் சறோஜினிதேவி (வயது- 63), கந்தையா பொன்னம்மா (வயது 84) ஆகியோரே இல்லத்தில் இணைக்கப்பட்டனர். (ற-17)

குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

பாடசாலை விடுமுறைக் காலத்தைப் பயனுள்ளதாக்க சமுதாய சீரமைப்பில் புதியதோர் களப்பணி மனவளக்கலை யோக விஷேட பயிற்சிகள்

'கற்பிதமும் நிதர்சனமும்'

மாணவர்களின் ஆத்மாவுக்குள் இருந்து ஆசிரியர்கள் வழிநடத்துகிறார்கள். வருபொருளாகக் கொண்டு வாழ்கிற கொடைத்தொழில் ஆசிரியர் பணி முதல் முன் மாதிரிகளாக இருக்கக் கூடிய ஆசிரியர்களின் உடல்நலம், உளநலம் வளமான வாழ்வு சமூகப் புரிதலில் கற்பித்தலிலிருந்து நிதர்சனத்துக்கு வர மனவளக்கலை யோகா வழிகாட்டுகிறது. புதிய சமூக உருமாற்றத்துக்காக...

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குமான விசேட பயிற்சிகள்

இடம் :- யாழ்.அறிவுத் திருக்கோயில்
காலம் :- 24.12.2016 தொடக்கம் 29.12.2016
நேரம் :- பிற்பகல் 5 மணி

வழங்கப்படும் பயிற்சிகள்

1. காயகல்ப பயிற்சி
2. எளியமுறை உடற்பயிற்சிகள்
3. எளியமுறை தியானங்கள்
4. அகத்தாய்வுப் பயிற்சிகள்

தலைமை

மனவளக்கலை பேராசிரியர் **அருள்நிதி சி.முருகானந்தவேல்** அவர்கள்
(தலைவர், யாழ்.மனவளகலைமன்ற அறக்கட்டளை)

பயிற்சி வழங்குபவர்

மனவளக்கலை பேராசிரியர் **அருள்நிதி ச.இந்திரா** அவர்கள் - (தமிழ்நாடு இந்தியா)

அகத்தாய்வு I
24.12.2016, 25.12.2016 சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் ஒருமணி வரை நடைபெறும். இதில் PDC பயிற்சி முடித்தவர்கள் பங்குபற்றலாம். அகத்தாய்வு I முடித்த பயிற்சியாளர்களும் பங்குபற்றலாம்.

அகத்தாய்வு III
27.12.2016, 28.12.2016 செவ்வாய், புதன்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறும். I ஆம் நிலை அகத்தாய்வு முடித்தவர்களும் பங்குபற்றலாம்.

குறிப்பு:- வடத்தையர் புங்கைத்தீவு பாடசாலை மாணவர்கள் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். எனவே நீங்களும் மனவளக்கலை யோகாப் பயிற்சிகளைப் பயின்று பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்.அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுன் வீதி, கொக்குவில்,
யாழ்ப்பாணம் - 021 222 2772

(சீ/7033)(11,18)

யாழ்.மனவளக்கலை
மன்ற அறக்கட்டளை

ABI FASHION WORLD

நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு
எமது வாடிக்கையாளர்களுக்கு விசேட
விலைக்கழிவுகள்
15.12.2016 முதல் 31.12.2016 வரை



அனைத்து ஆடைத்
தெரிவுகளுக்கும் 30%வரையான
சிறப்பு விலைத்தள்ளுபடி!!

முந்துங்கள் ! தள்ளுபடி விலையில்
புடைவைகளை அள்ளிச்
செல்லுங்கள்.

+ 94 21 222 3738

abifashionworld

No. 112, K.K.S . Road, Jaffna.

ABI
Fashion World
Largest Textile SHOWROOM
in Jaffna

நத்தார், புதுவருடத்தை
முன்னிட்டு

இந்தியன் செலக்ஷனின்
மாபெரும் மெகா சேல்



அதிரடி விலைக்கழிவில் சகல விதமான
சாறிவகைகள், சல்வார், சல்வார்த் துணிகள்
மற்றும் ஆண், பெண், சிறுவர், சிறுமியர்
களுக்கான ஆடைத் தெரிவுகளுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்

இந்தியன் பஜாருக்கு

16/12/2016 முதல்
31/12/2016 வரை

உங்கள் தெரிவுகளுக்கு இன்றே முந்துங்கள் இந்தியன் பஜாருக்கு.

இடம்
வீரசிங்கம் மண்டபம்
யாழ்ப்பாணம்.

இந்தியன் செலக்ஷன்
கஸ்தூரியார் வீதி,
மாநகரசபைக் கட்டடத் தொகுதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் சந்தேகநபரின் முன்பிணை கோரிக்கையை நிராகரித்தது நீதிமன்று

யாழ்ப்பாணம், டிசெ. 23

உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய கூரிய ஆயுதங்களை உருவாக்கப் பணித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அச்சுவேலி பொலிஸ் நிலைய தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் நீதிமன்றில் கோரிய முன்பிணை நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டது. அவர் பொலிஸ் தலைமையகத்தினால் பணிநிறுத்தம் செய்யப்பட்டு விசாரணையிலுள்ளார் என்று பொலிஸாரினால் மன்றில் தெரிவிக்கப்பட்டது. இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட 2 பேரில் ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்டு மற்றொருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ஏ.ஜூட்சன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது தன் மீதான விசாரணை தொடர்வதால் தன்னைக் கைது செய்வார்கள் என்று கருதிய குற்றஞ்சாட்டப்படும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் அவ்வாறு தான் பணிபுரிந்த அச்சுவேலி பொலிஸார் தன்னைக் கைது செய்வதனைத் தடுக்கும் நோக்கில் சட்டத்தரணி ஊடாக மல்லாகம் நீதிமன்றில் முன்பிணை கோரி மனுத் தாக்கல் செய்திருந்தார். மனு மன்றில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது. அதற்குப் பதிலளிக்க வேண்டிய அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மன்றில் நேற்று முன்னிலையானார். தமிழ் பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிரான குற்றச்சாட்டுத் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என்று அவர் மன்றில் தெரிவித்தார்.

இந்த நிலையில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் சார்பில் முன்வைத்த முன்பிணை கோரும் மனுவை மன்று நிராகரித்தது.

**பின்னணி**

குற்றச்சாட்டு ஒன்றில் தொடர்புடையதாகக் கூறப்படும் நபர் அச்சுவேலியில் இரும்புப் பொருள்கள் உருவாக்கும் நிலையம் ஒன்றில் பணிபுரிகிறார். சில வாரங்களுக்கு முன்னர் குறித்த தொழில் நிலையத்துக்குச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் தனது சொந்தச் தேவைக்கு என்றுகூறி வாள்கள், கைக்கிளிப்கள் (நக்கீல்ஸ்கள்) போன்ற கூரிய, பயங்கரமான, உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய இரும்பாயுதங்களை உருவாக்கினார்.

அதில் ஒன்றை அந்த இரும்புப் பொருள்கள் உற்பத்தி நிலையத்தில் பணிபுரியும் நபரிடம் கொடுத்து அச்சுவேலியிலுள்ள கறாஜ் ஒன்றினுள் வைக்குமாறு பணித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்த விடயம் முன்னர் தெரியவராத நிலையில்தான் அச்சுவேலி பொலிஸாருக்குத் தகவல் ஒன்று சென்றுள்ளது. அவ்வாறு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கறாஜ்ஜில் வைத்து 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் குறித்த உயிராபத்தான ஆயுதங்களை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. எனினும் அதற்கு அவர்கள் மட்டுமன்றி அவர்களது குடும்பத்தினரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து பெரும் பிரச்சினையாக உருவெடுத்த நிலையில், மற்றொருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தியபோது உண்மை தெரியவந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி 5 பேரும் விடுவிக்கப்பட்டு இரும்புப் பொருள்கள் உற்பத்தி நிலையத்தில் பணிபுரியும் 2 பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். குறித்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தரே அவற்றைச் செய்து தருமாறு கூறியதாகத் தொழிலாளிகள் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

அதன்படி குறித்த தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் இடமாற்றம் செய்யப்பட்டு பின்னர் பொலிஸ் தலைமையகத்தால் பணிநீக்கம் செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (வ-4)

# தகனம் செய்யத் தயாராக இருந்த இளைஞனின் சடலம் புதைப்பு

*நீதிமன்றத்தின் உத்தரவை அடுத்து*

யாழ்ப்பாணம் ,டிசெ. 23

தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்வதற்காகத் தயார் நிலையில் வீட்டில் வைக்கப்பட்டிருந்த சடலம் இறுதி நேரத்தில் மல்லாகம் பதில் நீதிவானின் உத்தரவுக்கமையப் புதைக்கப்பட்டது.

மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் சம்பவம் சுதுமலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றித் தெரியவருவதாவது:

சுதுமலை தெற்கு மாவடி வீதியைச் சேர்ந்த விமலேஸ்வரன் சுரேஸ் என்னும் 19 வயதுடைய இளைஞன் கடந்த திங்கட்கிழமை மானிப்பாயில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பயனின்றி மறுநாள் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

இவரின் சாவு குறித்து யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற மரண விசாரணையைத் தொடர்ந்து அன்று மாலை சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவரின் சடலம் நேற்று முன்தினம் புதன்கிழமை தாவடி இந்து மயானத்தில் தகனம்செய்வதற்காகச் சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டதுடன், மயானத்தில் எரிகொட்டகையில் விறகும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மல்லாகம் பதில் நீதிவானின் உத்தரவுக்கமைய சடலத்தை எரியூட்டாமல் புதைக்குமாறு மானிப்பாய் பொலிஸார் மூலம் பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டது. இதையடுத்து சடலம் தாவடி மயானத்தில் புதைக்கப்பட்டது. (த-115)

## யாழ். போதனா வைத்தியசாலையில்

# அதிநவீன சத்திரசிகிச்சைப் பிரிவை நிறுவவிடாது சிலர் குழப்புகின்றனர்

## வடக்கு மாகாண சபையில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 720 மில்லியன் ரூபா செலவில் அமையவுள்ள அதிநவீன சத்திரசிகிச்சைப் பிரிவு உள்ளடங்கிய கட்டடத் தொகுதியை நிர்மாணிக்கவிடாது சிலர் குழப்புகின்றனர். வடக்கு மாகாண மக்களுக்கு பயனளிக்கக்கூடிய இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இதில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தலையிட வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ். சுகிர்தன் சபையில் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட விவாதம் கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் நேற்று இடம்பெற்றது. சுகாதார சுதேச மருத்துவம் மற்றும் நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சுக்கள் தொடர்பான ஒதுக்கிட்டு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

'அதிநவீன சத்திர சிகிச்சைக் கூடமும் மருத்துவ பீட மாணவர்களுக்கான கற்றல் கூடமும் சேர்ந்த தான கட்டடத் தொகுதி வெளிநாடுகளின் 720 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அமையவுள்ளது. அது ஒரு நல்ல விடயம். அதனைச் சில மருத்துவ நிபுணர்கள் தேவையில்லை என்று சொல்லி எதிர்க்கின்றார்கள். அவ்வாறு அது வராவிட்டால் பாதிப்பை நாங்கள்தான் உணரவேண்டிவரும்.

எனவே அதில் தலையிட வேண்டிய பொறுப்பு வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு இருக்கின்றது. அதனைக் கொழும்பு அரசு செய்வதாக இருந்தாலும் அது எங்களுக்குரியது. அது திரும்பிச் சென்றால் வடக்கு மக்களுக்குத்தான் இழப்பு. அதனால் ஏற்படக்கூடிய நன்மைகள், தீமைகளை வடக்கு சுகாதார அமைச்சர் ஆராய்ந்து அதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான பெரிய திட்டங்கள் வரும்போது ஒருசில எதிர்ப்பால் திரும்பிச் சென்றால் ஒட்டுமொத்தமாக வடக்கு மக்களின் பாதிப்பாகவே அது அமையும்' என்று எஸ்.சுகிர்தன் தெவித்தார். (வ-4,7)

# தெரிவை முன்வைக்காமல் வீட்டுக்கு விண்ணப்பமா?

*ஏற்கமுடியாது என்கிறார் சுமந்திரன்*

யாழ்ப்பாணம், டிசெ. 23

கல் வீடா அல்லது முன்நிர்மாணிக்கப்பட்ட வீடா என்ற தெரிவை மக்களிடம் கொடுக்காமல் விண்ணப்பங்கள் கோரப்படுவது பொருத்தமானது அல்ல. இது அமைச்சரவைத் தீர்மானத்துக்கு ஏற்றதாகவும் அமையாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

'கல் வீடு வேண்டுமா அல்லது முன்நிர்மாணிக்கப்பட்ட வீடா என்று மக்களிடம் தெரிவு கொடுக்கவேண்டும். வீடு வேண்டும் என்றால் மக்கள் எல்லோரும் வீடு வேண்டும் என்றுதான் சொல்வார்கள். முன்நிர்மாணிக்கப்பட்ட வீடு வேண்டும் என்றால், அதற்கும் சம்மதிப்பார்கள். மக்களுக்குத் தெரிவை முன் வைக்க வேண்டும்' என்று அவர் குறிப்பிட்டார். (த-5)

# விபத்தில் காயமடைந்த குடும்பத்தலைவர் சாவு

விபத்தில் காயமடைந்து யாழ்.போதான வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஐந்து பிள்ளைகளின் தந்தை சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கோண்டாவில் டிப்போவுக்கு முன்னால் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் உரும்பிராயைச் சேர்ந்த சரவணமுத்து சிறிதரன் (வயது - 54) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவதினமன்று மாலை மண்ணெண்ணெய் வாங்குவதற்காக சென்றபோது வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து இடம்பெற்றது. படுகாயமடைந்த நிலையில் யாழ். போதான வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த அவர், நேற்றுக்காலை 7.30 மணியளில் உயிரிழந்தார்.

பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4,7)

# அனைத்து அமைச்சுக்களும் பங்குபற்றும் நடமாடும் சேவை ஏப்ரலில் முல்லைத்தீவில்

முல்லைத்தீவு, டிசெ. 23

நாட்டில் தற்போது மாவட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் ஜனாதிபதி நடமாடும் சேவையானது முல்லைத்தீவு மாவட்டத்தில் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் சேவையில் நாட்டிலுள்ள 53 அமைச்சுக்களினது சேவைகள் உட்பட அனைத்துச் சேவைகளும் ஒருங்கிணைத்து மக்களுக்கு வழங்கப்படும் என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களின் கீழ் கடமையாற்றும் கிராம அலுவலகர்களுக்கான அலுவலகப் பைகள் மற்றும் உத்தியோகபூர்வ இலட்சினை வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்றுமாலை இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'கடந்த காலத்தில் கிழக்கு மாகாணத்தில் கருணா அம்மான் தனது தேவைகளை நிறைவேற்றினாரே தவிர, மக்களுக்கான பணிகளையோ அபிவிருத்திகளையோ செய்யத்தவறிவிட்டார். மக்களுக்குச் சேவை செய்யும் அரச பணியாளர்கள் அனைவரும் தத்தமது கடமைகளை நேர்த்தியாகச் செய்ய வேண்டும். எந்தவொரு அரசியல்வாதிகளினது அழுத்தங்களுக்கும் அடிபணியாது கடமையாற்ற வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு நான் உத்தியோகத்தர் பக்கம் துணை நிற்பேன்' என்று அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்தார். (வ-4,102)

# உணவக உரிமையாளரின் மகன் மீது கும்பல் தாக்குதல்

*வவுனியா நகரில் புதனன்று சம்பவம்*

வவுனியா, டிசெ. 23

வவுனியா நகர உணவகத்துக்குள் புகுந்த 8 பேர் கொண்ட கும்பல், உணவக உரிமையாளரின் மகன் மீது தாக்குதல் நடத்தியது. தாக்குதலுக்குள்ளாகியவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 2 பேர் பேருந்துடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வவுனியா கண்டி வீதி, பேருந்து நிலையத்துக்கு அருகிலுள்ள உணவகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

'தேநீர் கொடுப்பதில் ஏற் பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து சம்பவம் இடம்பெற்றதாக ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அந்த இளைஞன் மீது தாக்கியதோடு, ஒயிலும் ஊற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தாக்குதலாளிகள், குறித்த இளைஞனைச் பேருந்து ஒன்றில் ஏற்றிக் கொண்டு சூடுவெந்தபுலவுக்குச் சென்றுள்ளனர். தாக்கப்பட்டவரின் சகோதரன் அந்தப் பேருந்தைப் பின்தொடர்ந்து சென்று பேருந்துக்குள் ஏறியுள்ளார். அதன்போது இருவரையும் கீழே தள்ளிவிட்டுத் தாக்குதலாளிகள் தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதலுக்குள்ளான வவுனியா பூந்தோட்டம் சிறிநகரைச் சேர்ந்த தர்மலிங்கம் சுபராஜ் (வயது - 26) வவுனியா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டார்.

தாக்குதல் குறித்துப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. சந்தேகத்தில் 2 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சம்பந்தப்பட்ட பேருந்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறது' என்று பொலிஸார் தெரிவித்தனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் நாள் கடைப்பிடிக்க தமிழருக்கு உரிமை உண்டு

## பூநகரில் தெரிவித்தார் அமைச்சர் வஜிர

கிளிநொச்சி, டிசெ. 23

'மாவீரர்தினம் கடைப்பிடிக்கலாமா என்ற கேள்வி சிலருக்கு உள்ளது. ஆனால் நீங்கள் மாவீரர் தினம் கடைப்பிடிக்க முடியும். அதில் மாற்றுக் கருத்து இல்லை'

இவ்வாறு பூநகரியில் தெரிவித்தார் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன.



கிளிநொச்சி, பூநகரி வாடியடிச் சந்தியில் அமைந்துள்ள என்றிப் திட்டத்தின் 14 மில்லியன் ரூபாவிலும், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 60 மில்லியன் ரூபாவிலும் அமைக் கப்பட்ட புதிய பிரதேச செயலக கட்டடத்திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. அதனைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாவீரர் தினம் கொண்டாடுவது தொடர்பில் சிலர் கவலைப்படுகிறார்கள். மாவீரர்தினத்தை கொண் டாடமுடியும். 71, 87 மற்றும் 88ஆம் ஆண்டுகளில் தெற்கில் இடம்பெற்ற கலவரங்களின் போது இழப்புக்கள் ஏற்பட்டன. அதில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி நிகழ்வைக் கொண்டாடுகின்றார்கள். எமது மதத்தின் படி இறந்ததன் பின்னர் அனைத்து உறவுகளுக்கும் மரியாதை செலுத்த வேண்டும். இறந்தற்குப் பின்னர் நல்லவனா கெட்டவனா என்பதெல்லாம் தேவையில்லை. எல்லா மனிதர்களுக்கும் மரியாதை செலுத்த வேண்டும் என்றே எமது மதம் எமக்குச் சொல்கிறது.

இந்தப் பிரச்சினைகளைப் பொலிஸார் மீதோ முப்படைகளின் மீதோ இராணுவ அமைப்புக்களின் மீதோ அல்லது அரசியல் வாதிகளின் மீதோ திணிப்பது நல்லதல்ல. உண்மையில் நாங்கள் மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும் - என்றார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கும் அவர் பயணம் மேற்கொண்டு மாவட்டச் செயலாளர் மற்றும் உத்தியோகத் தர்களைச் சந்தித்து கலந்துரையாடினார். கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அங்கு அமைச்சர் தெரிவித்தார்.

(வ-4,35)

# நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்ப்பாணம் பெட்டக நிழலுருக் கலைக்கூட வெளியீடான மார்க்கண்டு அருட்சந்திரன் எழுதிய ஆளுமைகள் மற்றும் வணக்கத்தலங்கள் ஆகிய இரண்டு நூல்கள் வெளியீட்டு நிகழ்வு நாளை மு.ப.9 மணிக்கு யாழ்ப்பாணம் சரஸ்வதி மஹால் (ராஜா கிறீம் ஹவுஸ்) மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக முதன்மை நூலகர் சிறி காந்தலட்சுமி அருளானந்தம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தின ராக யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக தென்னிந்திய தமிழ் திரை இசையமைப்பாளர் ஆர்.என். வசந்த்தும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரத்தினம் காவேரி கலாமன்ற இயக்குநர் சபை உறுப்பினர் ரஞ்சன் சிவபாத சுந்தரம் அன்ட்றா பிறிண்டேர்ஸ் நிறுவன பணிப்பாளர் த.ரஜீவன் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள்.

வாழ்த்துரைகளை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கன், மாகாண கல்வி அமைச்சின் செய லாளர் இ.இரவீந்திரன் ஆகியோர் நிகழ்த்துவர்.

நூல்களின் அறிமுகவுரையினை யாழ்ப்பாண பெட்டக ஆலோசகர் பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரனும் வெளியீட்டுரையினை காவேரி கலா மன்ற இயக்குநர் வண.ரி.எஸ்.யோசுவா அடிக ளும் ஆய்வுரையினை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறை பேராசிரியர் எஸ்.சிவ லிங்கராஜா யாழ்.பல்கலைக்கழக ஊடகத் துறை மூத்த விரிவுரையாளர் சி.ரகுராம் ஆகி யோரும் சிறப்புரையினை இசையமைப்பாளர் ஆர்.என்.வசந்த்தும் நிகழ்த்துவர்.

முதற்பிரதியினை காவேரி கலாமன்ற இணை இயக்குநர் திருமதி ரேணுகா சிவஞானசுந்தரம் பெற்றுக் கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ- 9)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சி, டிசெ. 23

தென்மராட்சி கல்வி வலய முறைசாரக் கல்விப் பிரிவினரால் நடத்தப்பட்ட தொழிற்கல்வி பயிற்சி நெறிகளை நிறைவு செய்தவர்களின் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தலும் சான்றிதழ் வழங்கல் நிகழ்வும் எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

தென்மராட்சி கல்வி வலய முறைசாராப் பிரிவினரால் பாட சாலைக் கல்வியை நிறைவு செய்த இளையோருக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், கச்சாய் அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் நடத்தப்பட்ட தையல் பயிற்சி, கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி. உசன் இராமநாதன் ம.வி.ஆகியவற்றில் நடாத்தப்பட்ட கணினி பயிற்சி, மிருசுவில் அ.த.க.பாடசாலை யில் நடத்தப்பட்ட தோற்பொருள்கள் உற்பத்திப் பயிற்சி, மட்டு வில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட கேக் ஐசிங் மணப்பெண் அலங்காரம் போன்ற பயிற்சிகளை நிறைவு செய்தவர்களால் ஆக்கப்பட்ட பொருள்களே காட்சிப் படுத்தப்படவுள்ளன வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமை யில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்து சிறப்பிப்பதுடன் நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக வேள்ட் விசன் நிறுவன சாவகச்சேரி பிரதேச திட்ட இணைப்பாளர் த.வசந்தநாய கம் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# மூத்த கலைஞர்கள் கௌரவிப்பு இன்று

முல்லைத்தீவு, டிசெ. 23

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலக குமுழமுனை மத்திய கிராம அலுவலகர் பிரிவில் உள்ள சனசமூக நிலை யத்தில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு மூத்த் கலை ஞர்கள் கௌரவிப்பு நிகழ்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

குமுழமுனைக் கிராமத்தில் சமூக சேவையில் ஈடுபட்டு கலை கலாசரங்களை பேணும் முகமாக கலை இலக்கியங்கள் படைத்த பதினொரு மூத்த கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன், கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் சி. குணபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-7)

# மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வு இன்று

யாழ்ப்பாணம்,டிசெ. 23

கைதடி, நுணாவில் அ .த..க.பாடசாலை மாணவர் நாடாளுமன்ற ஆரம்ப நிகழ்வு நிகழ்வும் பதவியேற்பு நிகழ்வும் இன்று பி.ப.3 மணிக்கு பாடசாலை மண்டபத் தில் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டது.

பாடசாலை அதிபரும் மாணவர் நாடாளுமன்ற செயலாளர் நாயகமுமான ஆ. தங்கவேலு தலைமையில் நடை பெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட சமுதாயமற்றும் குடும்ப மருத்துவத் துறைத் தலைவர் ஆர்.சுரேந்திரநாதன் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வு கடந்த முதலாம் திகதி நடைபெறவிருந்த போதிலும் அன்றைய தினம் இடம்பெற்ற காலநிலை மாற்றத்தினால் பின்போடப்பட்டது என்று பாடசாலை அதிபர் ஆ.தங்கவேலு தெரிவித்தார். (வ- 9)

# கடற்றொழில் பரிசோதகர்களை உடனடியாக நியமிக்கவேண்டும்

## யாழ். மீனவர் அமைப்புக்கள் அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்.மாவட்டத்தில் கடற்றொழில் பரிசோதகர் பதவிக்கான 10 நியமனங்கள் வெற்றிடமாகக் காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும் என யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்பின் சம்மேளனம் கடற்றொழில் அமைச்சர் மகிந்த சமரவீரவிடம் கோரிக்கை விடுத்தது.

தகுதிகாண் விஞ்ஞானப் பட்டதாரிகள் இல்லாமல் இருப்பதே இந்தப் பதவிக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன. இந்தப் பதவி நிலைக்குரிய பட்டதாரிகள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் இந்த நியமனங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சர் மகிந்த சமரவீரவுடன் யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகளின் சந்திப்பு கடற்றொழில் அமைச்சின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. மேலும் அந்தச் சந்திப்பில் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக பல விடயங்கள் ஆராயப்பட்டு கோரிக்கை விடுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இதுவரை காலமும் பதிவு செய்யப்படாத ஏராளமான படகுகள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இதனை சிறப்புத் திட்டம் ஒன்றிற்குள் உட்படுத்தி விரைவாக பதிவு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

யாழ். கடல் நீரேரியில் சட்டத்திற்கு முரணான விதத்தில் இறால், கூடு முறையில் பிடிக்கப்படுகிறது. இதனை நிறுத்த வேண்டும். அத்தோடு இந்த தொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்காதபடி அவர்களுக்கு மாற்று தொழிலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். ஆழ்கடல் மீன்பிடிக்கு ஏற்ற வகையில் உபகரணங்கள் வழங்க வேண்டும். பருத்தித்துறை இறங்கு துறைமுகம் சீரமைக்கப்பட வேண்டும். காரைநகர், குருநகர், நெடுந்தீவு பிரதேசங்களில் நங்கூரம் இடும் தளம் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறான கோரிக்கைகள் அமைச்சருக்கு முன்வைக்கப்பட்டன.

இந்தச் சந்திப்பில் கடற்றொழில் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி மு.றெமிடியஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ-10, ரி)

# ஒளி விழாவும் பணியாளர் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் ஒளி விழா மற்றும் பணியாளர் கௌரவிப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை மு.ப.11 மணிக்கு சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட் டது.

சங்கத்தலைவர் மு.ஜெ.சுஜிந்திரன் தலைமையில் இடம் பெறும் நிகழ்வில் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொன். மோகன் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பதுடன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.கபிலன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நிகழ்வில் புனித யாகப்பர் ஆலய உதவி பங்குத் தந்தை அருட்பணி மௌலீஸ் அடிகளார் ஆசியுரை வழங்குவார். கிறிஸ்து பாலன் பிறப்பை முன்னிட்டு நடன நிகழ்வைத் தொடர்ந்து கிளை நிலையங்களில் அதி கூடிய விற்பனையை மேற்கொண்ட பணியாளர்கள் கௌரவிப்பு மற்றும் சிறுவர்க ளுக்கான பரிசில் வழங்கல் என்பன இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-17)

# அருளுரை

யாழ். சின்மயா மின் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவினால் இன்று வெள்ளிக்கிழமை ஆன்மிக அருளுரை நடைபெறவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணி மண்டபத் தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை ஆன்மிக அருளுரை நடத்தப்பட்டு வருகின்றது.

இதன் ஓர் அம்சமாக இன்று வெள்ளிக்கிழமை இலக்கைஅடையமறுபிறப்பெடுத்துத் தவம் செய்ய வேண்டும் எனும் தலைப்பில் ஆன்மிக உரை நடைபெறவுள்ளது. (வ-10)

# ஒளிவிழா

தென்மராட்சி கல்வி வலய ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஒளிவிழா எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு கல்வி வலய கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

(வ-9)

# பொதுக் கூட்டம்

மாங்குளம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங் கத்தின் பொதுக் கூட்டம் நாளை பி.ப. 2 மணிக்கு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. மாங்குளம் மகாவித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற இருப்பதால் அனைத்து பழைய மாணவர்களை யும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. (வ-7)

# சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடு வடமாகாண சபையில் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 23

வடக்கு மாகாண சபையின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டதில் மாகாண சுகாதார சுதேச மருத் துவம் மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு சபையின் பாராட்டுக்களுடன் நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண சபையில் நேற்று மாலை அமைச் சரால் 2017ஆம் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பான வரவு செலவுத்திட்டத்தை முன்மொழிந்து அதனை சபை ஆராய்வதற்காக முன்வைத்தார். அதனைத் தொடர்ந்து சபையினரால் நிறைகுறைகளை சுட்டிக்காட்டியிருந்தனர். அது வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவரால் வழிமொழியப்பட்டதுடன் சபையினால் ஒப்புதல் வழங்கப்பட்டு நிறைவேற் றப்பட்டது. (வ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுநீரகம் தேவை**

46 வயதுடைய ஆண் நோயாளிக்கு B+ சிறுநீரகம் உடனடியாக தேவை. O+/O- சிறுநீரகம் உடையோரும் தொடர்பு கொள்ளலாம்.

**077 926 9628**

(C 27181) (22,18)

**வீட்டுப்பணிப்பெண் தேவை**

கொழும்பு-5 இல் உள்ள வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய. வயது 35 இற்கு மேல். சம்பளம் 20,000 மேல்

**077 226 8825**

(C 27180) (22,18)

**வீடு வாடகைக்கு**

கிளிநொச்சி, இரத்தினபுரத்தில் 3 அறைகள், சமையலறை, விறாந்தை மற்றும் இணைந்த குளியலறையுடன் வீடு வாடகைக்கு உண்டு.

**077 915 2223**

**வீடு வாடகைக்கு**

சாவகச்சேரி பொதுவைத்தியசாலைக்கு அருகில் மூன்று அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. குடும்பத்திற்கு அல்லது சிறியரக அலுவலகத்திற்கு வாடகைக்கு விடப்படும்.

**தொடர்பு: 071 576 3770**

**வாடகை அடிப்படையில்**
**வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்**
**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வட மாகாணம்**

மாகாணக் கல்வித் திணைக்களப் பாவனைக்கு உற்பத்தி ஆண்டு 1998 அல்லது அதற்கு பிற்பட்ட வாகனங்கள் (Van) மூலதன வேலைகளை மேற்பார்வை செய்வதற்கு 05 மாவட்டங்களுக்கும் 11 வாகனங்களும் மற்றும் மாகாணத்திற்கு 02 மாக மொத்தம் 13 வாகனங்கள் (Van) தனித்தனியாக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு ஆர்வமுடைய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில் மேலதிக விவரங்களினை மாகாணக் கல்வித் திணைக்களம் மருதனார்மடம், சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிட்டு 23.12.2016 - 05.01.2017 வரை அலுவலக நேரத்தில் நிதிக்கிளையில் ரூபா 500.00 (மீளபெறாத தொகையினை) செலுத்தி கேள்விப் பத்திரத்தினைப் பெற்று 2017.01.06 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னராக எமக்குக் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் (பிரதம கணக்காளர் மாகாணக் கல்வித் திணைக்களம் , வடமாகாணம்.)

**021 224 2804**

**தலைவர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடமாகாணம்,**
**மருதனார்மடம், சுன்னாகம்.**

**ST.JOHN'S COLLEGE, JAFFNA**

TVEC

**St. John's College Continuing Education and St.John's Academy & School of Technology**

G.C.E O/L = NVQ 3
G.C.E A/L = NVQ 4

**Sitting for the O/L Exam this year? Not so confident about passing it? Performed poorly in the Advanced Level results and your future appears to be bleak and dull?**

**St. John's College Continuing Education and St.John's Academy & school of technology are now a registered institute of the Tertiary and Vocational Education Commission to offer NVQ courses. Now you can climb up the NVQ ladder step by step and earn a degree even before your fellow classmates!**

**Register for the following courses before the 31st of December 2016. Classes will begin from the first week of January 2017.**

- Diploma in Pre and Primary School Teacher Training
- Introduction to Working in an Office
- Certificate in Building Career Skills
- Certificate in Advancing Career Skills
- Certificate in Sinhala Language
- Computer Hardware Technician
- Electrical Wiring
- Plumbing

For more details, contact, the Principal of St. John's College, Jaffna on 021 222 2432 or sjcjaffna@gmail.com,
Director St.John's Academy & school of technology on 0212216006,
stjohnsacademy@sltnet.lk

**தவறிவிட்டது**

சோ.கரன் என்பவரது சாரதிஅனுமதிப்பத்திரம், காப்புறுதி அனுமதிப்பத்திரம் மோட்டார்சைக்கிள் அனுமதிப்பத்திரம் என்பன 20.12.2016 செவ்வாய்க்கிழமை பகல் 12.00 மணியளவில் பருத்தித்துறை வீதி, கோப்பாய் சந்திக்கும் இலங்கை வங்கிக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**077 855 0341/ 077 814 7367**

**MAJESTIC CINEPLEX** A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கிள்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம்
10.00 / 1.00 / 7.00 / 9.30    4.00 p.m



சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
ப்ரொன்ஸ் 10.30 / 1.30 / 4.30 / 7.30

விசாரணை ☏ 021- 2227712

facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

**க.பொ.த. (உ/த - 2019), London A/L - 2017/2018**
**புதிய மாணவர்களுக்கான அனுமதி**

தரம்: 12 இற்கும் - (A/L - 2019 Batch) ஆங்கிலமொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) தமிழ்மொழி மூலம், (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்,கலை, தொழிநுட்பவியல்) London A/L - 2017/2018 இற்கும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப் பரீட்சை 02.01.2017 திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 04.01.2017 ஆரம்பமாகும்.

**அதிபர், சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.**
**021 222 2432**

**மணமகன் தேவை**

வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1973 இல் பிறந்த உத்தர நட்சத்திரம் முதலாம் பாதம் சிங்கராசி செவ்வாய்க் குற்றம் இல்லாத சங்கீத பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. விவாகரத்துப் பெற்றவர்கள் தாரம் இழந்தவர்கள் விரும்பப்படமாட்டாது. அரசநிறுவனம், தனியார் நிறுவனம், கடை முதலாளிமார் விரும்பத்தக்கது.

**076 627 5362, 076 662 6712**

**VACANCY**

Vacancies exist for highly energetic, hard working youth to joint MAAAS Engineering Enterprises.

TECHNICAL OFFICER

The candidate should posses;

- NCT/HND or equivalent in Civil
- 3 years experience in buildings
- Experience in costing Materials, Labour
- Experience in Labour controlling

STORE KEEPER

The candidate should posses;

- Pass GCE O/L
- Similar experience will be added advantage

Email your CV to careers.maaas@gmail.com

Shortlisted candidates will be call for an interview.

DIRECTOR
MAAAS ENGINEERING ENTERPRICES
26, Brown road, Jaffna.
Tel: 021 222 0434

(J 7065) (22,18)


# விடுவிக்கப்பட்ட வலி. வடக்கில் விவசாய வனவியல் கிராமங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 23

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் விவசாய வனவியல் கிராமங்களை உருவாக்கும் வேலைத்திட்டத்தை யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது என விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

இதுகுறித்து தெரிவிக்கப்பட்டதாவது:

இந்த வேலைத்திட்டத்துக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியாக ஒரு லட்சத்து 54 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டது. தையிட்டி தெற்கு, பளை, வீமன்காமம் வடக்கு, மாவிட்டபுரம் தெற்கு ஆகிய கிராமங்களில் 150 விவசாயக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு குடும்பத்துக்கும் நெல்லி, கொய்யா, மாதுளை, ஒட்டுப்பலா, முருங்கை, சண்டி, தேசி, யம்பு, ஒட்டுமா போன்ற மரக்கன்றுகளை உள்ளடக்கித் தலா 14 மரக்கன்றுகள் வீதம் 2ஆயிரத்து 100 கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 8 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டு 4.5 ஏக்கர் விஸ்தீரணத்தில் பப்பாசிச் செய்கையை மேற்கொள்வதற்கு வித்தகபுரம் கிராமத்தில் 50 பயனாளிகளுக்குத் தலா 36 பப்பாசி கன்றுகள் வீதம் ஆயிரத்து 800 பப்பாசிக் கன்றுகள் வழங்கப்பட்டன.

பலாலி தெற்கு வசாவிளான்கிழக்கு போன்ற விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உருளைக்கிழங்கு செய்கையை மேம்படுத்தும் நோக்கில் உருளைக் கிழங்கு செய்கையில் அனுபவம் வாய்ந்த 40 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுதலா கால் ஏக்கர் விஸ்தீரணத்தில் உருளைக்கிழங்குசெய்கையை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. 200 கிலோ விதை உருளைக்கிழங்கு வீதம் 8 மெற்றிக்தொன் விதை உருளைக் கிழங்குகள் 50 வீத மானிய அடிப்படையில் தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழும், மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழும் வழங்கப்பட்டன. மீளக்குடியமர்ந்த விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு விவசாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.- என்றுதெரிவிக்கப்பட்டது.

(ŋ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சான்றிதழ் வழங்கலும் கிறிஸ்மஸ் நிகழ்வும்

வவுனியா, டிசெ.23
வவுனியாவில் இயங்கிவரும் யூரோபன் லங்வேஜ் தனியார் சர்வதேச கற்கைமொழி பயிற்சி நிலையத்தின் மூன்றாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கிறிஸ்மஸ் சிறப்பு நிகழ்வும் கடந்த செவ்வாய்க்கிழமை இறம்பைக்குளம் விருந்தினர் விடுதியில் நிர்வாக இயக்குநர் கே. வின்சட் தலைமையில் நடைபெற்றது.
அதில் அந்த நிறுவனத்தில் சர்வதேச மொழியை பயின்ற 28 மாணவர்களுக்கு சர்வதேச தர சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. கிறிஸ்மஸ் சிறப்பு நிகழ்வும் இடம்பெற்றது.
நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் திருமதி ஜி. நடராசா, போதகர்களான ஜெயசீரன், றோலன்ஸ், சரத்குமார், நிறுவனத்தின் பணியாளர்கள் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர். சர்வதேச மொழியைப் பயின்ற மாணவர்களின் அனுபவப் பகிர்வுகள், கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ற-21)

# தென்மராட்சி பிரதேச சபை ஒளிவிழா

தென்மராட்சி, டிசெ. 23
தென்மராட்சி பிரதேச செயலக ஒளிவிழா நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றன.
நிகழ்வில் செல்வி தி.ஷியானாவின் வரவேற்பு நடனம், செல்வி பி.பிரதீபாவின் தனி நடனம், பிரதேச செயலக அலுவலர்களின் குழுப்பாடல், சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் தேவாலய மாணவிகளின் நடனம், சாவகச்சேரி அசெம்பிளி ஒவ் கோட் சபையின் குழு நிகழ்வு, செல்விகள் ம.பத்மிதா சி.ஜெரேதமியா ஆகியோரின் நடனம், பிரதேச செயலக அலுவலர் திருமதி ஜெ.ஜெயந்தியின் தனிப்பாடல், கனகன் புளியடி அசெம்பிளி ஒப் கோட் சபையின் குழு நடனம், சாவகச்சேரி புனித லிகோரியார் பங்கு மக்களின் நாடகம், பிரதேச செயலக அலுவலர் ந.அகிலனின் தனிப் பாடல், சாவகச்சேரி கானான் சபையின் குழு நடனம், செல்வி ஞா.சர்மிளாவின் தனிப் பாடல் என்பன நடைபெற்றன.
வரவேற்புரையை பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர் திருமதி அ.மதுராந்தகனும், நன்றியுரையை வாழ்வின் எழுச்சிப் பிரிவின் தலைமையக முகாமையாளர் இ.அன்ரனியும் நிகழ்த்தினர். நிறைவில் கிறிஸ்மஸ் தாத்தா அனைவருக்கும் பரிசில்களை வழங்கினார்.
பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி கத்தோலிக்க பங்குத் தந்தை அருட்பணி யோசப் பிரான்சிஸ் அடிகள், தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி தேவாலய போதகர் ஜெபநேசன் அடிகள், கானான் சபை அசெம்பிளி ஒவ் கோட் ஆகியவற்றின் போதகர்கள், கத்தோலிக்க மாகாண தலைவி மத குருமார் கன்னியாஸ்திரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ற-9)



## வாழ்வாதார உதவித் திட்டங்களுக்கான

# பயனாளிகள் தெரிவில் பொறிமுறை அவசியம்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 23
வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள், அமைச்சுக்களால் வழங்கப்படும் வாழ்வாதர உதவித் திட்டத்தில் ஒழுங்கான பொறிமுறை இல்லை. உதவி பெற்றுக் கொண்டவரே மீண்டும் உதவி பெற்றுக் கொள்ளும் நிலை காணப்படுகின்றது. அவற்றைமறுசீரமைக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.
வடக்கு மாகாண சபையின் அமர்வில் தலைமைச் செயலர் அலுவலகத்திற்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின்போதே இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.
அதில் உரையாற்றிய ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்ததாவது-
வடக்கு மாகாண விவசாய அமைச்சர் அவரது அமைச்சால் வவுனியா மாவட்டத்தில் விவசாய உபகரணங்களை வழங்கினார். விவசாய உபகரணங்களைப் பெற்றுக் கொண்ட ஒரு பயனாளி, ஏற்கனவே எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலும் விவசாய உபகரணங்களைப் பெற்றுக் கொண்டவர். இவ்வாறு இரட்டிப்பு உதவிகள் வழங்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். பயனாளிகள் தெரிவு செய்யப்படும் போது கலந்துரையாடல் நடத்தப்பட்டால் இவ்வாறான விடயங்களைத் தவிர்க்கலாம் - என்றார்.

> “வாழ்வாதாரத் திட்டங்களுக்குரிய பயனாளிகள் தெரிவில் ஓர் ஒருங்கமைக்கப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட முறைமை தேவை.

முதலமைச்சர் அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றிய ஆளும் கட்சி உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்ததாவது-
ஒரு சில பயனாளிகளுக்கு பல தரப்பிலிருந்தும் உதவிகள் கிடைக்கின்றன. எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் உதவி வழங்குகின்றேன். இன்னொரு உறுப்பினரும் வழங்குகின்றார். வேறு உறுப்பினரும் வழங்குகின்றார். இவ்வாறு ஒருவரே எல்லோரிடமிருந்தும் உதவிகளைப் பெற்றுக் கொள்கின்றார். வாழ்வாதாரத் திட்டங்களுக்குரிய பயனாளிகள் தெரிவில் ஓர் ஒருங்கமைக்கப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட முறைமை தேவை.- என்றார். (ற-5)



பெண்களின் சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் கண்காட்சியும், விற்பனையும் வவுனியா செட்டிகுளத்தில் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச மகளிர் அபிவிருத்திப் பிரதேசத்தினருடைய ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. அதில் சுயதொழிலில் பெண்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் விற்பனையும் நடைபெற்றது. உதவிப் பிரதேச செயலாளர் கே. முகுந்தன், பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் சுபசிங்க, மகளிர் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள சேவைகள் சங்க கணக்காளர் வலேபோட மற்றும் பிரதேச பொதுமக்கள் என பலரும் அதில் கலந்து கொண்டனர். (ற-21)

# அரச, தனியார் பஸ் சாரதிகள் முறுகலால் பயணிகள் சிரமம்

கிளிநொச்சி, டிசெ. 23
கிளிநொச்சியில் அரச, தனியார் சாரதிகளுக்கிடையே நேற்று முன்தினம் காலை ஏற்பட்ட முறுகல் நிலையால் பிரயாணிகள் சிலமணிநேரம் அசௌகரியங்களை [illegible] என்று தெரிவி[illegible].
கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்படவுள்ள பேருந்து தரிப்பிடத்தில் தனியார் பேருந்து சேவையினர் நேற்று முதல் தமது சேவையை ஆரம்பித்தனர். அந்தப் பகுதியில் அரச பேருந்துகள் சேவையில் [illegible] இரு தரப்பினருக்[illegible] முறுகல் நிலை ஏற்பட்டது. அதன்போது அரச பேருந்தில் பிரயாணித்தவர்கள் மீது கல் வீச முயற்சிக்கப்பட்டது என்று பேருந்தில் பயணித்தவர்கள் பொலிஸாரிடம் முறையிட்டனர்.
நீண்ட நேர முயற்சியின் பின்னர் பொலிஸாரால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு சேவைகள் வழமை போல் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது. வடமாகாணத்தில் நீண்ட காலமாக இரு தரப்பினருக்குமிடையில் இவ்வாறு முறுகல் நிலை ஏற்படுகின்றது என்றும், அதனால்பயணிகளே சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதுஎன்றும்விசனம் தெரிவிக்கப்பட்டது. (ற-21,35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தத்துக்காக மூடப்படுகின்றது வேலணை வீதி

யாழ்ப்பாணம், டிசெ.23
வீதி அகலிப்பு வேலைகளுக்காக வேலணை - ஊர்காவற்துறை வீதியின் சில பகுதி மூடப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டது.
இந்த அறிவித்தலை யாழ்ப்பாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் விடுத்துள்ளார்.
வேலணை- ஊர்காவற்துறை வீதியில் வேலணைச் சந்தியில் இருந்து புளியங்கூடல் சந்திவரை உள்ள 3 கிலோ மீற்றர் வரையான வீதியே எதிர்வரும் 30ஆம் திகதிவரை மூடப்படவுள்ளது.
இந்தக் காலப்பகுதியில் இந்த வீதியால் பயணிக்கும் சகல மக்களும் புளியங்கூடல்- சரவணை வீதி ஊடாகவும், யாழ்ப்பாணம்- ஊர்காவற்துறை வீதி ஊடாகவும் போக்குவரத்தை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-ரி)

# பசுமை உற்பத்தித்திறன் தொடர்பான தேசிய திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.23
வலி.மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பசுமை உற்பத்தித்திறன் தொடர்பான தேசிய திட்டங்கள் விரைவில் நடத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
தேசிய நிகழ்ச்சித் திட்டங்களை வலி.மேற்குப் பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட நிறுவனங்களுக்கு நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகமாகத் தங்கள் நிறுவனத்தில் பசுமை உற்பத்தித்திறன்வலையமைப்பை உருவாக்கி அதன் ஊடாகப் பிரதேச மட்ட பசுமை உற்பத்தித்திறன் செயற்றிட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பிரதேச செயலாளர் கேட்டுள்ளார்.
இதேவேளை நாடுதழுவிய ரீதியில் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் ஊடாக பசுமை உற்பத்தித்திறன் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. (ற-50)

# கிராம அலுவலர்கள் பதவி வெற்றிடத்தை நிரப்புங்கள்

## உள் நாட்டலுவல்கள் அமைச்சரிம் மஸ்தான் எம்.பி. வேண்டுகோள்

வவுனியா, டிசெ.23

வவுனியா மாவட்டத்திலுள்ள கிராம அலுவலர்கள் பதவி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவேண்டும் என்று உள்ளநாட்டலுவல்கள் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. கே. மஸ்தான்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் உள் நாட்டலுவல்கள் அமைச்சருக்கும், கிராம அலுவலர்களுக்கும் இடையே சந்திப்பு நடைபெற்றது. அதன் போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தில் கிராம அலுவலராகப் பணியாற்றும் ஒருவர் பல கிராமங்களை உள்ளடக்கியே சேவையாற்றுகின்றார். அவர்களின் சுமைகள் குறைக்கப்பட வேண்டும். பொதுமக்கள் அவர்களைத் தேடி அலையவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. கிராம அலுவலர்கள் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். எமது பகுதி போரால் மிகவும் பதிக்கப்பட்ட பகுதி. எந்தவொரு விடயத்துக்கும் தற்போது கிராம அலுவலர்களின் பரிந்துரை தேவைப்படுகின்றது. அவற்றைப் பெறுவதற்கு பொதுமக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். இவற்றைக் கருத்தில் கொண்டு ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். நிர்வாக ரீதியில் மாவட்ட செயலகத்திலும், பிரதேச செயலகத்திலும் ஆளணிப்பற்றாக்குறை நிலவுகின்றது. அவற்றையும் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்றார். (ற-21)



வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக வாழ்வின் எழுச்சிப் பிரிவினர் இந்த வருட வாழ்வின் எழுச்சி விற்பனை அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் அப் பகுதியைச் சேர்ந்த பயனாளியொருவருக்கு ஓட்டோவை வழங்கினர். வாழ்வாதாரத்தை மேம்படுத்தம் நோக்கில் ஓட்டோ வழங்கப்பட்டது. (ற-9)

# முன்பள்ளி மாணவருக்கு உபகரண பொதி

யாழ்ப்பாணம், டிசெ.23

சங்கானை சம்பத் வங்கியின் 5 லட்சம் ரூபா நிதிப் பங்களிப்புடனும், வேள்ட்விசன் நிறுவன அனுசரணையுடனும் வலி.மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட 52 முன் பள்ளிகளுக்கு உணவு வழங்கல் தொடர்பான விழிப்புணர்வு தகவல் பதாகையும், கல்வி உபகரணப் பொதியும் வழங்கப்பட்டன.

வலி.மேற்குப் பிரதேச சபை பலநோக்கு மண்டபத்தில் வேள்ட் விசன் நிறுவன சங்கானை பிரதேச அபிவிருத்தி முகாமையாளர் ஜி.ஜே.அனுராஜ் தலைமையில் இந்த நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

சங்கானை சம்பத் வங்கியின் பிரதான முகாமையாளர் ச.விசாகன் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு பதாகைகளையும் கல்வி உபகரணப் பொதியையும் வழங்கினார்.

வலி.மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட 25 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 52 முன்பள்ளி ஆசிரியர்கள் பொதிகளையும், பதாகைகளையும் பெற்றுக் கொண்டனர்.

முன்பள்ளிச் சிறார்களுக்கு வழங்கப்பட்ட கல்வி உபகரணப் பொதியில் சிறுவர்களின் மூளை அபிவிருத்திக்கான முக்கோணி, கலர், எண்மட்டை, உருவம் பொருத்தல் உட்பட 23 பொருள்கள் வழங்கப்பட்டன. (ற-50)




# போதைப்பொருள்கள் கடத்தலை ஒன்றிணைந்தாலே தடுக்கலாம்

## யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.23

கேரள கஞ்சாவை விடவும் பல மடங்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய கொக்கையின் வடக்கு மாகணத்துக்கும் பரவக்கூடும். அதற்கான சாதக நிலையை ஏற்பாடுத்தாத வகையில் நாம் செயற்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சன்ஜீவ தர்மரட்ண தெரிவித்தார்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களில் அதிக போதைப்பொருள் கடத்தல் முறியடிப்புக்களை மேற்கொண்ட பொலிஸாரையும், அதிகளவான குற்றங்களை கட்டுப்படுத்த உதவிய பொலிஸ் உத்தியோகத்தர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

வடக்கு மாகாணத்தில் கேரள கஞ்சா கடத்தல் அதிகளவாக இடம்பெறுகின்ற பகுதியாக காங்கேசன்துறை பகுதியே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் திறமையாக கடமையாற்றுகின்ற பொலிஸார் கடத்தல் முயற்சிகளை பெரும்பாலும் முறியடித்து விடுகின்றார்கள். இது வரவேற்கதக்கது. கஞ்சா இந்தியாவில் இருந்து கடல்மார்க்கமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு இங்கே விற்கப்படுகின்றது. இவற்றுக்கு அதிகளவான இளைஞர்கள் அடிமையாகியுள்ளார்கள்.

தற்போது இலங்கை பெரும் போதைப்பொருள் கடத்தலுக்குள் சிக்கியுள்ள அபாயத்தை அடைந்துள்ளது. கொக்கையின் போதை பொருள் கடத்தல் நடவடிக்கையானது இலங்கைக்கு ஊடாக அதிகரித்துள்ளது. அந்தக் கடத்தல் முயற்சி களும் முறியடிக்கப்பட்டுள்ளன.

கொக்கைன் கேரள கஞ்சாவை விடவும் அதிக மடங்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. கொக்கைன் வடக்கு மாகாணத்துக்கும் பரவக் கூடிய சாதகமான நிலமையை நாம் ஏற்படுத்தாத வகையில் செயற்பட வேண்டும். அனைவரும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

# சித்திரை புத்தாண்டுக்கு முன் ஜனாதிபதி நடமாடும் சேவை

## அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

வவுனியா, டிசெ.23

சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் வடக்கு மாகாணத்தில் ஜனாதிபதி மக்கள் நடமாடும் சேவை நடைபெறும். அதன் மூலம் மக்களுடைய பல பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்.

இவ்வாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத் தில் நேற்றுமுன்தினம் கிராம சேவையாளர்கள், களப் பணி யாளர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

2017ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி காலி மாவட்டத்தில் ஜனாதிபதி மக்கள் நடமாடும் சேவையை முடித்துக்கொண்டு நாம் வவுனியா வரவுள்ளோம். வவுனியா மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகங்களையும் முக்கியத்துவப்படுத்தி பிரதேச ரீதியாக ஜனாதிபதி மக்கள் நடமாடும் சேவை நிலையங்களை ஏற்பாடு செய்வோம். ஜனாதிபதி, பிரதமரின் சமுகமளிப்புடன் இங்கு ஒரு பிரதான நடமாடும் சேவையை இறுதி நிகழ்வாக நடத்தவுள்ளோம்.

இந்த நடமாடும் சேவையூடாக பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும். ஜனாதிபதி மக்கள் நடமாடும் சேவையை நடத்துவதற்கு முன்னர் ஜனாதிபதியின் செயலாளருடன் ஒரு கூட்டம், பிரதமரின் செயலாளருடன் ஒரு கூட்டம் என நான்கு கூட்டங்களை நாங்கள் நடத்தியுள்ளோம். வவுனியா நிகழ்ச்சித் திட்டம் நடைபெறுகின்ற போது நிறைய தமிழ் மக்களைக் கொண்ட ஒரு பிரதேசம் என்பதால் பிரதமரின் செயலகத்தில் பிரதமரின் தலைமையில் ஒரு கூட்டத்தையும் மேற்கொள்ளவுள்ளோம்.

இங்கு முன்வைக்கப்படும் பிரச்சினைகள் பல தரப்பட்டவை. காணிப்பிரச்சினையை எடுத்துக் கொண்டால் நீண்டகால போருக்குட்பட்ட பிரதேசம் என்பதால் வவுனியாவிலும் அத்தகைய பிரச்சினைகள் இருக்கும் என்று நம்புகின்றேன். நாங்கள் காணி அமைச்சின் செயலாளர், காணி சீர்திருத்தக்கொள்கை செயலாளர், காணிப்பதிவாளர் நாயகம் போன்ற அனைவரையும் இணைத்துக் கொண்டு இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கொள்கை அளவிலான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது.

நாங்கள் இப்பகுதி கிராமசேவையாளர்களுக்கு பயணப் பொதிகளை வழங்க இருக்கின்றோம். அவர்கள் எதிர்காலத்தில் ஒவ்வொரு வீட்டுக்கும் பயணப் பொதிகளை எடுத்துக்கொண்டு செல்லவேண்டியுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் நான்கு பிரதேச செயலாளர்களும் இணைந்து செயற்படும் போது பல பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். இங்கிருக்கும் மக்கள் பிரதிநிதிகள் என்னுடன் பேசும்போது நடமாடும் சேவை ஒன்று தேவை என்றும் இந்த மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் என்னிடம் கூறியிருந்தனர்.

வவுனியா மாவட்டம் என்பது ஒருவரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாவட்டமாகும். 1930 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒரு ஒழுங்கான மாவட்ட செயலகம் இல்லை என்ற குறை இருக்கின்றது. இந்த நடமாடும் சேவை வரும்போது மாவட்டச் செயலகத்துக்கான அடிக்கல்லையும் நடுவோம்.-என்றார். (ற-21)

# அலவாங்கால் கதவுடைத்து நகைகள், பணம் திருட்டு

## ஓமந்தை அரச ஊழியரின் வீட்டு திட்டப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 23

வவுனியா மாவட்டம் ஓமந்தை அரச ஊழியல் வீட்டுத் திட்டப் பகுதியில், கதவை அலவாங்கால் உடைத்து வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் நகை மற்றும் பணத்தை களவாடியுள்ளனர் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரச ஊழியர் வீட்டுத் திட்டப் பகுதியில் 6 ஆம் ஒழுங்கையில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

வீட்டார் உறக்கத்தில் இருந்ததைப் பயன்படுத்தி இந்தத் திருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜன்னலை உடைக்க முற்பட்டபோது அது கைகூடாததால் பின்னர் அலவாங்கால் கதவை உடைத்து உள்ளே புகுந்துள்ளனர். நகை மற்றும் 35 ஆயிரம் ரூபா பணத்தை திருடியுள்ளனர் - என்று முறைப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

2.30 மணியளவில் வீட்டுக் கதவு உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்தோம். இதன் பின்னரே வீட்டில் திருட்டுப் போனமையை அறிய முடிந்தது. உடனடியாக ஓமந்தைப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தோம் என்று வீட்டு உரிமையாளர் தெரிவித்தார். பொலிஸ் நிலையத்துக்கு அண்மையிலேயே அரச ஊழியர் வீட்டுத் திட்டம் அமைந்துள்ளது. திருட்டுத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ற-5,402)

# பதிவு செய்யுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்.குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விவசாயிகள் மற்றும் கமக்காரர்கள் கட்டாயம் தம்மைப் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்தே எதிர் காலத்தில் விதைகள், நெல் என்பவற்றைச் சங்கம் கொள்வனவு செய்யும் என்று சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.(ற-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீனாவுக்கு கொடுப்பதில் 95 வீதமானவை அரசகாணிகளே

## கூறுகிறார் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம



கொழும்பு, டிசெ. 23
அம்பாந்தோட்டையில் சிறப்புப் பொருளாதார வலயத்லை உருவாக்குவதற்குச்சீனாவுக்குவழங்கப்படவுள்ள 15 ஆயிரம் ஏக்கர் காணிகளில், 90 முதல் 95 வீதமானவை அரச காணிகளே என்று பன்னாட்டு வர்த்தக, அபிவிருத்தி மூலோபாய அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
சீனாவுக்கு வழங்கப்படவுள்ள 15 ஆயிரம் ஏக்கர் காணிகளில், சுமார் 5 ஆயிரம் ஏக்கர் காணிகள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இனங்காணப்படும். ஏனைய 10 ஆயிரம் ஏக்கர் காணிகள், மொனராகல, மாத்தறை மாவட்டங்களில் ஒதுக்கப்படும்.

இந்தத் தேவைக்காக காடுகளோ, வனவிலங்குப் பாதுகாப்பிடங்களோ பயன்படுத்தப்படாது. தனியார் காணிகள் உரிமையாளர்களின் ஒப்புதலுடன் மாத்திரம், தகுந்த இழப்பீடு வழங்கப்பட்டே இதற்காக பெறப்படும். சுமார் 200 வீடுகள் மாத்திரமே, இந்தத் திட்டத்துக்காக இடமாற்றம் செய்யப்பட வேண்டியிருக்கும்.

நெடுஞ்சாலை அபிவிருத்திக்காகக் காணிகள் பெறப்படுவதில் கையாளப்படும் அதே அணுகுமுறை தான் இங்கும் கையாளப்படும். 15 ஆயிரம் ஏக்கர் காணிகளும் ஒரே தடவையில் முதலீட்டாளர்களிடம் வழங்கப் படாது. மூன்று கட்டங்களாகவே நிலங்கள் வழங்கப்படும்.

இந்தப் பொருளாதார வலயத்தில், 2400 தொழிற்சாலைகள் உருவாக்கப்படும் என்று அரசு எதிர்பார்க்கிறது. இதன் மூலம் அடுத்த சில ஆண்டுகளில் 4 இலட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

இந்தப் பகுதியில், இயற்கை எரிவாயு மின் நிலையம், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், கப்பல்களைப் பழுதுபார்க்கும் தளம் என்பனவும் அமையவுள்ளன. இதன் மூலம் இலங்கைக்கு 4 பில்லியன் டொலர் முதலீடுகள் கிடைக்கும்.

நாட்டில் வேறு பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளும் இந்த வலயத்துக்கு மாற்றப்படும்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டு குத்தகைக்கு வழங்கும் உடன்பாட்டை இரண்டாவது தவணைக்காலத்துக்கு நீடிக்க முடியாது–என்றார். (த)

# போதைப்பொருள் மையமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள்

## பிரதியமைச்சர் அமீரலி கவலை



எருவில், டிசெ.23
வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் போதைப் பொருள் வியாபாரம் நடைபெறும் ஒரு கேந்திர நிலையமாகக் காணப்படுவதாகப் பிரதியமைச்சர் அமீரலி தெரிவித்தார்.

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம் பிரதேச செயலாளர் மு.கோபாலரெத்தினம் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றது. அங்கு அவர் தெரிவித்ததாவது:

எமது பிரதேசத்தில் போதைப் பொருள் பாவனையைக் குறைப்பதற்காக எனது 15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் போதை ஒழிப்பு வேலைத் திட்டத்தை ஜனவரியில் ஆரம்பிக்கவுள்ளோம்.

போதைப்பொருள் பாவனையில் மட்டக்களப்பு மாவட்டம் தற்போது 3ஆம் இடத்தில் இருக்கின்றது. இதன் காரணமாக வறுமை எனும் கொடிய நோய் எங்களை துரத்துகின்றது. இதனை நாங்கள் தடுத்து நிறுத்தவேண்டுமாக இருந்தால் சமுர்த்தி அதிகாரிகள், கிராம சேவை அதிகாரிகள் மக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் – என்றார்.

இங்கு மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவரும் பிரதியமைச்சருமான எம்.எஸ். எஸ்.அமீரலி, த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் மற்றும் பிரதேசசபை செயலாளர் உட்பட பொலிஸ் நிலைய அதிகாரிகள், திணைக் களங்களின் அதிகாரிகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-ய)

# கொழும்புக்குள் நுழையும் வாகனங்களுக்கு கட்டுப்பாடு

கொழும்பு, டிசெ. 23
நாளொன்றுக்குக் கொழும்புக்குள் வரும் வாகனங்களின் எண் ணிக்கையை 50 ஆயிர மாக மட்டுப்படுத்தத் திட் மிடப்பட்டுள்ளது. மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய இதனை தெரிவித்தார். தற்போது நாளொன்றுக்கு 3 இலட் சம் முதல் 3லட்சத்து 50 ஆயிரம் வரையான வாக னங்கள் கொழும்புக்குள் வந்து செல்கின்றன. இதனால் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. 2017 இல் வாகன உள் வாங்கல் குறைப்பு நடவ டிக்கைகள் மேற்கொள் ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். அரச மற் றும் தனியார் நிறுவனங் கள் இந்த திட்டத்துக்கு உதவவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (த)

## மனதார வாழ்த்துகின்றோம்



### திரு. செல்லையா சிவபாதம்

இவர் பனிப்புலத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.
காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஓய்வுநிலை ஊழியரும், சுழிபுரம் யோகி கார்த்திகேசு அறநெறிப் பாடசாலைத் தலைவரும், சைவசித்தாந்த பண்டிதரும் ஆவார்.
கடந்த 32 வருடங்களாக கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், பெரியபுராணம் ஆகியவற்றுக்கு ஆலயங்களில் உரைகூறி வருகின்றார். திருமுறை ஓதல், சொற்பொழிவு, சமய நூல்கள் ஆக்கம் ஆகிய ஆன்மீகப் பணிகளிலும் ஈடுபாடு கொண்டவர்.
ஓதுவார், கலைவாரிதி, பௌராணிக வித்தகர், சிவநெறி வித்தகர் ஆகிய பட்டங்களையும் பெற்றுள்ளார்.
இந்து சமய கலாசார அமைச்சினால் இன்று (23.12.2016) வெள்ளிக்கிழமை கொழும்பு தாமரைத் தடாக மண்டபத்தில் நடைபெறுகின்ற விருது வழங்கல் வைபவத்தில் அரச உயர் விருதாகிய 'கலாபூஷணம்' விருதைப் பெற்று சிறப்படைவதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் பல்லாண்டுகாலம் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து பணிகள் பல செய்து விருதுகளைப் பெற உளம் மகிழ்ந்து பிரார்த்திக்கின்றோம்.

Congratulations! நிர்வாகத்தினர், யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை, சுழிபுரம் வட- கிழக்கு. Congratulations

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congrats Congrats

எமது குருநாதர் சிவானந்தவாரிதி, வாரியார் வாரிசு, வண்டமிழ் வேந்தன்

### சிவத்திரு வ.குமாரசாமி ஐயா

அவர்கள் 13.11.2016 அன்று வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி.தெற்கு பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய கலாசார விழாவில் **'ஞான ஏந்தல்'** என்னும் விருதினைப் பெற்றுக்கொண்டமைக்காகவும், **இன்று (23.12.2016) வெள்ளிக்கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கொழும்பு 7, தாமரைத் தடாக மண்டபத்தில்** நடத்தப்படும் விருது வழங்கல் வைபவத்தில் **'கலாபூஷணம்'** விருதினைப் பெற்றுக் கொள்வதையிட்டு மனம் மகிழ்வதோடு ஐயா அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று நீடூழி காலம் வாழ்ந்து எமது சமயத்துக்கும், தமிழுக்கும் பெரும் பணியாற்ற வேண்டுமென எல்லாம் வல்ல சந்நிதி வேலனையும், ஏழாலை வசந்த நாகபூசணி அம்பாளையும் பிரார்த்தித்து வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்.

[illegible] உடுவில்.

குருஅருளாளர் ஆ.சி.அற்புதலிங்கமும் கடவுள் சந்நிதி அடியவர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குக்கான நிதி குறைப்பால் நல்லாட்சி மீது பெரும் சந்தேகம்

## கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

களுவாஞ்சிகுடி, டிசெ.23
இம்முறை வரவு-செலவுத்திட்டத்தில் கிழக்கு மாகாண சபைக்கு 53 வீதமான நிதி குறைக்கப்பட்டுள்ளமையானது நல்லாட்சியின் வாக்குறுதிகள் குறித்து மீண்டும் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாகக் கிழக்கு முதலமைச்சர் தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

மத்திய அரசிலே மாகாண சபைகளுக்கான நிதிகள் முடக்கப்படும் சம்பிரதாயம் இந்த அரசிலும் தொடரக்கூடாது என்பதற்காக நாம் சில விடயங்களைச் சுட்டிக்காட்டியாக வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் 30 தேசிய பாடசாலைகளும், 1008 மாகாண பாடசாலைகளும் உள்ளன. ஆனால் இம்முறை வரவு-செலவுத்திட்டத்தில் 190 மில்லியன் ரூபா மாத்திரமே கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 76 ஆயிரத்து 900மில்லியன் ரூபா மத்திய அரசு தம்வசம் வைத்திருக்கும் நூற்றுக்கணக்கான பாடசாலைகளுக்கு ஒதுக்கியுள்ளமையானது கிழக்கு மாகாணத்தின் கல்வியைச் சீரழிக்கும் விடயமா என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது

சுகாதாரத்துறையை எடுத்துக் கொண்டால் கிழக்கு மாகாணத்திலே 226 வைத்திய சாலைகள் உள்ளன. இதில் 12 தள வைத்திய சாலைகளும், 46 பிராந்திய வைத்திய சாலைகளும், 60 ஆரம்பப் பிரிவு வைத்திய சாலைகளும், மூன்று ஆயுர்வேத தள வைத்தியசாலைகளும், 5 மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலைகளும், மூன்று பஞ்சகர்ம



வைத்திய சாலைகளும் மூன்று கிராமிய ஆயுர் வேத வைத்தியசாலைகளும் மற்றும் 44 மத்திய ஆயுர்வேத மருந்தகங்களும் உள்ளன.

ஆனால் இம்முறை மாகாணத்தின் சுகாதாரத் துறைக்கு 265 மில்லியன் ரூபா மத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய சுகாதாரத் துறைக்கு 1இலட்சத்து 61ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்குவது எந்த வகையில் நியாயம்? 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக அதிகாரப்பகிர்வு என்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கு நூறுவீதம் வழங்கப் பட்டுள்ளது என்று கூறிவரும் நிலையில் அவற்றுக்கான நிதியிலும் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது-என்றார். (த-ய)



கோரளைப்பற்று பகுதி சமுர்த்தி பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தில் நேற்று நடந்தது. கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.எஸ். எஸ்.அமீர் அலி கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உபகரணங்களை வழங்கினார். (து)

## கட்டுநாயக்கவில் முதல் முறையாக சிக்கிய புதிய வகை போதைப்பொருள்

கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய வகை போதைப் பொருளுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கெனபீஸ் இண்டிக்கா எனப்படும் குஷ் என்ற போதைப் பொருளுடன் குறித்த நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒரு கிலோ 460 கிராம் போதைப் பொருளை அவரிடம் இருந்து சுங்கப் பிரிவுப் பொலிஸார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட நபர் மினுவங்கொடை நீதிமன்றில் நேற்று முன்னிலைப்படுத்தப் பட்டபோது, எதிர் வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

கெனபீஸ் இன்டிக்கா எனப்படும் குஷ் என்ற இந்த போதைப் பொருள் இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (து)

## ரயில் விபத்துக்களில் 2016 இல் 347 பேர் சாவு

கொழும்பு, டிசெ. 23
2016ஆம் ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் ரயில் விபத்துக்களில் 347 பேர் உயிரிழந்துள்ளனர்.

பயணித்துக் கொண்டிருக்கும் ரயிலில் இருந்து விழுந்தமையால் ஏற்பட்ட விபத்தில் 58 பேரும், ரயில் பாதையில் இடம்பெற்ற விபத்தில் 14 பேரும், ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டவர்களில் 31பேரும் இதில் அடங்குவர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தில் ரயில் விபத்துக்களில் மூலம் ஏற்படும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. தொலைபேசிப் பாவனையினால் ஏற்பட்ட விபத்துக்களே அதிகமாக உள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் கூறினார். (து)

## மரண அறிவித்தல்

பிறப்பு
16 . 11 . 1936



இறப்பு
21 . 12 . 2016

### திருமதி லீலாவதி பத்மநாதன்

வெள்ளவத்தையைப் பிறப்பிடமாகவும், இல.48, புதியமைப்பு வீதி, பூந்தோட்டம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி பத்மநாதன் 21.12.2016 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தன் - செல்லம்மா தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்ற கனகசபை - மங்களேஸ்வரி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற கனகசபை பத்மநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, உலகநாயகி, புவனேசன், சதானந்தன் மற்றும் ஆரூரன் (லண்டன்), நீலகண்டன், குமரகுருபரன்(கனடா), அருட்செல்வம், அரன்மதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரகலாதன்(மஸ்கன்ஸ் லிமிட்டெட் - கொழும்பு), ரவிசங்கர் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம் - வவுனியா), திருச்செல்வி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரகுமார், ஜெயந்தி, ஜெயகௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும், நிந்துஜன், பவனுஜன், ஹர்சினி, லக்சினி, ரதன், ஹரனி, கோவர்த்தனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2016) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் பூந்தோட்டம் வவுனியா இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பத்மநாதன் ரவிசங்கர்**
(மகன்- தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீர்ப்பாசனத் திணைக்களம் - வவுனியா)
**சி.ஜெயாபரன்**
(மருமகன் - அம்[illegible] வவுனியா)

இல.48, புதிய அமைப்பு வீதி,
பூந்தோட்டம்,
வவுனியா.

(V/175)
(11,17,18)

**077 326 3289, 071 861 8007**

## நெற் செய்கைக்கு ரூ.7 பில்லியனை ஒதுக்கியது அரசு

கொழும்பு, டிசெ. 23
நெற்செய்கையில் ஈடுபடுவோருக்கு வழங்கப்படும் உர மானியத் துக்காக மேலும் 1.5 பில்லியன் ரூபாவை நிதியமைச்சு வழங்கியுள்ளதையடுத்து, நெற்செய்கைக்காக அரசு இதுவரை 7 பில் லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நெற்செய்கையை ஊக்குவிப்பதற்குத் தேவையான மானியங்களை பெற்றுக் கொடுப்பதற்காக ஏற்கனவே 5.5 பில்லியன் ரூபா நிதி அமைச்சினூடாக ஒதுக்கப்பட்டிருந்தது. அரசு ஏற்கனவே அறிவித்ததைப் போன்று ஒவ்வொரு சிறு மற்றும் பெரும் போகப் பயிர்ச் செய்கைக் கா[illegible] 25 ஆயி[illegible]யத்தை வழங்குவதற்காகவே மேலதிகமாக 1.5 பில்லியன் ரூபா நிதியை அரசு ஒதுக்கியுள்ளது.

அடுத்த வருடத்தில் மானியம் வழங்குவதற்காக 55 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கத் திட்டமிடுள்ளதாகவும், அதனூடாக விவசாயிகளுக்கான மானியமாக 50 ஆயிரம் ரூபாவை அவர்களின் சொந்தக் கணக்கில் வைப்பிலிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் விவசாயிகளின் கடன் சுமையைக் குறைத்து, அவர்களுக்கான மானியத்திட்டங்களைச் சிறப்புற வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் நிதியமைச்சு கூறியுள்ளது. (து)

## பள்ளத்தில் பாய்ந்தது டிப்பர்

மட்டக்களப்பு, டிச.23
மட்டக்களப்பு - செங்கலடி பதுளை வீதியால் பயணித்த டிப்பர் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி பாலத்தினருகே 25 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக் குள் ளானது.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் டிப்பரின் சாரதி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

பின்னால் வந்து கொண்டிருந்த பஸ்ஸுக்கு இடம் விட்டு ஓரத்தில் ஒதுங்கியபோது வாகனம் பள்ளத்தில் பாய்ந்தது விபத்துக்குள்ளானதாக சாரதி தெரிவித்தார்.
(த-ய-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிப் பதிவுகளுடன் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள்

## வவுனியாவில் அதிகரித்துள்ளன என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு

வவுனியா, டிசெ.23
வவுனியா மாவட்டத்தில் சட்டரீதியான பதிவுகளை மேற்கொள்ளாது போலியான பதிவுகளின் மூலம் பல தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்குகின்றன. அவற்றுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
இவ்வாறு சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.
வவுனியாவில் பல தனியார் கல்வி நிலையங்கள் பதிவு செய்யப்படாமலும் கல்வித் திணைக்களத்தின் சட்ட விதிமுறைகளைப் பின்பற்றாமலும் இயங்குகின்றன. வசதி படைத்தவர்களிடம் பணம் கறக்கும் நோக்கில், தலைநகரில் தமது கிளை செயற்பட்டு வருகின்றன என்று மாணவர்களை மூளைச் சலவை செய்து வருவதும் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. கற்கை நெறியின் இறுதியில் வழங்கப்படும் சான்றிதழ்களில் தலைநகரங்களில் இயங்கி வருவதாக முகவரியிடப்பட்டுள்ள போதும், அவை அங்கு இயங்குவதில்லை என்று தெரியவருகின்றது.

> “ தற்போது வவுனியா நகரில் பாடசாலை களை விட தனியார் கல்வி நிறுவனங்கள் பல திறக்கப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்திலுள்ள அரச அதிகாரிகள் அவை தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை. இங்குள்ள தனியார் கல்வி நிறுவனங்களை சட்டரீதியான பதிவு களுக்கு உட்படுத்துவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தனியார் கல்வி நிறுவனங்களைத் தேடிச்செல்லும் மாணவர்கள் தற்போதுள்ள தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி அவை போலியானவையா, அல்லது பதிவு செய்யப்பட்டவையா என்பவற்றை அறிந்து தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.
தற்போது வவுனியா நகரில் பாடசாலைகளை விட தனியார் கல்வி நிறுவனங்கள் பல திறக்கப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்திலுள்ள அரச அதிகாரிகள் அவை தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை. இங்குள்ள தனியார் கல்வி நிறுவன்ங்களை சட்டரீதியான பதிவுகளுக்கு உட்படுத்துவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.
வவுனியா நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் பல தனியார் கல்வி நிறுவனங்கள் பதிவுகளை மேற்கொள்ளாது இயங்குவது கண்டறியப்பட்டு அவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடம்பெற்றது. தற்போதும் பதிவுகளை மேற்கொள்ளாது பல கல்வி நிறுவனங்கள் செயற்படுகின்றன. அவற்றுக்கு எதிராக விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்று வவுனியா நகரசபைச் செயலாளர் தெரிவித்தார். (ற-21)



*கிளிநொச்சி மாவட்ட பூநகரி பிரதேச செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தை நேற்றுக் காலை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவும், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் இணைந்து திறந்து வைத்தனர். இந்தக் கட்டடம் 74 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலாளர் சத்தியசீலன், பூநகரி, கரைச்சி, கண்டாவளை, பளை பிரதேச செயலாளர்கள், அனைத்து மதகுருமார்கள், அரச உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்டத்தின் முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.* (ற-35)

## வயோதிப மாது கொலை; சந்தேகநபர் நேற்று கைது

யாழ்ப்பாணம், டிசெ.23
வடமராட்சி கிழக்கு, குடத்தனை, பொற்பதியில் வயோதிப மாது கோரமாக வெட்டிக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பருத்தித்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.
பொற்பகுதியில் பெண்ணொருவர் அவரின் வீட்டுக்கு அருகில் கோரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். தங்கவேலாயுதம் பரமேஸ்வரி வயது 63 என்பவரே கொல்லப்பட்டவராவார். அவரும் அவரது கணவரும் தனியாக வசித்தனர்.
சம்பவ தினமன்று கடற்றொழில் முடித்து விட்டு அந்தப் பகுதியால் திரும்பிய பெண்ணின் உறவினர் ஒருவர் வீட்டுக்குள் இருந்து ஒருவர் தப்பியோடுவதைக் கண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. வீட்டுக்குள் சென்று பார்த்தபோது பரமேஸ்வரி கழுத்தில் வெட்டுக் காயத்துடன் குருதி வெள்ளத்தில் இருந்துள்ளார். பெண்ணின் கணவர் அறையில் உறங்கிய நிலையில் இருந்துள்ளார்.
அந்தப் பகுதியில் கூடியோர் விடயம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தனர்.
பொலிசார் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினர். இது தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் ஜயலத் தலைமையிலான விசேட பொலிஸ் குழுக்கள் தீவிர விசாரணைகளில் இறங்கின. முதலில் சடலத்தைக் கண்ட அவரின் உறவினர் உட்படப் பலரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று அதிகாலை பொலிஸாரால் குடத்தனை கடற்கரையில் கைது செய்யப்பட்டார். குடத்தனை பொற்பதியைச் சேர்ந்த கே. கேசவன் (வயது-43) என்பரே கைது செய்யப்பட்டார். கொலைக்குப் பயன்படுத்தப்பட்டது என்று கருதப்படும் கத்தியும் கைப்பற்றப்பட்டது என்றும், பெறப்பட்ட தடயங்கள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். விசாரணையின் பின் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ற-109)

## நாலர் விழா சனியன்று

யாழ்ப்பாணம், டிசெ.23
யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் நாவலர் விழா எதிர்வரும் சனிக்கிழமை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறும்.
யாழ்பபாணத் தமிழ்ச் சங்கமும், கரிகணன் அச்சகதாரரும் இணைந்து விழாவை நடத்தவுள்ளனர். யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ச.லலீசனின் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வு சனிக்கிழமை மு.ப. 9:30 மணிக்கு ஆரம்பமாகும்.
'நாவலரின் தொலை



நோக்கு' என்னும் ஆய்வுத் தொகுப்பு நூலும் நிகழ்வில் வெளியிடப்படும். நூல் வெளியீட்டு உரையை பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் நிகழ்த்துவார். முதற்பிரதியை சைவ மகாசபை பொதுச் செயலாளர் வைத்திய கலாநிதி ப.நந்தகுமார் பெறவுள்ளார். தெரிவு செய்யப்பட்ட 30 பாடசாலைகளுக்கு நாவலர் சிலைகள் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி)



## வெற்றிலை உமிழ்ந்த நிலையில் கடிதங்கள்

நெல்லியடிச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள தபால் பெட்டியினுள் வெற்றிலை எச்சில் உமிழ்ந்த நிலையில் கடிதங்கள் மீட்கப்பட்டன.
தினமும் காலை 7 மணிக்குத் தபால் நிலைய ஊழியர்களால் தபால் பெட்டியினுள் இருந்து தபால்கள் சேகரிக்கப்படுவது வழமை. நேற்றும் ஊழியர் ஒருவரால் தபால்கள் சேகரிப்பதற்காக நெல்லியடி பஸ் தரிப்பு நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியைத் திறந்த போது வெற்றிலை எச்சில் உமிழப்பட்ட நிலையில் கடிதங்கள் கிடந்துள்ளன.
சம்பவம் தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று கரவெட்டி தபால் அதிகாரி தெரிவித்தார். (ற-422)

## சீனித் தொழிற்சாலை அமைக்க முல்லைத்தீவில் காணி தேவை

### மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் கோரிக்கை

முல்லைத்தீவு, டிசெ. 23
முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக சீனித்தொழிற்சாலை உருவாக்கப்படவுள்ளது. கரும்புச் செய்கை மேற்கொள்வதற்கு 12 ஆயிரத்து 500 ஏக்கர் காணி தேவையாகவுள்ளது. அதற்கான இடத்தை அடையாளப்படுத்தித் தர வேண்டும்.
இவ்வாறு சிறுகைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.
முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
2018ஆம் ஆண்டு நான்கு சீனித் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. அவற்றில் யார் வேண்டுமானாலும் முதலீடு செய்ய முடியும். முல்லைத்தீவு மாவட்டத்தில் சீனித் தொழிற்சாலையை அமைப் பதற்கு பொருத்தமான இடங்களை அடையாளப் படுத்தியுள்ளனர். இது தொடர்பாக வடமாகாண சபையுடனும் கலந்துரையாடி நடை முறைப் படுத்தலாம். நான் சிறு கைத்தொழில் வர்த்தக அமைச்சர் என்ற ரீதியில் இந்தத் திட்டத்தை வேகமாக நடைமுறைப் படுத்தலாம்.
முழுமையான காணியும் சீனி உற்பத்தி நிறுவனத் துக்குக் கொடுக்கப்படும் என்ற ஒரு தப்பான கருத்து உள்ளது. ஒரு இடத்தில் காணி ஒதுக்கப்பட்டால் அங்கு விவசாயத்தை மேற் கொள்ளும் விவசாயிகளுக்குத் தான் காணி வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் வீதம் கொடுக்கப்படும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் அனைத்து கரும்புகளையும் சீனித் தொழிற் சாலையே நியாயமான விலையில் கொள்வனவு செய்யும். இதனால் எங்கள் இளைஞர்கள் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்வார்கள் - என்றார்.
விசுவமடு தெற்குப் பகுதியில் நஞ்சுண்டான் குளம் கைவிடப்பட்டுள்ளது. அதன் கீழ் 5 ஆயிரம் ஏக்கர் வயற் காணிகள் காணப்படுகின்றன.
தற்போது மரங்களும் வளர்ந்து காணப்படுகின்றன. இந்தத் திட்டத்தை நடை முறைப்படுத்தும் போது விசுவமடுப்பகுதியில் உள்ள மக்களுக்குக் காணிகளை கொடுத்து அங்கு செய்யலாம் என நான் நினைக்கிறேன் - என்று முல்லைத் தீவு மாவட்ட இணைத்தலைவர்களில் ஒருவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான மருத்துவர் சிவமோகன் சுட்டிக்காட்டினார். (ற-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 600 அடி பள்ளத்தில் பாய்ந்தது பவுசர்

## இருவர் உயிரிழப்பு

நுவரெலியா, டிசெ.23

நுவரெலியா – லிந்துலை பிரதேசத்தில் பாதை திருத்தப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தண்ணீர்த் தாங்கி கொண்ட உழவு இயந்திரம் வீதியை விட்டு விலகிச் சுமார் 600 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியதில் இருவர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 6.45 மணியளவில் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மற்றொருவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்திருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வாகன இயந்திரக் கோளாறு காரணமாகவே இந்த விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

லிந்துலை - ஊவாக்கலை தோட்டத்தைச் சேர்ந்த வண்ணராஜா சரண்ராஜ் (வயது–26), ஞான பண்டிதம் சுரேந்திரன் (வயது–37) ஆகிய இருவருமே சம்பவத்தில் உயிரிழந்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களின் சடலங்கள் லிந்துலைப் பிரதேச வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-ய–43)

# அம்புலன்ஸில் பிறந்த சிசு

கொழும்பு, டிசெ. 23

அக்குரஸையில் பணியாற்றும் அவசர நேர மருத்துவத் தொழில்நுட்பவியலாளர் ஒருவரும் அம்புலன்ஸ் சாரதியொருவரும், மாத்தறை வைத்தியசாலைக்குச் சென்றுகொண்டிருந்த அம்புலன்ஸினுள் சிசுவொன்றைப் பிரசவிக்க உதவினர்.

ஓடிக்கொண்டிருந்த அம்புலன்ஸினுள், கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.30 மணிக்கு குறித்த சிசு பிறந்துள்ளது.

குறித்த சிசுவின் தாயின் வீட்டுக்கு அதிகாலை 1.30 மணியளவில், குறித்த அம்புலன்ஸ் சென்றபோது அவர் பிரசவ வேதனையில் இருந்துள்ளார் என மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களின் அவசர சேவை அம்புலன்ஸ் பொறுப்பாளர் எல்.ஜி. காமினி தெரிவித்தார். அது மிகவும் அவசர நிலைமையாக இருந்தது எனவும் அவர் கூறினார்.

குறித்த பெண், சிசுவைப் பிரசவிக்கும் தருணத்துக்கு வந்துவிட்டார் என உணர்ந்த அம்புலன்ஸ் சாரதி, வாகனத்தை வீதியோரம் நிறுத்திவிட்டு, சிசுவைப் பிரசவிக்க, அவசர மருத்துவத் தொழில்நுட்பவியலாளருக்கு உதவி செய்தார் எனக் காமினி குறிப்பிட்டார்.

தாயும் சேயும் நலமாக இருந்த போதிலும், அவர்கள் மாத்தறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தொழில்நுட்பவியலாளரும் சாரதியும் இவ்வாறான அவசர நிலைமைகளை எதிர்கொள்ளும் வகையில், இந்தியாவில் பயிற்றப்பட்டவர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த அம்புலன்ஸ் சேவை, இந்திய அரசு வழங்கிய 7.6 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் நிதியில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

# வடக்கு—கிழக்கை இணைக்கும் இனவாதத் தீர்வு வேண்டாம்

## வலியுறுத்துகிறது ஜே.வி.பி.

யாழ்ப்பாணம், டிசெ. 23

தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வைக்கப்படும் அரசியல் தீர்வானது வடக்கையும் தெற்கையும் இணைக்கும் – இன ஒற்றுமையைக் கட்டியெழுப்பக்கூடிய தீர்வாக இருக்கவேண்டுமே தவிர, வடக்கு - கிழக்கை இணைக்கும் இனவாதத் தீர்வாக அமையக் கூடாது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்புத் தேவை என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஏகாதிபத்திய அரசமைப்பை மாற்றுவதற்கே மக்கள் இந்த அரசுக்கு ஆணை வழங்கினர். அரசமைப்பை மாற்றும் ஒரு பகுதியாகத்தான் 19 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

19 இற்கு அப்பால் சென்று புதிய அரசமைப்பை விரைவாகவே கொண்டு வரவேண்டிய தேவை இப்போது உணரப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய அரசமைப்பில் தேசிய பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் தேர்தல் முறைமைதான் சிக்கலான விடயங்களாகும்.

அரசியல் தீர்வைப் பொறுத்தவரை அது முழு நாட்டுக்கும் - முழு மக்களுக்கும் ஒரு சிறந்த தீர்வாக அமையவேண்டும். பிரச்சினையைத்தீர்க்கப்போய் வேறு பிரச்சனைகளை உருவாக்கும்தீர்வாக அது அமைந்துவிடக்கூடாது.

அரசியல் தீர்வில் வடக்கு-கிழக்கு இணைப்பு என்பதை ஒருபோதும் ஏற்கமுடியாது. வடக்கு-கிழக்கை இணைப்பதை விட வடக்கையும் தெற்கையும் இணைப்பதே சிறந்ததாகும். வடக்கு-தெற்கு இணைப்பு என்பது சிங்கள- தமிழ் மக்களை இணைப்பதாகும். அவர்களிடையே நிலையான ஒற்றுமையைக்கட்டிஎழுப்புவதாகும்.

இப்படியான ஓர் அரசியல் தீர்வுதான் இந்த நாட்டுக்குத் தேவை. இனங்களிடையே ஒற்றுமையைக் கட்டியெழுப்பாது -அவர்களிடையே இணைப்பை ஏற்படுத்தாது வெறும் இடங்களை மாத்திரம் இணைப்பது இருக்கின்ற பிரச்சினையை மேலும் அதிகரிப்பதாகவே அமையும் - என்றார். (த-5)

# பதுளை மாவட்டத்தில் 66 வீதமான நிலத்தில் மண் சரிவு அபாயம்

கொழும்பு, டிசெ. 23

பதுளை மாவட்டத்திலுள்ள மொத்த நிலப்பரப்பில், 66.91 சதவீதமானவை மண்சரிவு அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாக, தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக பதுளை மாவட்ட செயலாளர் நிமல் அபேசிறி தெரிவித்தார்.

பதுளை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற. இடர் முகாமைத்துவக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

மொத்த நிலப்பரப்பில், 79.32 சதுரகிலோமீற்றர் மிகுந்த அவதானத்துக்கு உட்பட்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது. இது 2.77 சதவீதமாகும்.

அத்துடன், 467.9 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு நடுத்தர ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. இது 47.76 சதவீதமாகும்.

மேலும் 1,369.19 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு குறைந்தளவிலான ஆபத்தைக் கொண்ட பிரதேசமாகும் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில், மண்சரிவு அபாயமற்ற பகுதியாக, மொத்த நிலப்பரப்பில் 942.92 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு அடையாளங்காணப்பட்டுள்ளது. இது 32.93 சதவீதமாகும்.

மண்சரிவு அபாயத்தை எதிர்கொண்டுள்ள பகுதிகளை, எல்லை நிர்ணயம் செய்வதற்குக் கட்டட ஆராய்ச்சி நிலையம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மக்கள் தொகை மற்றும் குடியிருப்புக்கள் தொடர்பிலான தகவல்கள், கிராம அலுவலர் ஊடாகப் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது. ஆனால், இந்தத் தகவல்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது–என்றார். (த)

# நுண்கடன் என்ற போர்வையில் குறி வைக்கப்படும் பெண்கள்

## வியாழேந்திரன் எம்.பி. சீற்றம்



செங்கலடி, டிசெ.23

மட்டக்களப்பு மாவட்டத்தில் நுண்கடன் என்ற போர்வையில் பெண்களைக் குறிவைத்து பல்வேறுபட்ட சமூகவிரோதச் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் நுண்கடன் என்ற போர்வையில் பெண்களைக் குறிவைத்து பல்வேறுபட்ட சமூக விரோதச் செயற்பாடுகள் அண்மைக் காலங்களில் இடம்பெற்றவண்ணமுள்ளன. இரவு மற்றும் பகல் நேரங்களில் நுண்கடன் என்கின்ற போர்வையில் சிலர் பெண்களுக்குத் தொந்தரவுகளைக் கொடுத்து வருகின்றார்கள்.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நடைபெறவுள்ள கிரான் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அனைத்து நுண்கடன் வழங்கும் நிறுவனங்களும் வரவழைக்கப்பட வேண்டும் - என்றார். (த-ய–47)

# இராணுவத் தேவைகளுக்காக பயன்படுத்தப்படாது மாகம்புர

கொழும்பு, டிசெ 23

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகம் இலங்கைக் கடற்படை தவிர்ந்த வேறெந்தக் கடற்படையினாலும், இராணுவத் தேவைகளுக்காக பயன்படுத்தப்படாது என்று அரசு தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் 80 வீத உரிமை, சீன நிறுவனம் ஒன்றுக்குக் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது. இதனால்



சீனக்கடற்படை அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைப் பயன்படுத்தக்கூடும் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இது குறித்து கொழும்பில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட பன்னாட்டு வர்த்தக மற்றும் அபிவிருத்தி மூலோபாய அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, அம்பாந்தோட்டைத் துறைமுகம் வணிகச் செயற்பாடுகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படும். இந்த நிபந்தனை கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும். இலங்கைக் கடற்படை தவிர்ந்த, வேறெந்த இராணுவப் பிரசன்னத்துக்கும் இங்கு இடமளிக்கப்படாது.

துறைமுகத்தின் பாதுகாப்புக்கு இலங்கைக் கடற்படை, பொலிஸ், துறைமுக அதிகாரசபை என்பனவே பொறுப்பாக இருக்கும் என்று தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகம்



“கொள்வனவு செய்யப் பட்ட நெல் களஞ்சிய சாலைகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நிலையில் அரசு அரிசியை இறக்குமதி செய்ய எடுத் துள்ள தீர்மானத்திற்கு விவசாயிகளும் உள் நாட்டு அரிசி உற்பத்தி யாளர்களும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.”

# களஞ்சியசாலைகளில் இருந்து நெல்லை விடுவிக்க அரசு தீர்மானம்

சந்தையில் தற்போது காணப்படுகின்ற அரிசித் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில் அரசு களஞ்சியசாலைகளில் உள்ள ஒன்றரை இலட்சம் மெட்ரிக் தொன் நெல்லை விடுவிக்கவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

தற்போது அரச கையிருப்பிலுள்ள இரண்டு இலட்சம் மெட்ரிக் தொன் நெல்லில் 75 சதவீதத்தை அரிசி உற்பத்திக்காக விடுவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள இலங்கை கமநல சேவை சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன,

28 ரூபா அல்லது 34 ரூபாவுக்கு இடைப்பட்ட விலை நிர்ணயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லையே அரிசியாக மாற்றி விற்கின்றனர். இதனை 60 ரூபாவுக்கு வழங்க முடியும். எனினும் விற்ப னைச் செயற்பாட்டின் போது 90 ரூபாவாக காணப்படுகிறது. இந்த நிலையிலே நாட்டில் உள்ள பிரதான மூன்று அரிசி ஆலை உரிமையாளர்களிடம் 10 இலட்சம் மெட்ரிக் தொன் நெல் கையிருப்பில் உள்ளது. என்றார்

இதேவேளை நெல் விடுவிப்பின் போது சிறிய மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாகவும் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த ஆலை உரிமையாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாகவும் நெல்லை அரிசியாக்கி சந்தைப்படுத்தும்போது அரிசிக்கு நிலவும் தட்டுப்பாடு நீங்கும் என்பது அரசின் எதிர்பார்ப்பு என நெல் சந்தைப்படுத்தல் சபைத் தலைவர் எம்.பீ.திசாநாயக்கவால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் அரிசி தேவைப்படுகின்ற நிலையில் மக்கள் நலன் கருதி அரிசியை இறக்குமதி செய்வ தற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதான தகவல் நிதிஅமைச்சரால் வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

## சந்தை நிலவரம்

- ஒரு கிலோ கிராம் சம்பா அரிசியின் சில்லறை விலை நிர்ணயம் 90 ரூபா
- ஒரு கிலோ கிராம் நாட்டரிசியின் விலை நிர்ணயம் 84 ரூபாவில் இருந்து 86 ரூபாவாகக் காணப்படுகின்றது
- ஒரு கிலோ கிராம் வெள்ளையரிசியின் விலை நிர்ணயம் 80 முதல் 83 ரூபாவாகக் காணப்படுகின்றது
- ஒரு கிலோ கிராம சம்பா அரிசியின் விலை நிர்ணயம் 112 ரூபாவில் இருந்து 145 ரூபாவாகக் காணப் படுகின்றது.
- அரச களஞ்சியசாலைகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள நெல் 2 இலட்சம் மெட்ரிக் தொன்.
- 2014, 2015 ஆம் ஆண்டுகளில் லக்சதொச ஊடான அரிசி இறக்குமதியில் ஏற்பட்ட நட்டம் 8 பில்லியன் ரூபா

## நெற்செய்கை

- குருநாகல் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ஏக்கர் வயல் காணி காணப்படுகிறது
- ஏறத்தாழ 19 ஆயிரம் ஏக்கரில் நெற் செய்கை இடம்பெற்றுள்ளது - 21%
- அம்பாறை மாவட்டத்தில் 8 இலட்சம் ஏக்கர் வயல் காணி காணப்படுகிறது
- ஏறத்தாழ 7 இலட்சம் ஏக்கரில் நெற் செய்கை இடம்பெற்றுள்ளது - 90%

# 2017 ஆம் ஆண்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படும் விவசாயிகள் தெரிவிப்பு

காலநிலையில் ஏற்பட்டுவருகின்ற சீரற்ற ஒவ்வாமை மாற்றங்களும் சந்தையில் காணப்படுகின்ற உரத்தட்டுப்பாடும் இம்முறை பெரும்போக நெற்செய்கைக்கான அறுவடையை உரிய காலத்தில் மேற்கொள்ளமுடியாத சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியுள்ளதாக விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலே கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டிற்கான பெரும்போக நெற்செய்கையின் அறுவடை மூலம் கிடைக்கவுள்ள விளைச்சல் என்பது அரைவாசியாகக் குறைவடையும் நிலை காணப்படுகின்றது.

அதிகளவில் நெல் பயிரிடப்படும் மாவட்டங்களான பொலன்னறுவை, அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய வற்றில் இம்முறை பெரும்போக நெற்செய்கை என்பது குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மருத்துவ மேம்பாடுகளுக்கு கொமர்ஷல் வங்கி நிதி உதவி

லேடி றிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனை மற்றும் தேசிய கண் மருத்துவமனை ஆகியவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென கொமர்ஷல் வங்கி நிதிப் பங்களிப்பினை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொமர்சல் வங்கியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புத் திட்டம் மற்றும் விரிவான சமூக மேம்பாட்டு பல்நோக்கு திட்டம் என்பவற்றின் அடிப்படையிலே சிறுவர் மருத்துவமனையில் அண்மையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இருதய சத்திர சிகிச்சை பிரிவுக்குத் தேவையான சுவாசக் கருவியை கொமர்ஷல் வங்கி அன்பளிப்புச் செய்துள்ளது. அதேபோன்று தேசிய கண் மருத்துவமனைக்கு வருகை தருபவர்களுக்கான சிற்றுண்டிச்சாலை அமைப்பதற்கான நிதி மூலத்தை வங்கி வழங்கியுள்ளது. வருடாந்தம் எறத்தாழ 500 சிறுவர்களுக்கு இங்கு மேலதிகமாக இருதய சத்திரசிகிச்சைகள் செய்யப்படவுள்ளதுடன்

தற்போது மேற்படி வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற இரண்டு இருதய சத்திர சிகிச்சைக் கூடங்கள் மூலமாக உரிய நேரத்தில் சிகிச்சை பெற முடியாமல் காத்திருக்கும் சிறுவர்களுக்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதுதொடர்பில் கருத்துரைத்துள்ள கொமர்ல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜெகன் துரைரட்ணம்,

கொழும்பில் உள்ள சிறுவர் வைத்தியசாலையில் அமைந்துள்ள இருதய சத்திர சிகிச்சை நிலையமே இலங்கையில் அர்ப்பணிப்போடு செயற்படும் சிறுவர்களுக்கான ஒரேயொரு நிலையமாகும். நாடு முழுவதும் பிறப்பிலேயே இருதயக் கோளாறை எதிர்நோக்கியுள்ள சிறுவர்களுக்கு இங்கு சத்திர சிகிச்சை அளிக்கப்படு கின்றது. அந்த வகையிலே சிறுவர் இருதய சத்திர சிகிச்சை நிலையத்துக்கான எமது நிதி உதவி என்பது இங்கு சத்திரசிகிச்சைகளை விரைவுபடுத்தி பல இளம் உயிர்களைக் காப்பாற்ற பங்களிப்பினை வழங்கும் என நம்புகின்றோம்– என்றார்

நுட்பம்

# கஸ்பர் கீ இன்ரர்நெற் பல்கருவி அறிமுகம்

கஸ்பர் கீ லாப் அதன் முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு தீர்வான கஸ்பர் கீ இன்ரர்நெற் செக்குறுட்டி 2017 பல்கருவியை அறிமுகம் செய்துள்ளது. கணினிப் பாவனையாளர்கள் தங்களது இணையத்தளப் பாதுகாப்பை முகாமைத்துவம் செய்வதற்கான மேலதிக வழிமுறைகளை கையாளவும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் என இந்த பல்கருவி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கஸ்பர் கீ இன்ரர்நெற் செக்குறுட்டி 2017 பல்கருவி என்பது முழுக் குடும்பத்திற்கும் ஏற்றதாகும். இதன் மூலம் விண்டோஸ், மக் மற்றும் அன்ரோயிட் பாவனையாளர் கணினியை மால் வெயார் டேஞ்சரஸ் சைற்ஸ், ஒன்லைன் றக்கிங் மோசடி மற்றும் பணம் களவாடப்படல் என்பவற்றில் இருந்து பாதுகாக்கிறது.

இந்த வருட கஸ்பர் கீ இன் விண்டோஸ் இற்கான டுயி தயாரிப்புக்கள் புதிய அம்சங்கள் பலவற்றை இணைத்துள்ளது. பாவனையாளர் கள் அவர்களது கருவிகளின் பாதுகாப்பில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளுக்கு இவற்றில் உள்ளடங்கியுள்ள சொவ்ற் வெயர் தரவேற்றம் மற்றும் சொவ்ற் வெயர் கிளினர் என்பவற்றினால் தீர்வு காண முடிகிறது.



Kaspersky Internet Securty (Trial) Antivirus 2017

அண்மையில் இணைக்கப்பட்டுள்ள மேற்படி இரண்டு புதிய செயற்பாடுகளும் கணினிப் பாதுகாப்பு மற்றும் துரித வேகம் என்பவற்றை நிலைபேறாக்குவதற்கென இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சகாராப் பாலைவனத்தில் 3 தசாப்த காலங்களின் பின்னர் பனிப் பொழிவு ஏற்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமே குறித்த பகுதியில் இறுதியாக பனிப் பொழிவு ஏற்பட்டது. அன் செப்ரா என்ற பாலைவன நகரப்பகுதியில் இருந்து, கரிம் புசேராரா என்ற ஒளிப்படக் கலைஞர் அதை ஒளிப்பதிவு செய்தார். (ம-எ)



# ஒரு ரூபாவுக்கு ஒரு சேலை

புதுடெல்லி, டிசெ. 23

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் உள்ள துணிக்கடை உரிமையாளர் ஒருவர் ஒரு ரூபாவுக்கு ஒரு சேலை விற்கிறார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

வழக்கமான மறைமுக விளம்பர யுத்திகள் ஏதுமின்றி, நேரடியாகவே ஒரு ரூபாவுக்கு ஒரு புடவை விற்கப்படுகிறது. ஒரேயொரு நிபந்தனை, சேலைக்கான தொகை ஒரு ரூபாத் தாளில் மட்டுமே (நடைமுறையிலிருந்து நீங்கிய) பெறப்படும். நாணயங்கள் ஏற்கப்படாது என்பதே.

ஆனாலும், ஏராளமான மக்கள், குறிப்பாக பெண்கள், பூஜை அறைகளிலும், உண்டியல்களிலும் முடங்கிக் கிடந்த பழைய ஒரு ரூபாத் தாள்களை எடுத்துக் கொண்டு குறித்த கடைக்கு படை யெடுக்கத் தொடங்கியுள்ளனர். கட்டுக்கடங்காத கூட்டத்தை அடுத்து கடைக்கு பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

கறுப்புப்பண நீக்கத்துக்காக மோடி எடுத்துள்ள நடவடிக்கைக்கு ஆதரவாகவும் பண்டிகைக் காலத்தைக் கொண்டாடுவதற்காகவும் ஒரு ரூபாவுக்கு ஒரு சேலையை வழங்குவது என்று முடிவெடுத்தேன். ஒரு லட்சம் சேலைகள் விற்பனையாகும் வரை இந்தச் சலுகைத்திட்டம் தொடரும் என்று கடையின் உரிமையாளர் சந்திரசேகர் பசார்கே தெரிவித்தார் என குறித்த ஊடகங்கள் மேலும் தெரிவித்தன. (ம-எ)

# அ.தி.மு. கழக பொதுச்செயலாளராக பொறுப்பை ஏற்க வேண்டும் சசிகலா

## முஸ்லிம் லீக் வலியுறுத்தல்



சென்னை, டிசெ. 23

தமிழ்நாட்டின் முக்கிய கட்சியான அ.தி.மு. கழக பொதுச் செயலாளராக சசிகலா பதவியேற்க வேண்டும் என்று தமிழ்நாட்டின் முஸ்லிம் லீக் வலியுறுத்தியது.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா உயிரிழந்ததை அடுத்து ஓ.பன்னீர்செல்வம் தற்போது முதலமைச்சராக உள்ளார். ஜெயலலிதா வகித்துவந்த அ.தி.மு. கழக பொதுச் செயலாளர் என்ற பதவியை இன்னும் எவரும் பொறுப்பேற்கவில்லை. சசிகலா, குறித்த பதவியைப் பொறுப்பேற்க வேண்டும் என்று பன்னீர்செல்வம் உட்பட பலரும் வலியுறுத்திய நிலையில் தமிழ் நாட்டின் முஸ்லிம் லீக்கும் அவ்வாறான ஒரு கருத்தைத் தெரிவித்தது.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் இன்ப, துன்பங்களில் பங்கேற்று உற்ற தோழியாக விளங்கிய சசிகலா, அ.தி.மு.க. தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளின் நலனுக்காக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று தமிழ்நாடு முஸ்லிம் லீக் தலைவர் எஸ்.முஸ்தபா தெரிவித்தார். (ம-எ)

# நைஜீரியாவில் பிளாஸ்ரிக் அரிசி

அபுஜா, டிசெ. 23

நைஜீரியாவில் 2.5 தொன் பிளாஸ்ரிக் அரிசிக் கடத்தல் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையில் முறியடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சீனாவில் கடந்த வருடம் பிளாஸ்ரிக் அரிசி கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, குறித்த வகை அரிசியை உலகின் பல நாடுகளுக்குக் கடத்துவதற்கு முனைப்புக் காட்டப்படுகிறது.

இத னால் ஒவ்வொரு நாடும் இந்த விவகாரத்தில் மிகவும் எச்சரிக்கையாக உள்ளன. இந்த நிலையில் நைஜீரியாவுக்குக் கடத்தப்பட இருந்த 2.5 தொன் பிளாஸ்ரிக் அரிசி நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது. (ம-எ)



# தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளராக கிரிஜா வைத்தியநாதன் நியமிக்கப்பட்டார்



தமிழகத்தின் புதிய தலைமைச் செயலாளராக கிரிஜா வைத்தியநாதன் நியமிக்கப்பட்டார்.

தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளராக இருந்த ராமமோகன ராவ் வீட்டில் நேற்றுமுன்தினம் வருமான வரித் துறையினர் அதிரடி சோதனை நடத்தினர். இந்த சோதனையில் பல முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். புதிய தலைமைச் செயலாளராக கிரிஜா வைத்தியநாதன் நியமிக்கப்பட்டார். இதற்கான உத்தரவை தமிழக ஆளுநா நேற்றுப் பிறப்பித்தார். (ம-எ)



# கொங்கோவில் வெடித்தது வன்முறை; துப

கொங்கோ மத்திய ஜனநாயகக் குடியரசு நாட்டில் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் நடத்திய போராட்டத்தின்போது அரச படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 26 பேர் கொல்லப்பட்டனர். கொங்கோ ஜனநாயகக் குடியரசு நாட்டில் தற்போதைய ஜனாதிபதி ஜோசப் கபிலாவின் ஆட்சிக்காலம் கடந்த 19 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. பதவிக் காலம் முடிந்த பின்னும் அதிபர் ஜோசப் கபிலா,

ஆட்சியை
விலகுவ
எந்த தெ
னால் ஜ
அந்நாட்
கட்சிகள்
களில் ஈ

# பின்ன
# வினவு
## மு
## என

அங்காரா, டிசெ.23

துருக்கிக்கான ரஷ்யாவின் தூதுவர் அன்றி கார்லோவ், பொலிஸ் உத்தியோகத்தர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதை அடுத்து, இந்தக் கொலையின் பின்னணியில் இருப்பது யார் என்று முழுமையான விசாரணை நடத்தி அறிக்கை தருமாறு துருக்கியைப் பணித்தார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்.

துருக்கித் தலைநகர் அங்காராவில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான சமகால கலை தொடர்பான கண்காட்சியில் கலந்துகொள்வதற்காக கார்லோவ் சென்றிருந்தார். நிகழ்ச்சியின் நடுவே புகுந்த ஆயுததாரி ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கார்லோவ் உயிரிழந்தார். துப்பாக்கிச் சூடு நடத்தியவர் மர்ம நபர் என்று ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்ட போதிலும் பின்னர் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவரது பெயர் ஆல்டின்டாஸ் என்பதும், அவர் துருக்கி பொலிஸ் உத்தியோகத்தர் என்பதும் தெரியவந்தது. பொலிஸ் உத்தியோகத்தரும் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் அவரது தந்தை, தாய் உட்பட உறவினர்கள் ஆறுபேரிடம் துருக்கிப் பொலிஸார் விசாரணையை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் விளாடிமிர் புடின் இவ்வாறு தெரிவித்தார்.

துருக்கிக்கான ரஷ்யாவின் தூதுவர் அன்றி கார்லோவின் செயற்பாடுகள் தொடர்பாக முழுமையான திருப்தியை வெளியிட்ட புடின், ரஷ்யத் தூதுவர் கார்லோவின் இழப்பு மிகவும் பெரியது. சிரியாவின் அலெப்போ விவகாரத்தில் ரஷ்யாவுக்கு எதிராக பல தரப்புக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ணியில் இருப்பது யார்?
# கிறார் விளாடிமிர் புடின்

## ழு அறிக்கை வேண்டும்
## ன்று துருக்கிக்குப் பணிப்பு



உள்ளன. அவற்றில் எவராவது கார்லோவின் கொலையின் பின்னணியில் இருக்கலாம் என்று எண்ணுகின்றேன். எனவே குறித்த விடயம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்துவது அவசியம். சிறந்த ஒரு விசாரணையை துருக்கி நடத்த வேண்டும். ரஷ்யாவிலிருந்தும் சில பிரதி நிதிகள் சென்று குறித்த விசாரணையில் பங்கெடுப்பார்கள். அதேநேரம் துருக்கியில் உள்ள ரஷ்யாவின் ஏனைய அதிகாரிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் புடின் மேலும் தெரிவித்தார். தூதர் கொல்லப்பட்ட விவகாரம், துருக்கி மற்றும் ரஷ்யா இடையிலான உறவைப் பாதிக்காது என்று துருக்கி ஜனாதிபதி ஏர்டகன் தெரிவித்திருந்த நிலையில் புடின் வெளிப்படுத்திய துலங்கல்கள் ஆரோக்கியமானதாகஇல்லைஎன்றுபொதுவான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. (ம-எ)



# நாய்களின் தந்தை

புதுடெல்லி, டிசெ. 23
இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் நபர் ஒருவர் 735 நாய்களைப் பராமரித்து வருகின்ற விடயம் பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தைப் பெற்றது.
ராகேஸ் சுக்லா என்ற மென் செயலி பொறியியலாளரான குறித்த நபரே அவ்வாறு நாய்களின் மீது தீராத பிரியம் உள்ளவராக உள்ளார். இவரிடம் பல்வேறு பட்ட வகையில் நாய்கள் உள்ளன. உரிமையாளர்களால் கைவிடப்பட்ட நாய்களை அவர் எடுத்து வளர்த்து வருகிறார்.
ஏராளமான நாய்களை வளர்ப்பது தொடர்பில் 45 வயதான சுக்லா, "10 வருடங்களுக்கு முன்னர் எனது மனைவியுடன் மென் செயலி நிறுவனத்தைச் சொந்தமாக நிறுவினேன். பெரிய அளவிலான வருமானம் கிடைத்த போதும் எனது மனதில் மகிழ்ச்சி இருக்கவில்லை. ஆடம்பரக் கார்கள், வீடுகள் என எதிரும் எனக்குத் திருப்தி கிடைக்கவில்லை. இதனையடுத்து 2009 ஆம் ஆண்டு தெருவில் ஓர் அழகான நாயைக் கண்டேன். அதன் பெயர் காவ்யா. நாய்களை வளர்ப்பதில் என்னை அறியாமல் எனக்குள் ஒருவித மகிழ்ச்சி உள்ளது. இன்று 700 இற்கும் மேற்பட்ட நாய்கள் என்னிடம் உள்ளன. அவற்றின் உணவுக்காக 200 கிலோ கோழி இறைச்சி, 200 கிலோ அரிசி தினமும் தேவைப்படுகிறது. நாய்களைப் பராமரிக்க 10 வேலையாள்கள், சிறப்பு மருத்துவர் ஆகியோரும் உள்ளனர்" எனத் தெரிவித்தார். நாள் ஒன்றுக்கு இலங்கை மதிப்பில் ஒன்றரை இலட்சம் ரூபா வரை சுக்லா செலவு செய்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-எ)

# இருபதாயிரம் மக்கள் நேற்றுமுன்தினம் மீட்

டமஸ்கஸ், டிசெ. 23
சிரியாவின் அலெப்போ நகரில் நேற்றுமுன்தினம் மட்டும் 20 ஆயிரம் மக்கள் மீட்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
சிரிய ஜனாதிபதி அல் அசாத்தைப் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்திவந்த குழு படிப்படியாக அரசுக்கு எதிரான ஆயுதக் குழுவாகவும் மாற்றம் பெற்றது. சிரியாவின் இரண்டாவது பெரியதும் முக்கிய நகரமுமான அலெப்போ கடந்த சில வருடங்களாக அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவின் பிடியிலிருந்தது. நகரை மீட்கும் போரில் சிரியாவுக்கு ரஷ்யா பெரும் ஆதரவை வழங்கியது. ஈரானும் ஆதரவு வழங்கியது. அலெப்போ நகர் தற்போது அரச படையால் மீட்கப்பட்டுள்ளது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி அங்கு அல்லற்படுகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபை குற்றஞ்சுமத்தியது.
அலெப்போ ரிவ
ரத்தை அவதானி
கண்காணிப்புக் கு
களையும் ஐ.நா. ச
அனுப்பியுள்ளது. அ
களின் மேற்பார்
யிலேயே தற்போ
மீட்புப் பணிகள் இ
பெறுகின்றன என
தெரிவிக்கப்பட்டது.
நேற்றுமுன்தினம்
டும் 20 ஆயிரம்
கள் மீட்கப்பட்டனர்.
களை மீட்பதற்க
கிட்டத்தட்ட 60 பே
துகள் பணியில்
படுத்தப்பட்டுள்ள
(ம



# பாக்கிச் சூட்டில் 26 பேர் சாவு

ய விட்டு எப்போது
ார் என்பது குறித்து
ளிவும் இல்லை. இத
னாதிபதிக்கு எதிராக
டின் பல்வேறு எதிர்க்
தொடர்ந்து போராட்டங்
டுபட்டு வருகின்றன.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் எல்லைமீறிச் சென்றதை அடுத்து அரச படைகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 26 கொல்லப்பட்டனர். ஏராளமானவர்கள் கைதுசய்யப்பட்டனர். (ம-எ)

# 27 நிமிடங்களில் 3,772 அடி பாலம்

பீஜிங், டிசெ. 23
சீனாவில் 27 நிமிடங்களில் 3 ஆயிரத்து 772 அடி நீளமான பாலத்தை அந்தநாட்டு சிப்பாய்கள் கட்டி முடித்தமை பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தைப் பெற்றது.
இராணுவப் பயிற்சியின் ஒரு அங்கமாக யாசி ஆற்றுக்குக் குறுக்காக சிப்பாய்களினால் குறித்த பாலம் அமைக்கப்பட்டது. அதிநவீன உபகரணங்களைக் கொண்டு சீனாவின் மிக நீண்ட பாலம் கட்டப்பட்டது. இந்தக் கட்டுமானப்பணி சீனர்களின் நுட்பத்தையும், அவர்களது உபகரண வளத்தையும் காட்டுவதாக அமைந்துள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மாகாணசபை அதிகாரங்களை அபகரிக்க இடமளிக்காதீர்

அபிவிருத்தி சிறப்பு ஏற்பாடுகள் சட்டமுன் வரைவானது, 2017 பெப்ரவரியில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுவிடும் என்று அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம அறிவித்திருக்கிறார். இந்தச் சட்ட முன் வரைவானது, அதற்குள் மாகாணசபைகளின் அங்கீகாரத்தைப் பெற்றுவிடும் என்பது அமைச்சரின் நம்பிக்கை.

மிகுந்த சர்ச்சைக்குரியதாகத் தோற்றும் இந்த உத்தேசச் சட்டமானது, அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பலவற்றை மத்தியஅரசு தன் கையில் வைத்துக் கொள்வதற்கான முயற்சி என்று பல சிவில் நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொற்ப அதிகாரங்களையும் கபளீகரம் செய்வதே இந்தப் புதிய சட்டத்தின் நோக்கம் என்கிறார்கள் அவர்கள். 13ஆவது திருத்தத்துக்கும் மேலதிகமாக அதிகாரங்களை வழங்குவார் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்தியாவுக்கும் ஐ.நா.செயலாளர் நாயகத்துக்கும் வெளிப்படையாக வாக்களித்து விட்டுப், பின்னர் 13ஆவது திருத்தத்தையே இல்லாமல் செய்துவிட எத்தனித்துக் கொண்டிருந்தவர். அதன் காரணமாக அவரைத் தேர்தலில் தடம் புரள வைத்தார்கள் தமிழ் பேசும் மக்கள். மகிந்த செய்யத்துணிந்து தோல்வியுற்ற கைங்கரியத்தை ரணில் விக்கிரமசிங்கவின் அரசு தற்போது மறைமுகமாகச் செயற்படுத்தத் துணிகிறதா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. இந்தப் புதிய சட்டத்தின் மூலம் சிறப்பு அதிகாரங்கள் கொண்ட அமைச்சர் ஒருவர் உருவாக்கப்படுவார் என்ற சந்தேகமும் கிளப்பப்படுகிறது. அவ்வாறான அமைச்சர் பதவி உருவாக்கப்படமாட்டாது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரைப் போலவே நாங்களும் அதை எதிர்க்கிறோம் என்று ஐ.தே.க.உறுப்பினரான அமைச்சர் மலிக் சமரவிக்கிரம கூறியுள்ளார். முதலீடுகள் தொடர்பான சட்ட விவகாரங்கள் ஏற்படும்போது, அவைகளைக் கையாளும் உயர்மட்ட முகவர் அமைப்பை உருவாக்குவதே இதன் நோக்கம் என்று அமைச்சர் சமரவிக்கிரம விளக்கியுள்ளார். அதே சமயம், தொழில்துறைகளில் ஈடுபடுகின்ற அமைச்சுகள் யாவற்றையும் ஒன்றாக இணைந்து செயற்பட வைப்பதாக அது இருக்கும் என்றார். எதிர்வரும் 26ஆம் திகதி மாகாண முதலமைச்சர்களைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்திக்கவிருப்பதாகவும், அந்தச் சமயம் இந்தப் புதிய சட்ட முன்வரைவின் விவரங்களை அவர்களுக்குப் பிரதமர் விளக்குவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சட்டமானது, அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் மூலமான அதிகாரங்கள் பலவற்றை பறித் தெடுக்கப் போகின்றது என மேல் மாகாணசபை முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய ஏற்கனவே போர்க் கொடி தூக்கியுள்ளார். சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர்கள் அனைவரும் இந்தச் சட்டத்தை எதிர்ப்பார்கள் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

அபிவிருத்தியை முடுக்கிவிடுவதற்கான ஓர் அமைப்பை உருவாக்குவதை நாம் எதிர்க்கப் போவதில்லை. ஆனால் 13வது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை இடமாற்றும் முயற்சியை அனுமதிக்கமாட் டோம் என்றார் அவர். குறித்த சட்ட முன்வரைவு, இப்போது மாகாணசபைகளின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயப்பதான புதிய சட்டங்கள் வரவேற்கப்பட வேண்டியவையே. ஆனால் மாகாண சபைகளிடமிருக்கும் அதிகாரங்களை விட்டுகொடுத்து விடலாகாது.

தமிழ் மக்கள் நடத்திவந்த பல்வேறு போராட்டங்களின் பின்னர் இந்திய நாட்டின் தலையீட்டின் மூலம் மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. அந்தச் சபைகளுக்கான அதிகாரங்கள் இன்னமும் முழுமையாக வழங்கப்படாத நிலையில், இருப்பவற்றையும் தந்திரமாக அபகரிக்க முயற்சிக்கப்படுமானால், அது மூர்க்கமாக எதிர்க்கப்பட வேண்டியதாகும். அவ்வாறாக அந்தச் சட்டம் அமையுமானால், ஏனைய மாகாண சபைகளை விட, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தான் இதில் முன் நின்று போராட வேண்டும்.

இது விடயத்தில்வடக்கு மாகாண முதல்வர் என்ன நிலைப்பாட்டில் இருக்கிறார் என்பது இன்னமும் தெரியவரவில்லை.

# சின்னம்மா காவல் தெய்வமாம்!

“கழகமே கோவில்! அம்மாவே தெய்வம்! அதில் சின்னம்மாவே காவல் தெய்வம்! என, சசிகலாவைக் கடுமையாகப் புகழ்ந்து தள்ளுகிறார்கள்.”

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சுகவீனம் காரணமாக சாவடைந்ததைத் தொடர்ந்து, அவரது நெருங்கிய தோழி சசிகலா, அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் பதவியை ஏற்கும் நிலை உருவாகியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன. இந்த நிலையில் சமூக வலைத்தளங்களில் இந்த விடயம் குறித்த வாதப் பிரதிவாதங்கள் சூடு பிடித்துள்ளன.



முதலில் போற்றி! போற்றி! வகையிலான பதிவுகளை முகநூலில் பார்ப்போம்!

கழகமே கோவில்! அம்மாவே தெய்வம்! அதில் சின்னம்மாவே காவல் தெய்வம்! என, சசிகலாவைக்கடுமையாகப்புகழ்ந்து தள்ளுகிறார்கள்.

சசிகலா நடராஜன் மற்றும் சின்னம்மா பேரவை என்ற பெயரில் இயங்குபவர்கள், சசிகலாவைத் தமிழ்நாட்டின் இளவரசி என்று வர்ணிக்கிறார்கள். பல்புனை பெயர்களுடன் ஜெ.வை குறிப்பிடுவதுபோல, இரும்புப் பெண்மணி என்றும் துதி பாடுகின்றனர்.

திவாகரன், தினகரன் என, சசிகலா உறவினர்கள் பலரும் இங்கே தியாகிகளாகச் சித்தரிக்கப்படுகின்றனர். ஜெயலலிதா அரசியலில் அடியெடுத்து வைத்த காலத்தில், திவாகரனும் தினகரனும் ஜெயலலிதாவுக்காகக் கடுமையாக உழைத்ததாகப் புகழ்ந்து தள்ளுகின்றனர். ஜெயலலிதாவின் அரசியல் வளர்ச்சிக்காக கடுமையாக உழைத்தாராம் ம.நடராசன். அதை நடராசனே பின்னாளில் “ஜெயலலிதாவை முதலமைச்சர் ஆக்குவதற்காக நாங்கள் பல காரியங்கள் செய்தோம். அதையெல்லாம் வெளியில் சொல்ல முடியாது” எனச் சொன்னாராம். இன்று வரையிலும் அவர் ரகசியம் காத்து வருகிறாராம்.

### ஜெ. தனி மரமாம்! தோப்பு மன்னார்குடி குடும்பமாம்!

சசிகலாவும் தவ வாழ்க்கை மேற்கொண்டவர் தானாம். “ஜெயலலிதாவின் ஒற்றை நம்பிக்கை நட்சத்திரம் நீங்கள்தான்! நீங்கள் இல்லையென்றால், ஜெயலலிதாவால் எங்கும் நகர்ந்திருக்க முடியாது. உங்களால்தான் ஜெயலலிதாவுக்கு அனைத்து விதமான பாதுகாப்பும் அளிக்க முடிந்தது. எவரும் ஜெயலலிதாவை நெருங்க முடியாத அரணாக நீங்கள் தான் இருந்தீர்கள். ஜெயலலிதா என்னும் தனிமரத்தை உங்கள் தோப்பில் வைத்துப் பாதுகாத்தீர்கள்" என்று சிலாகித்துச் சொல்கிறார் முரளி நடராசன் ஓந்திரியார் என்பவர்.

### சின்னம்மா என்று அழைக்கச் சொன்னது ஜெ. தானாம்!

சசிகலாவை ‘சின்னம்மா' என்று ஏன் அழைக்கிறார்கள் தெரியுமா? முதல் முறையாக முதலமைச்சராக ஜெ. பதவியேற்ற நேரத்தில், போயஸ் கார்டனில், அமைச்சர்கள் மற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அந்த விவாதத்தில் சசிகலாவும் பங்கேற்றார். அப்போது, அதிகாரிகள் சசிகலாவை ‘மேடம்' என்று அழைத்தார்கள். உடனே ஜெயலலிதா, ‘சசிகலாவை சின்னம்மான்னு சொல்லுங்க..' என்றார். அன்றிலிருந்து சின்னம்மா ஆனார் சசிகலா என்கிறது ஒரு பதிவு.

### ஜெ. உடல் அருகே நிற்கும் தகுதி பெற்றவர்களாம்!

ஜெயலலிதாவின் உடல் அருகே மன்னார்குடி குடும்பத்தினர் ஏன் நின்றார்கள் என்று கேட்பவர்களுக்கான பதில் இதோ. தாயாக இருந்து ஜெயலலிதாவைக் காத்த உயிர்த் தோழி சசிகலா. பல இக்கட்டான நேரங்களில் ஜெயலலிதாவுக்குப் பாதுகாப்பு அளித்து அவர் உயிரைக் காப்பாற்றியவர் திவாகரன். ஜெயலலிதாவின் ஹைதராபாத் திராட்சைத் தோட்டத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வகித்தபோது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் ஜெயராமன். அவரது மனைவிதான் இளவரசி. கணவனை இழந்த அவரையும், அவரது குழந்தைகளையும் தன்னுடன் தங்க வைத்தார் ஜெயலலிதா. அவருக்கு அனைத்துப் பணிவிடைகளையும் செய்து வந்தார் இளவரசி. அதிமுக வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டவர் தினகரன். ஜெயலலிதாவின் நம்பிக் கைக்கு உரியவர்.

இளவரசியின் மகன் விவேக், தந்தை ஜெயராமனை இழந்த வேளை முதல் ஜெயலலிதாவின் அரவணைப்பில் வளர்ந்தவர். ஜெயலலிதாவின் நிர்வாகங்களில் பெரும் உதவியாக இருந்தவர். திவாகரனின் மகனான ஜெய் ஆனந்த் போயஸ் கார்டனிலேயே வளர்ந்தவர். விவேக்கும், ஜெய் ஆனந்தும் மூத்த அத்தையாகவே பாவித்து, ஜெயலலிதா மீது பாசம் காட்டி வந்தனர்.

இப்படி சசிகலா குடும்பத்தினர் அத்தனைபேரும் ஜெயலலிதாவுக்காகவே வாழ்ந்து வருபவர்கள். ஜெயலலிதா இறந்தபோது, அவரது உடல் அருகில் இவர்கள் இருந்ததில் என்ன தவறு? என்று கேட்கிறார் ஒரு ஆதரவாளர்.



**சசிகலாவின் ஆட்சி 9 ஆண்டுகளாம்! நாஸ்டர்டாமே கணித்து விட்டாராம்!**

மேலை நாட்டு தீர்க்கதரிசி எனப்படும் நாஸ்டர்டாமையும் சசிகலாவின் ஆதரவாளர்கள் விட்டு வைக்கவில்லை. கிரக நிலைகளைக் கணக்கிட்டு ஜோதிடம் சொல்லும் நாஸ்டர்டாம், 4 வரி செய்யுள் வடிவில், 'இது ஜோதிடத்தின் தீர்ப்பு' என்று திட்டவட்டமாகவெளியிட்ட கருத்துக்களில்ஒன்றை மேற்கோள் காட்டுகிறார்கள். அந்தக் கருத்து இதுதானாம் -

அந்தக் கருத்தின் தமிழ் அர்த்தத்தை கூகுள் 'டிரான்ஸ்லேட்டில்' தெரிந்து கொண்டு இப்படிச் சொல்கிறார்கள்.

கிரேக்கம் கடவுள்.. இரும்பு பெண்மணி காப்பாற்ற முடியாது..

அவரது மாஸ்டர் அடுத்த நாள் சாவடைய. அவரது மூன்று பழங்குடியினர், பெண் நண்பர் ஒன்பது ஆண்டுகள் ஆட்சி செய்யும்.. பூமியின் மூன்று நீர் சூப்பர் பவர் ஆகிவிடுவார்கள். என்கிறதாம் நாஸ்டர்டாம் கணிப்பு.

ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத வரிகள் போல் இவை இருக்கிறதல்லவா? ஆனால், இந்தச் செய்யுளில் ஆழ்ந்த பொருள் உள்ளது என்று அதனை விவரிக்கிறார்கள் அவர்கள். அப்பலோ என்பது கிரேக்கக் கடவுள். இரும்புப் பெண்மணி என அழைக்கப்படும் ஜெயலலிதா சிகிச்சை பலனின்றி, அப்பலோவில் சாவடைவார். அவரது அரசியல் ஆலோசகரான 'துக்ளக் சோ' ஜெயலலிதாவின் சாவுக்கு அடுத்த நாள் சாவடைவார். ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியான சசிகலா ஒன்பது ஆண்டுகள் காலம் தமிழகத்தை ஆட்சி செய்வார் என கூகுள் மொழி பெயர்த்துள்ளதாக விவரிக்கிறார்கள்.

**கணிப்பு**

இந்த அளவுக்கு நாங்கள் சாத்தியமான கருத்துக்களை எடுத்துச் சொல்லியும், உங்கள் பார்வையில் சசிகலா ஒரு கெட்டவராக தெரிந்தால், ஜெயலலிதாவுக்குத் தோழியாக இருந்தது மட்டுமே அவர் செய்த பாவமாக இருக்கும் என்று தங்கள் விருப்பப்படி சிலர் முகநூலில் பதிவிட்டு வருகிறார்கள்.

**சசிகலா நடராஜன் மற்றும் சின்னம்மா பேரவை என்ற பெயரில் இயங்குபவர்கள், சசிகலாவைத் தமிழ்நாட்டின் இளவரசி என்று வர்ணிக்கிறார்கள். பல புனை பெயர்களுடன் ஜெ.வை குறிப்பிடுவதுபோல இரும்புப் பெண்மணி என்றும் துதிபாடுகின்றனர்.**

**தீபாவின் தந்தை எங்கே போனார்?**

இந்த விவகாரத்துக்குள் தீபா குடும்பத்தினரையும் இழுக்கிறார்கள். ஜெயலலிதாவின் தாயார் சந்தியா இறந்தபோது, தீபாவின் தந்தை எங்கே போனார்? சட்ட சபையில் ஜெயலலிதாவை மானபங்கப்படுத்த முயற்சி நடந்தபோது, தீபாவின் அப்பா ஏன் காப்பாற்ற முன் வரவில்லை? இது என்ன மன்னராட்சியா? ஜெயலலிதாவுக்கு பிறகு அவரது அண்ணன் மகள் தீபா தான் ஜெயலலிதாவின் அரசியல் வாரிசாக முடியும் என்று எப்படிச் சொல்ல முடியும்? என்றெல்லாம் சசிகலா ஆதரவாளர்கள் காரசாரமாகக் கேள்வி கேட்கிறார்கள். அடி முட்டாள் மேதாவிகளே! உங்களுக்கு சொல்புத்தி அல்லது சுயபுத்தி என்பதே இல்லையா? என்று சசிகலாவை எதிர்ப்பவர்களை சகட்டுமேனிக்கு திட்டுகிறார்கள், சசிகலாவின் ஆதரவாளர்கள்.

**ஜெ.வுக்குத் தோழியாக ஆதாயம் இல்லாமலா இருந்தார் சசிகலா?**

சசிகலாவுக்கு ஆதரவான இத்தகைய பதிவுகளுக்கு, நெத்தியடியாக பலரும் தமது கருத்துக்களைப் பதிவிட்டு வருகின்றனர். சசிகலா மாதிரி ஒரு தியாகியை நாம் பார்க்க முடியாது. உண்மையில் அவர் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் விட்டார். ஜெயலலிதாவை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, ஆட்சி, அதிகாரத்தில் தலையிட்டு, பல முறை கேடுகளில் ஈடுபட்டு, தன் பெயரிலும், தன் சொந்த பந்தங்களான, மன்னார்குடியைச் சேர்ந்த 27 குடும்பங்களின் பெயர்களிலும், கோடி கோடியாக சொத்துக்களைக் குவிப்பதற்குச் சசிகலா என்ன பாடுபட்டிருப்பார்? சோழியன் குடுமி சும்மா ஆடாது எனச் சொல்வதுபோல, ஆதாயம் கருதியே இத்தனை ஆண்டுகள் ஜெயலலிதாவுக்குத் தோழியாக இருந்தார் சசிகலா. இப்போது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறார்கள் சசிகலாவின் ஆதரவாளர்கள். அது நடக்கவே நடக்காது. ஒருக்காலும் சசிகலாவால் அதிமுக தொண்டர்களின் ஆதரவையோ, பொது மக்களின் அபிமானத்தையோ பெற்று விட முடியாது. கூழைக் கும்பிடு போடும், நெடுஞ்சாண் கிடையாக காலில் விழும் அமைச்சர்களும், அதிமுக நிர்வாகிகளும் வேண்டுமானால், பதவிக்காக, பணத்துக்காக, சசிகலாவை சின்ன அம்மா என்று போலி மரியாதை காட்டி நடிக்கலாம். ஆனால், அ.தி.மு.கவுக்கு விசுவாசமாககட்சித்தொண்டர்களுக்கும், மக்களுக்கும் நடிக்க வேண்டியஅவசியம்இல்லை, என நக்கலாகவும் அதே சமயம் ஆத்திரத்துடனும் சசிகலா மீது அதிருப்தி கொண்டோர் கூறுகின்றனர்.

**சின்னச் சின்னம்மா பட்டம் செரினாவுக்கு இல்லை!**

சின்னச்சின்னம்மாசெரீனா பேரவை தொடங்கியாச்சாமே? என்று சந்திரன் என்பவர் கிண்டலாகத் தமது முகநூல் பதிவில் கேட்கிறார். இதற்கு பின்னூட்டம் இடும் ஜெய் சான் என்பவர், சின்னச் சின்னம்மா பட்டத்தை ஏற்கனவே இளவரசிக்குக் கொடுத்தாயிற்று. செரினாவுக்கு வேறு ஏதாவது பட்டம் இருந்தா கொடுங்க. அப்படி நீங்க செய்யாவிடில், மன்னார்குடி குடும்பத்தினர் உங்களை உண்டு இல்லையென ஆக்கி விடுவார்கள் என அவர் தமது முக நூலில் கேட்கிறார். சசிகலாவையும், அவரது சொந்த பந்தங்களையும் இப்படிக் கேலி செய்து விமர்சிப்போர் நிறையப் பேர் இருக்கிறார்கள்.

பொதுவான பார்வையில், சசிகலாவை ஆதரிக்கும் நவீன காலத்துத் தமிழ் இளைஞர்கள், அறிந்தோ, அறியாமலோ, கொஞ்சம் முன்னேறி 1980துகளின் வரலாற்றுக்குப் போயிருக்கிறார்கள். இன்னமும் பின்னோக்கிச் சென்று, 1920களில் இருந்து வரலாற்றை புரட்டிப் பார்த்தால், தமிழக அரசியல் குறித்த கூடுதல் தெளிவைப் பெற முடியும். என்கிறார் சந்திரன் தனது முகநூல் பதிவில். அந்த வகையில் தமிழகம் அரசியல் தெளிவு பெறும் நாள் வெகு தூரத்தில் இல்லை!

*- நன்றி: நக்கீரன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகர் திருமுகம்

## யாழ்.பண்ணை வீதிக்கு வெளிச்சவசதி கிட்டுமா?

யாழ்.நகரம் தற்பொழுது உல்லாசப் பிரயாணிகளைக் கவருகின்ற இடமாகத் தன்னை உருமாற்றி வருகின்றது. பல தரப்பட்ட யாழ்.நகர வாசிகள் தமது உடல், உள ஆரோக்கியத்தைப் பேணும் வகையில் யாழ். பண்ணை வீதியிலும் அதை அண்டியுள்ள பகுதிகளிலும் அண்மைக்காலமாகத் தினமும் மாலை மற்றும் அதிகாலை வேளைகளில் உடற்பயிற்சியில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. ஆயினும், யாழ்.பண்ணை வீதியில் இருமருங்கிலும் வீதியோர விளக்குகள் பொருத்தப்படவில்லை. இந்த முக்கிய வீதி, இரவு வேளைகளில் வெளிச்சமின்றி இருப்பது பாதசாரிகளுக்கு மட்டுமல்லாது இரவில் பயணிக்கின்ற வாகனங்களுக்கும் இடையூறாக அமைகின்றது. இது குறித்து சம்பந்தப்பட்ட துறையினர் அக்கறை செலுத்தி, தேவையான வெளிச்ச வசதி ஏற்படுத்தி உதவுவார்களா?

*ஜெ.தனேஸ்குமார், யாழ்ப்பாணம்*

## சமூக நலனில் அக்கறை காட்டல் அவசியம்

நாய்க்கடிக்கு இலக்கான குடும்பப் பெண்ணொருவர் அண்மையில் உயிரிழந்த சம்பவத்துக்கு சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகளைக் குற்றம் சுமத்த முனைகின்றனர் சிலர். கட்டாக்காலி நாய் விடயத்தை எடுத்துக் கொண்டால், மக்கள் பலராலும் வளர்க்கப்படும் பெண்நாய்கள் ஈனும் பெண்குட்டிகளை, சந்தைகளிலும், கோயில்களிலும், வீதிகளிலும், பொது இடங்களிலும் அநாதரவாக, அதுவும் இரகசியமாகக் கைவிட்டுச் செல்வதே கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்துக்குக் பிரதான காரணமாகும். காலத்துக்குக் காலம் நாய்களுக்கு இலவசக் கருத்தடைச் சிகிச்சைகளை செய்விக்க வசதி செய்து கொடுக்கிறது. இதைப் பலரும் பயன்படுத்திக் கொள்வதில்லை. சுகாதார அதிகாரி பிரிவுகள் மூலம் விசர்த் தடுப்பு ஊசிகள் நாய்களுக்குப் போடப்படுகின்றன. நாய் வளர்ப்போர் பலரும் இதில் அக்கறை கொள்வதில்லை. மற்றும் சிலர் தமது கடிநாய்களைச் சரியாகக் கட்டியோ, கட்டுப்பாட்டில் வைத்தோ வளர்ப்பதில்லை. வீட்டு நாய்கடித்தால் விசர் வராது; தெரு நாய் கடித்தே விசர் வரும் என்றில்லை. சரியான முறையில் விசர்த்தடுப்பூசி ஏற்றாத வீட்டுநாய்க் கடிகளும் நாய்க்கு விசத்தொற்று ஏற்பட்டிருக்குமானால், விசர் நோயை ஏற்படுத்த வல்லவையே. ஆனால், வீட்டு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டிருக்கும் வாய்ப்புகள் உண்டு. அதுமட்டுமன்றி, அவற்றை ஓரளவுக்கு அவதானிக்கவும் முடியும். எனவே விரைந்து செயற்படலாம்.

மொத்தத்தில், எம்மவர்கள் பொது நலனில் அக்கறையுடனும், புரிந்துணர்வுடனும் நடந்து கொள்வதே இவ்வாறான பிரச்சினைக்குத் தீர்வாக அமையமுடியும்.

*வை.சனந்தனசேகரம், பருத்தித்துறை*



# நிலா

தங்க நிலா ஓடி வா
தவழ்ந்து தவழ்ந்து மேலே வா!
எங்கும் ஒளி பாய்ச்ச வா
பாடம் சொல்லிக் கொடுக்க வா!
கூடிக் கணக்குப் போடவா
பாடிப் பாடி ஆட வா!
பரந்த முகம் காட்ட வா
கோடிப் பூக்கள் பறித்து வா!
கொண்டையிலே சூட்ட வா!

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



ஏழைகள்
வயிறு எரியச் செய்வது பாவம்.
பசித்தோர் முகத்தை பாராதிருப்பது பாவம்.
கோள் சொல்லி குடும்பம் கலைப்பது பாவம்.
குருவை வணங்க கூசி நிற்பது பாவம்.

*சுவாமி வள்ளலார்*



## இலங்கை



கொடி– சிங்கக் கொடி
சின்னம்– வாளேந்திய சிங்கம்
தேசிய கீதம்– சிறீலங்கா தாயே
வண்ணத்துப் பூச்சி– இலங்கை அழகி
பறவை– இலங்கைக் காட்டுக்கோழி
பூ– நீல அல்லி
மரம்–நாகமரம்
விளையாட்டு–கரப்பந்தாட்டம்
மிருகம்– பழுப்பு மலை அணில்

## நல்லதும் கெட்டதும்



தூண்டில் முள்ளில் குத்தப்பட்டிருந்த புழு துடித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த ஒரு மீன், ஆகா, மனிதனின் கருணையே கருணை! எனக்காக அவன் எங்கேயோ இருந்த புழுவைத் தேடிப்பிடித்துத் தூண்டி முள்ளில் வேறு குத்தி, தண்ணீருக்குள் அல்லவா விட்டிருக்கிறான்? என்றது நன்றியுடன்.

அட முட்டாளே! கருணையாவது, கத்தரிக்காயாவது? அவன் உன்னைப் பிடித்துச் சாப்பிடுவதற்காக அல்லவா அதை ஏவி விட்டிருக்கின்றான்! என்றது தவளை.

நன்றிகெட்டதனமாகப் பேசாதே! எப்போதும் நல்லதையே நினை. நல்லது நினைத்தால் நல்லது நடக்கும்; கெட்டது நினைத்தால் கெட்டது நடக்கும்! என்றதுஅது.

செய் அப்பனே, செய்; உனக்கு எது நல்லதோ அதையே செய்! என்றது இது.

அவ்வளவுதான்; துடித்துக் கொண்டிருந்த புழுவை விழுங்கிய மீனும் துடித்துக்கொண்டே அய்யோ ஏமாந்தேனே! என்றது பரிதாப மாக.

நன்றிகெட்டதனமாகப் பேசாதே! கெட்டதை நினைத்தால் கெட்டது நடக்கும்; நல்லதை நினைத்தால் நல்லது நடக்கும்! என்றது தவளை.





## தகவல்கள் சில....

- ☆ ஸ்விப்ட் என்ற பறவை மணிக்கு 170 கி.மீ. வேகத்தில் பறக்கும்.
- ☆ தமிழில் சுருக்கெழுத்து முறையை கண்டுபிடித்தவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த சாகிப் எம். சீனிவாசராவ்.
- ☆ உலகிலுள்ள எல்லா அணு ஆயுதங்களும் கூட்டாக வெளிப்படுத்துகின்ற சக்தியை விடவும் அதிகமான சக்தியை 10 நிமிட சூறாவளி ஏற்படுத்துகின்றதாம்.
- ☆ குளிர் நீரை விட சூடாக்கிய நீரே நிறை கூடியதாகும்.
- ☆ ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மித்ரா என்ற பறவை ஒன்பது நிறத்தில் தெரியும்.
- ☆ தமிழில் தயாரிக்கப்பட்ட முதல் திரைப் படம் கீதகவசம்.
- ☆ புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ. வரை பறக்கும் திறன் படைத்தது.
- ☆ இந்திய கணித மேதை ராமானுஜர் கண்டுபிடித்த கணித உண்மைகள் 4000ஆகும்.
- ☆ கணித சூத்திரங்களால் கண்டு பிடிக்கப்பட்ட கிரகம் நெப்டியூன்.






## வரலாற்றில் இன்றைய தினம்

1914 - முதலாம் உலகப் போர் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து துருப்புக்கள் எகிப்தின் கெய்ரோவை வந்தடைந்தன.

1968 - வடகொரியாவால் 11 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்க USS பியூபெலோ கப்பலில் இருந்த 82 பேர் விடுவிக்கப்பட்டனர்.

1979 - ஆப்கான் தலைநகர் காபூல் சோவியத் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டது.

1988 - யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு நீக்கப்பட்டதாக அறிவிப்பு.

- அவசரகாலச் சட்டம் அடுத்த 15 முதல் நீக்கம். கைதானோர் விடுதலையாவர் என செய்தியாளர் மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவிப்பு.

1993 - தப்பியோடிய இராணுவத்தினர் இதுவரை 22500; என்ற எண்ணிக்கையைத் தொட்டு விட்டது. பொலிஸாரின் தேடுதல் தீவிரம்.

- பிடல் காஸ்ரோவின் மகளுக்கு அமெரிக்காவில் தஞ்சம்.

1999 - இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஜனாதிபதியின் உறுதியான நடவடிக்கைகளுக்கு ஆதரவென ரணில் தெரிவிப்பு.

- முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகரைக் கொலை செய்ய முயற்சி; துப்பாக்கிச் சூட்டில் அவரின் சகோதரி, மகள் சாவு.

2005 - யாழ். பொலிஸ் நிலையம் சிவில் நிர்வாகச் செயற்பாடுகளை பொலிஸாரின் பாதுகாப்புக் கருதி நிறுத்தியது.

- அரசு நீடிக்கும் அவசரகாலச் சட்டம் தமிழ் மக்களின் அவமானச் சின்னமென தமிழ்ச்செல்வனை சந்தித்த பின் மனோ கணேசன் தெரிவிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் 2017 – 2020

சுப ஸ்ரீ துன்முகி வருடம் தை மாதம் (26.01.2017) 13ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7:29 மணியளவில் சனிபகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுசு ராசிக்குள் பிரவேசிக்கிறார். இங்கு அவர் 24.01.2020 வரை 3 ஆண்டுகள் சஞ்சாரம் செய்கிறார்.




சித்திரை 3ஆம், 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம். (ர, ரா, ரி, ரு, ரே, ரோ, த, தா, நி, து, தே போன்ற எழுத்துக்களில் பெயரை முதல் எழுத்தாக கொண்டவர்களும் ஐப்பசி மாதத்தில் பிறந்தவர்களுக்கு இந்தப் பலன் பொருந்தும்)

வான மண்டலத்தில் 7ஆவது ராசியாக வலம் வரும் உங்கள் ராசிநாதனான சுக்கிரன் நவக்கிரகங்களில் சுபக்கிரகமாகவும் உலகில் உள்ள அனைத்து இன்பங்களையும் அனுபவிக்கும் வாய்ப்பும், சந்தர்ப்பத்தையும் வழங்கவல்லவராகவும் இருக்கிறார். கலை என்ற வார்த்தைக்கு சுக்கிரன் என்று அர்த்தம் உள்ள சுக்கிரன் வீட்டில் பிறந்த நீங்கள் நல்ல வசீகர தோற்றமும் நல்ல வார்த்தைகளைப் பேசுபவராகவும் விளங்குவீர்கள். உங்களுடன் தொடர்பு கொள்ளப் பலர் விரும்புவர். எவருக்கும் தீங்கு நினைக்காத நீங்கள் எல்லா வாய்ப்புக்களும் உங்களைத் தேடி வருவதையே விரும்புவீர்கள். கடமை உணர்வோடு செயற்படுவதிலும் மற்றவர்களுக்கு உதவி செய்வதிலும் வல்லவர் நீங்கள்.

இது வரை உங்கள் ராசிக்கு 2ஆம் இடமான குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரித்த சனிபகவான் செல்லொணாத் துயர், வேதனைகளையும், விரயங்கள் மற்றும் பிரச்சினைகளையும் கொடுத்து வந்தார். அவர் இப்பொழுது உங்கள் ராசிக்கு 3ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்வது சிறப்பு ஆகும். இது வரை பட்ட கஷ்டத்திற்கு ஒரு விடிவு காலமாகும். இக்காலங்களில் உங்கள் மனதில் இனம் புரியாத உற்சாகம் இருந்து கொண்டே இருக்கும். இதுவரை நடவாமல் தள்ளிப்போன சுபகாரியங்கள் நடைபெறும் காலமிது. எடுக்கும் முயற்சியில் வெற்றியும், புதிய விடயங்களைக் கற்பதில் ஆர்வமும் கூடும். தனவரவு பொருள் வரவுடன் பணப் புழக்கம் சரளமாக இருக்கும். மதிப்பும் மரியாதையும் கூடும். அதிக சந்தர்ப்பங்களில் அலைச்சல்களும் ஏற்படக் கூடிய காலம். பிரயாணங்களில் நன்மை உண்டு. உடன் பிறந்தவர்கள், உறவினர்களால் நன்மை உண்டாகும்.

புது உறவுகளால் நன்மை ஏற்பட கூடிய நேரம். அதிகப்படியாக உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது. வேலையில் இடமாற்றம் ஊர் மாற்றம் மற்றும் பழைய சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கி அதன் மூலம் வருமானம் வரக் கூடிய காலம். உங்களைப் பற்றிய வதந்திகள் இருந்து கொண்டே இருக்கும். எதிலும் கவனம் தேவை. சுபகாரியங்கள் நடக்கும் காலம். அடிக்கடி சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வாய்ப்பு அமையும். குழந்தைகளால் எதிர்பாராத நன்மைகள் ஏற்படும். அவர்களின் படிப்பு, வேலை, வெளிநாடு இவைகள் சாதகமாக இருந்து வரும்.

வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு வேலை, வேலையில் உற்சாகம், சுறுசுறுப்பு மற்றும் வேலையில் முன்னேற்றம் ஊதிய உயர்வும் ஏற்படும், உங்களது ராசிக்கு இன் 4ஆம் மற்றும் 5ஆம் இடத் திற்கு சனிபகவான் அதிபதியாக இருப்பதால் தாங்கள் பார்க்கும் வேலையில் மிகக் கவனத்துடன் இருக்கவும். உயர் அதிகாரிகளிடம் கவனமாக நடந்து கொள்ளல் வேண்டும். வரும் பணத்தை முறையாகச் சேமித்தல் நலம். மனதில் இனம் புரியாத பயம், குழப்பம் தோன்றும் காலம். எனவே சிந்தித்துச் செயலாற்றவும். வீட்டு வளர்ப்பு பிராணிகளால் நன்மை ஏற்படும். வேலையாள்களால் தேவையற்ற மனச் சஞ்சலம் ஏற்படும். தாய் மாமன்மாரின் ஆதரவு கிட்டும். தாயாரின் உடல் நலத்தில் அதிக கவனம் தேவை. தந்தையாரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும் காலம் வெளிநாட்டு தொடர்பு சாதகமாக இராது. ஆன்மிக பயணங்கள் தொடரும். நண்பர்கள் பிரிந்து இணையும் காலம். கணவன் மனைவி உறவு சுமுகமாக சந்தோசமாக இருக்கும். வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்புக்கள் ஏற்பட்டு வேலையில் திருப்தியான நிலை மற்றும் விருப்பமான வேலை, எதிர்பார்த்த வருமானத்துடன் கூடிய வேலை வந்து சேரும். வேலையில் சிலருக்கு இடமாற்றம், ஊர் மாற்றம் உண்டு. வேலையில் இதுவரை இருந்து வந்த இறுக்க நிலை தளர்ந்து நற்பலன் உண்டாகும். வெளியூர், அல்லது வெளிநாடு செல்ல வாய்ப்பு உண்டாகும்.

நேரத்திற்கு உணவு அருந்துதல் வேண்டும். நீரிழிவு வியாதி, உப்பு சத்து இருப்பின் அதனைக் கட்டுக்குள் வைக்கப் பழகவும். உடலில் சளித் தொல்லைகள், தேமல், மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் வராமல் பார்த்துக் கொள்ளல் அவசியம்.

**பெண்களுக்கு**

இதுவரை தடையான நல்ல விடயங்கள் இனிதே நடந்தேறும். எதிர்பார்க்கும் செய்திகள் சாதகமாக வந்து சேரும். புதிய முயற்சிகளில் ஈடுபட புதிய விடயங்களைக் கற்க சந்தர்ப்பம் அமையும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். வேலையில் எதிர்பார்த்த முன்னேற்றம் அமையும். உடன் பணிபுரிவர்களின் அன்பும் ஒத்துழைப்பும் கிட்டும். அடிக்கடி பயணங்கள் அமையும். அதனால் நன்மைகளும் அதே சமயம் அலைச்சல்களும் கூடும். உடலும் உள்ளமும் சில சமயங்களில் சோர்ந்து விடும். உடலில் அடிக்கடி சளித் தொல்லைகள் ஏற்பட்டு நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து காணப்படும். தேவையில்லாத விடயங்களில் தலையிடவோ, சிந்திக்கவோ கூடாது. குடும்பத்தில் புது உறுப்பினர் வருகை சாதகமாக அமையும். விருந்து கேளிக்கைகளில் கலந்து கொள்ள வாய்ப்பு அமையும். காதல் விடயங்கள் மகிச்சிகரமாக இருக்கும். கணவன் மனைவி உறவு சுமுகமாக இருந்து வரும். குழந்தைகளின் அன்பும் ஆதரவும் அவர்களால் நன்மையும் ஏற்படும். ஆடை ஆபரணச் சேர்க்கைகள் அடிக்கடி அமையும். வேலை நிமித்தமாக வெளிநாடு செல்லும் யோகம் அமையும்.

## நாளை

**மார்கழி-09**

சனிக்கிழமை -24.12.2016
திதி: ஏகாதசி பி.இ.05.25
நட்சத்திரம்: சுவாதி பி.இ.02.46
ராகுகாலம்:09.26-10.56 வரை
சுபநேரம்:03.26-04.56 வரை
ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வந்தால் குருதி எங்களுக்கு வந்தால் தக்காளிச் சட்னியா?

நீதி மற்றும் பௌத்தசாசன அமைச்சர் விஜயதாச ராஜபச்ச மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் சென்றிருந்தார். கூடவே சர்ச்சைக்குரிய மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் நுழைவதற்கு முன்னர் தடைவிதிக்கப்பட்டிருந்த பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட ஞானசார தேரரையும் அழைத்துச் சென்றிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிலிப்பிட்டிய சுமணரத்தின தேரரை, விஜயதாஸவும் ஞானசார தேரரும் சந்தித்தனர். இந்த விகாரையில் கடந்த மாதம் நடைபெறவிருந்த நிகழ்வுக்குச் செல்வதற்கே ஞானசார தேரருக்கு நீதிமன்றத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதனை எதிர்த்துப் பொலிஸாருடன் முட்டி மோதியதுடன் நகரில் குழப்பத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சுமணரத்தின தேரர் சில தினங்களுக்கு முன்னர்தான் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

சர்ச்சைக்குரியவர்களுடன் அரசின் அமைச்சர் ஒருவர் சர்ச்சையான இடத்தில் பேச்சு நடத்தினார். விகாரையினுள் பேச்சு நடைபெற்று முடிந்த பின்னர் பத்திரிகையாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், விஜயதாஸ சில விடயங்களைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள மக்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். அவர்களுக்காகக் குரல் கொடுப்பதற்கு மாகாண சபை உறுப்பினர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ இல்லை. சிறுபான்மையினராக வாழ்கின்ற அவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். சிங்கள மொழி தெரியாத அலுவலர்களால் அவர்கள் துன்பப்படுகின்றனர். இப்படி சிறுபான்மைச் சிங்கள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விலாவாரியாகப் பட்டியலிட்டார்.

அங்கு கருத்துத் தெரிவித்த பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரர், "போருக்கு முன்னர் சிங்கள மக்கள் வாழ்ந்த இடங்களில் அவர்களை மீள்குடியேற்றம் செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச அவர்களே! மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் சிறுபான்மையினராக இருக்கின்ற சிங்கள மக்களுக்கே இவ்வளவு பிரச்சினை என்றால், இந்த நாட்டிலே சிறுபான்மையினரான இருக்கின்ற - இருந்து வருகின்ற தமிழ் மக்களுக்கு எவ்வளவு பிரச்சினைகள் இருக்கும். அதனை ஏன் விளங்கிக் கொள்ள மறுக்கின்றீர்கள்.




இப்போதும் ஒற்றையாட்சியையும், பௌத்தத்துக்கு முன்னுரிமையையும் தூக்கிப் பிடித்துக் கொண்டு கூச்சலிடும் நீங்கள், அதனால்தான் தமிழ் மக்கள் இந்த நாட்டில் சிறுபான்மையினராக்கப்பட்டனர் - நசுக்கப்பட்டனர் - அழிக்கப்பட்டனர் என்பதை ஏன் புரிந்து கொள்ள மறுக்கின்றீர்கள்?

இவை உங்களை வேதனைப்படுத்துவதற்காகக் கேட்கப்படவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் - முஸ்லிம் - சிங்கள மக்களுக்கு சம உரிமை கிடைக்க வேண்டும் - வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய நீங்கள், இந்த நாட்டில் மூவினங்களுக்கும் சமமான உரிமை கிடைக்க வேண்டும் என்று ஏன் வலியுறுத்தத் தவறினீர்கள். சிறுபான்மையினரின் - சிறுபான்மைச் சிங்கள மக்களின் அவலங்களைப் பார்த்த பின்னரும், நீங்கள் உங்கள் சிங்கள மக்களுக்கு அந்த மாவட்டத்தில் சமமான உரிமைதான் கிடைக்க வேண்டும் என்று கேட்கின்றீர்களே தவிர, இந்த நாட்டில் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு சிங்கள மக்களுக்கு நிகரான உரிமை கிடைக்க வேண்டும் என்று கோரத் தோன்றவில்லையே!

மீள்குடியேற்றம் தொடர்பில் ஞானசார தேரர் பேசுகின்றார். போருக்கு முன்னர் வாழ்ந்த சிங்கள மக்கள் அவர்கள் வாழ்ந்த இடங்களில் குடியமர்த்தப்படாத போது கொதிக்கும் நீங்கள், வாழையடி வாழையாக வாழ்ந்த மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்டு இன்றும் அகதியாக இருக்கும் தமிழ் மக்கள் அவர்களது சொந்த இடங்களில் குடியமரக் கேட்கும்போது மட்டும் ஏன் இனவாதக் கூச்சல் போடுகின்றீர்கள்?

உங்களுக்கு வந்தால் குருதி மற்றவனுக்கு வந்தால் தக்காளிச் சட்னி என்று நீங்கள் நினைக்கும் வரை நல்லிணக்கம் என்பது கனியாது.

# அண்ணாந்து பார்க்க வைக்கும் கியூபா நாட்டின் இயற்கை வேளாண்மை

பா.ஜீவசுந்தரி




புரட்சிக்கு முந்தைய கியூபாவின் வேளாண்மை என்பது நிலவுடைமையின் எச்சங்களுடனும் முதலாளித்துவ நடைமுறைகளுடனும் இணைந்ததாக இருந்தது. 1959 புரட்சிக்குப் பின்னரும்கூட கியூபா ரசாயன உரங்களையே பெரிதும் நம்பி வேளாண்மையை மேற்கொண்டுவந்தது. ஆனால், நம்மைப் போல் கண்மூடித்தனமாக அந்தத் தவறைத் தொடர்ந்து செய்ய விரும்பவில்லை. ரசாயன வேளாண்மையின் மோசமானபின்விளைவுகளை விரைவிலேயேபுரிந்து கொண்டு, தேவையான மாற்றங்களை மேற்கொள்ள முன்வந்தது பிடல் காஸ்ட்ரோ அரசு. இயற்கை வேளாண்மைப் பாதையில் அடியெடுத்து வைத்து, இன்று வெற்றிகரமாக அப்பாதையில் நடைபோட்டுக்கொண்டிருக்கிறது.

### நெருக்கடி தந்த தீர்வு

கியூபாவின் உணவுத் தேவையைச் சோவியத் ஒன்றியம் அறுபது சதவீதம் பூர்த்தி செய்துவந்ததுடன், பெரும் பொருளாதாரத் துணைவனாகவும் இருந்து வந்தது. 1989இல் சோவியத் சிதறிய நிலையில், அதற்கான மாற்றுத் திட்டங்களை முழுமூச்சுடன் செயற்படுத்த முனைப்புடன் இறங்கியது கியூபா அரசு. 1990-களின் ஆரம்பத்தில் சோவியத் கூட்டமைப்பு சிதைந்து நொறுங்கியதன் காரணமாக, கியூபா இத்தகைய அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டிய நெருக்கடியை நோக்கித் தள்ளப்பட்டது.

அந்தக் காலகட்டத்தில் லத்தீன் அமெரிக்க, கரீபிய நாடுகள் அனைத்திலும் மிக மோசமான தனிநபர் உணவு உற்பத்தியைக் கியூபா கொண்டிருந்தது. ஆனால், நெருக்கடிகளே புதிய வழிமுறைகளைத் தேர்ந்தெடுக்க ஊக்குவிக்கின்றன என்பதற்கு நல்லதொரு உதாரணமும் கியூபாதான்.

### எங்கெங்கும் வேளாண்மை

உடனடி தீர்வுக்கான வழிகளாக, அவர்கள் மேற்கொண்ட முறைகள் அனைத்தும் வியப்பளிப்பவை. எங்கெல்லாம் வெற்றிடங்கள் இருந்தனவோ அங்கெல்லாம் மட்கு எரு (கம்போஸ்ட்), வளமான மண் இட்டு நிரப்பப்பட்டுப் பயிர்த்தொழில் மேற்கொள்ளப்பட்டது. தெருக்களின் நடைபாதைகள் உட்பட எதுவும் அதற்கு விலக்கு இல்லை என்ற நிலை உருவானது.

வேளாண்மைக்காகத் தொழிற்சாலைகள், கூட்டுறவு சங்கங்கள், பள்ளி, கல்லூரிகள், விடுதிகள், முதியோர் இல்லங்கள் என எந்த இடமும் விட்டு வைக்கப்படவில்லை. இப்படிப் புதிதாக ஏற்படுத்தப்பட்ட விளை நிலங்கள் மட்டும் 81 ஆயிரம் ஏக்கருக்கு மேல் இருந்தன. இங்கு விளை விக்கப்படும் உணவுப் பொருள்கள் ஒழுங்குமுறையாக மக்களை எளிதாகச் சென்றடைந்தன.

இவை தவிர, வீடுகளின் பின்புறம் இருந்த சிறு தோட்டங்கள், முற்றங்கள், மொட்டை மாடிகள் போன்றவையும் தனிநபர் உணவு தானிய உற்பத்திக்கு வழிவகுத்தன. இப்படியாக நம்முடைய மொட்டை மாடித் தோட்டங்களுக்கும் கியூபா ஒரு முன்னோடி.

### வீரியமடைந்த உற்பத்தி

இதற்கிடையில், 1992 மற்றும் 1996இல் கியூப வேளாண்மைக்கு நெருக்கடி தரும் வகையில் டோரி செல்லி, ஹெல்ம்ஸ் பர்ட்டன் என்பது போன்ற பொருளாதார நெருக்கடி தரும் புதிய சட்டங்களை இயற்றி அமெரிக்கா நெருக்கடி கொடுத்தபோதும், கியூபா அதற்குக் கொஞ்சமும் தளரவில்லை. சொல்லப் போனால் உண்மையில் இந்தச் சட்டங்களும் தடைகளும் கியூபாவின் உணவு தானிய உற்பத்தியை மேலும் வீரியப்படுத்தின.



நகர்ப்புறம் சார்ந்த புதிய விவசாயிகள் பலருக்கும் விஞ்ஞானத் தொழில்நுட்ப ஆலோசனைகள், தகவல்கள் வழங்குவதற்காகவே தொழில்நுட்ப வல்லுநர்களும் விஞ்ஞானிகளும் நியமிக்கப்பட்டனர். விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப விதைகள், இயற்கை உரங்கள், பாதுகாப்பு சாதனங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு, அதற்கான ஆலோசனை மையங்களும் விளை நிலங்களுக்கு அருகிலேயே அமைக்கப்பட்டன.

நெல் உற்பத்தியைத் தீவிரப்படுத்தியதன் மூலம், அதன் விளைச்சல் மும்மடங்கு பெருகியது. இலத்தீன் அமெரிக்காவில் உருளைக் கிழங்கு உற்பத்தியில் கியூபா இரண்டாம் இடத்தை எட்டியது.

### மரபும் அறிவியலும் கூட்டாக

இரசாயன உரங்களுக்கு மாற்றாகப் பசுந்தாள் உரங்கள், பூச்சிக்கொல்லி களுக்குப் பதிலாகச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட இயற்கை பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தப்பட்டதால், இரசாயனப் பயன்பாட்டு சதவீதம் பெருமளவு குறைந்தது. அனைத்துக் கழிவுகளும், ஆம். மனிதக் கழிவுகள், விலங்குக் கழிவுகள், வீணாகும் குப்பை போன்றவை மறு சுழற்சி செய்யப்பட்டு உரமாக மாற்றப்பட்டு வயல்களில் தூவப்பட்டன. அதேபோல, கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டுக் கரும்புத் தோட்டங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சப்பட்டது.



கரும்புச் சக்கையை எரித்து மின்சாரம் தயாரிக்கப்பட்டு, அது சர்க்கரை ஆலைகளில் பயன்பட்டது. இவ்வாறு சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத வகையில் கழிவுப்பொருள்கள் அனைத்துமே, மறு சுழற்சிக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டதில் கியூபா மற்ற நாடுகளுக்கு முன்னோடியாகச் செயற்பட்டது.

லத்தீன் அமெரிக்காவைப் பொறுத்தவரை வேளாண் சூழலியல் என்பது நவீன தொழிற்சாலைபாணி விவசாயத்துக்கு நேரெதிராக வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு பண்ணைய அணுகு முறையைக் கொண்டிருந்தது. மேற்கத் தேய அறிவியல் அறிவு, மரபு வழிப்பட்ட நிபுணத்துவம் ஆகிய இரண்டு உத்திகளையும் இணைத்து மேற்கொள்ளப்படும் உள்ளூர் உற்பத்தியை இப்போது வரையிலும் கியூபா ஊக்குவித்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எட்டப்பட்டது உச்சம்

பெற்றோலிய, இதர உதிரிப்பாகங்கள் கிடைக்காமல் போனதால், செயலற்றுப் போன டிராக்டர்களுக்கு மாற்றாக ஆயிரக்கணக்கான எருதுகள் பணிகளை மேற்கொண்டன. அதேநேரத்தில் விவசாயிகள் குழுக்களாக ஒருங்கிணைந்து உற்பத்தியை மேற்கொள்ளவும் தங்களது விளைபொருள்களைக் கூட்டாகச் சந்தைப்படுத்தவும், அதற்கேற்ற உற்பத்தி முறைகளை ஊக்குவிக்கவும், வேளாண்மை தொடர்பான சீர்திருத்தங்களையும் பரவலாக்கத்தையும் கியூப அரசு மேற்கொண்டது.

இறக்குமதி வேளாண் இடுபொருள்கள், சாதனங்களின் மீதான தங்களது சார்பைக் குறைத்து விவசாயத்தின் திசை வழியையே ஒட்டுமொத்தமாகத் திருப்பியதன் மூலம், கியூபாவின் உணவு உற்பத்தி உச்சத்தை எட்டிப் பிடித்தது. 1996-2005 காலகட்டம்வரை லத்தீன் அமெரிக்க, கரீபிய நாடுகளில் உணவு உற்பத்தியில் தேக்க நிலையை அடைந்திருந்த கியூபாவின் தனிநபர் உணவு உற்பத்தி, ஆண்டுக்கு 4.2 சதவீதத்தை எட்டிப்பிடித்திருந்தது மாபெரும் சாதனை.

### ஆச்சரிய வளர்ச்சி

இன்றைக்கு கியூபாவின் சிறு விவசாயிகள் நாட்டிலுள்ள வேளாண் நிலங்களில் 25 சதவீதத்தைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். ஆனால், 65 சதவீத உணவு தானிய உற்பத்தியின் வழியாகத் தங்கள் நாட்டின் இறையாண்மைக்கு அவர்களே பெரும்பங்கைச் செலுத்துகிறார்கள்.

அத்துடன், 1990இல் உருவான ஆரம்ப நிலை பொருளாதார நெருக்கடியின்போது தளர்ந்து உட்கார்ந்துவிடாமல், புறப்பட்ட ஏராளமான கியூப நகர்ப்புறத் தோட்டங்கள், உணவு உற்பத்திக்கான மிக முக்கிய வளங்களாக இன்றைக்கு வளர்ச்சியடைந்திருக்கும் நிலையையும் அவை பெற்ற வெற்றியையும் நாம் அண்ணாந்துதான் பார்க்க வேண்டி யிருக்கிறது.

### கியூபாவின் இயற்கை வேளாண்மை வளர்ச்சி: முக்கிய அம்சங்கள்

கியூபாவில் 3,83,000 நகர்ப்புறப் பண்ணைகள், பயன்படுத்தப்படாமல் இருந்த 50,000 ஹெக்டெயர் நிலங்களில் இவை அமைக்கப்பட்டுள்ளன.

இப்பண்ணைகள் ஆண்டுக்கு 15 லட்சம் தொன்களுக்கும் மேற்பட்ட காய்கறிகளை உற்பத்தி செய்கின்றன.

எந்த இரசாயன உரங்களும் பயன்படுத்தப்படாமல் மிக அதிக உற்பத்தியை அளிக்கும் நகர்ப்புறப் பண்ணைகள் இவை.

கியூபாவில் சதுர கிலோமீட்டருக்கு 20 கிலோ என்ற அளவு மகசூல் கிடைக்கிறது. உலகிலேயே மிக உயர்ந்த அளவு இது

கியூபாவில் புதிதாகப் பறிக்கப்பட்ட காய்கறிகளில் 50 வீதம் முதல் 70 வீதம் வரையிலும் இந்த நகர்ப்புறப் பண்ணைகள் மூலமாகவே கிடைக்கின்றன. ஹவானா, வில்லா போன்ற பெருநகரங்களின் உணவுத் தேவையை, இந்தப் பண்ணைக் காய்கறிகளே நிறைவு செய்கின்றன.

கியூபாவில் உள்ள 1.1 கோடி மக்கள்தொகைக்கும் இயற்கை வேளாண் முறையில் உணவளிக்கப் போதுமான ஆற்றல், அந்நாட்டு விவசாயிகளிடம் உள்ளது.

இத்தனைக்கும் இன்னமும் பயிர் செய்யப்படாமல் இருக்கும் சமவெளி நிலங்களின் அளவு 60 லட்சம் ஹெக்டேயர்.

மேலும் 10 லட்சம் ஹெக்டேயர் மண்சரிவு நிலங்களும் பயிரிடப்படாத வெற்றிடங்களும் எதிர்காலத் தேவைக்கு இருக்கின்றன என்பது கூடுதல் தகவல்.

இங்கெல்லாம் பயிர் செய்யப்படும் பட்சத்தில் சுற்றுலாத் தொழிலுக்கு ஊக்கமளித்து, அந்நியச் செலாவணியை ஈட்டுவதுடன், ஓரளவு உணவு ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியமும் உள்ளது.

# சண்டைக் காட்சிகலைஞர்களுக்காக சண்டை போட்ட





தேசிய விருதுகள் வழங்கும் பட்டியலில் இனி சண்டைக் காட்சிக் கலைஞர்களும் சேர்க்கப்பட்டு, கௌரவிக்கப்பட வேண்டும் என்று ரஜினிகாந்தின் மகள் ஐஸ்வர்யா தனுஷ் கோரிக்கை விடுத்தார்.

சண்டைக் காட்சி நடிகர்கள் சங்கத்தின் 50 ஆவது ஆண்டு தினத்தை ஒட்டி அந்தக் கலைஞர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், சினிமா வீரன் எனும் பெயரில் ஒரு படத்தை நடிகர் ரஜினிகாந்தின் மகள் ஐஸ்வர்யா தனுஷ் உருவாக்கி வருகிறார். இந்தப் படத்திற்கு ரஜினிகாந்த் குரல் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறாராம்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சரை அண்மையில் சந்தித்து ஒரு கோரிக்கையை வைத்துள்ளார் ஐஸ்வர்யா தனுஷ்.

இந்திய சினிமாக்களுக்கான தேசிய விருதுகள் வழங்கும் பட்டியலில் இனி சண்டைக் காட்சிக் கலைஞர்களும் சேர்க்கப்பட்டு, கௌரவிக்கப்பட வேண்டும் என்று அந்த கோரிக்கையில் தெரிவித்தார்.

அவரின் கோரிக்கையை ஏற்று எதிர் வரும் 64ஆவது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் சிறப்பான முறையில் சண்டைக் காட்சிகளை அமைக் கும் கலைஞர்களுக்கு தேசிய விருதுகள் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டதாகத் தெரிகிறது என சினிமா வட்டாரங்கள் தெரிவித்தன.

**ஐஸ்வர்யா தனுஷ்**

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | 3 | | | 4 | 2 | |
| | | | | | | 1 | | |
| 3 | | | | 2 | | | 8 | 6 |
| | | 1 | | | 2 | | | |
| 4 | 5 | | | | | | 6 | 8 |
| | | | 4 | | | 5 | | |
| 9 | 6 | | | 7 | | | | 4 |
| | | 3 | | | | | | |
| | 8 | 7 | | | 9 | 3 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 7 | 3 | 6 | 8 | 1 | 9 | 5 |
| 1 | 3 | 5 | 2 | 4 | 9 | 7 | 8 | 6 |
| 9 | 6 | 8 | 1 | 5 | 7 | 2 | 4 | 3 |
| 6 | 8 | 2 | 4 | 9 | 3 | 5 | 1 | 7 |
| 3 | 5 | 1 | 8 | 7 | 2 | 4 | 6 | 9 |
| 4 | 7 | 9 | 6 | 1 | 5 | 8 | 3 | 2 |
| 7 | 1 | 4 | 5 | 3 | 6 | 9 | 2 | 8 |
| 8 | 9 | 3 | 7 | 2 | 1 | 6 | 5 | 4 |
| 5 | 2 | 6 | 9 | 8 | 4 | 3 | 7 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப்பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டுதடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச்சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் சந்தோசம் நிலைத்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். இயன்ற வகையில் பிறருக்கு உதவுவீர்கள்.

**இடபம்:** நண்பர்களிடம் அதிருப்தி ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். தொழிலுக்காக அதிக நிபந்தனையுடன் கடன் பெற வேண்டாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** பேச்சில் நிதானம் பின்பற்றுவது நல்லது. தொழிலில் இடையூறை சரி செய்வதால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், அதிகாரிகளிடம் அனுசரித்துச்செல்வது அவசியம். பெண்கள், பிள்ளைகளால் சிரமத்தை சந்திக்கலாம்.

**கடகம்:** பேச்சால் அனைவரையும் கவர்ந்திழுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். பெற்றோரின் அன்பு கிடைக்கும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் பெறுவர். சொத்து வாங்க வாய்ப்புண்டு.

**சிங்கம்:** சிலர் உங்களை ஏளனமாக பேசலாம். சூழ்நிலை உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். ஆதாயம் கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தால் செலவை கட்டுப்படுத்த முயல்வர்.

**கன்னி:** உங்களின் திறமையைக் கண்டு பலரும் பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழிக்க புதிய மாற்றம் செய்வீர்கள். தாராள வருமானம் கிடைக்கும். சுப விடயம் குறித்த பேச்சு நடக்கும். பெற்றோரின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** கௌரவத்துருக்காக செலவழிக்க நேரிட லாம். மாற்றுக் கருத்து உள்ளவர்களிடம் விலகு வது நல்லது. தொழில், வியாபாரத்தில் விடா முயற்சி தேவைப்படும். உறவினர் வகையில் செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** உறவினர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாள்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்களால் குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும்.

**தனுசு:** நண்பர்களின் உதவியால் நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் வளர்ச்சி உருவாகும். லாபம் அதிகரிக்கும். பெற்றோரின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவர்.

**கும்பம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். தகுதியறிந்து வாக்குறுதி அளிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**மீனம்:** பெரியவர்களின் வழிகாட்டுதல் வெற்றிக்கு துணை நிற்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். லாபம் திருப்தியளிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

"முதலாம் திகதி பிறந்தா முதலாளி டான்னு சம்பளம் போட்டுருவாரு"



"ஐயையோ நான் ஆறாம் திகதியில பிறந்தன் அப்போ எனக்கு?"

எல்லை தாண்டிய பயங்கரவாதம்னா என்னங்க



நீ என் மீது பூரி கட்டையை தூக்கி எறியும் போது... அது தெருவுல போறவங்க மேல படுமே ... அதுதான்

அய்யா... சம்பளம் போட்டாச்சு எண்டு மெசேஜ் வந்தது...



ஆனா மெஷின்ல பணம் வரலையே...




மூதேவி காசு எடுக்கிற மெசின் அங்க இருக்கு இது காசு வைப்பிலிடும் மெஷின்...

**சிங்கம் மஹ்தூம்** @Mahdoomwt

தீப்பெட்டிக்குள் உறங்கிக் கொண்டிருக்கிறது ஒரு தற்கொலைப் படை...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவாய் முருங்கைக்கீரைப் பொரியல்



**தேவையான பொருள்கள்**

கணவாய்- 4
முருங்கைக்கீரை - கால் கப்
சீரகம் - அரைத் தேக்கரண்டி
மிளகாய்த் தூள் - அரை மேசைக்கரண்டி
உப்பு - அரைத் தேக்கரண்டி
மஞ்சள் தூள் - கால் தேக்கரண்டி
தேங்காய் எண்ணெய் - 3 மேசைக்கரண்டி

## செய்முறை

முருங்கைக் கீரையை ஆய்ந்து சுத்தம் செய்து கொள்ளவும். கணவாயைச் சுத்தம் செய்து தண்ணீரில் அலசி எடுத்துக் கொள்ளவும். தேவையான ஏனைய பொருள்களையும் தயாராக எடுத்து வைக்கவும்.
சட்டியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் அதில் சீரகத்தைப் போட்டுப் பொரிய விடவும். சீரகம் பொரிந்ததும் சுத்தம் செய்து வைத்திருக்கும் கணவாயைப் போட்டு அதனுடன் மஞ்சள் தூள் சேர்த்து 30 நொடிகள் வதக்கவும்.
பிறகு அதனுடன் ஆய்ந்து வைத்திருக்கும் முருங்கைக் கீரை, மிளகாய்த் தூள் மற்றும் உப்பு போட்டு 2 நிமிடங்கள் பிரட்டி விடவும். அதன் பின்னர் 2 நிமிடங்கள் கழித்து தட்டினால் மூடி 5 நிமிடங்கள் வேக வைக்கவும். இடை யில் ஒரு முறை திறந்து கிளறி விட்டு மீண்டும் மூடி 8 நிமிடங்கள் வேக விடவும். மூடாமல் செய்தால் கணவாய் வெடிக்கும். 8 நிமிடம் கழித்து கணவாய் பொரிந்ததும் ஒரு முறை கிளறி விட்டு அடுப்பில் இருந்து இறக்கி வைத்து விடவும். இப்போது கணவாய் முருங்கைக்கீரைப் பொரியல் தயார்.

# தேங்காய் உடலுக்கு நல்லதா? கெட்டதா?

தேங்காய் உடலில் கெட்ட கொழுப்பை அதிகரிக்கச் செய்யும், எனவே இதய மற்றும் உடல் பருமனானவர்கள் சாப்பிடக் கூடாது என்று ஒரு சாராரும் நல்ல கொழுப்பைத்தான் அதிகரிக்கச் செய்யும் ஆகவே சாப்பிடலாம் என்று ஒரு சாராரும் குழம்பிக் கொண்டிருப்பது வழமையானதுதான்.
அறிவியல் பூர்வமாகவே விஞ்ஞானிகள் இன்னும் தேங்காயை ஆய்விற்கு உட்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மையே.
இந்தக் குழப்பமான நிலையில், தேங்காய்ப் பால் மற்றும்தேங்காயைத்தாராளமாகஉபயோகப்படுத்தலாம். ஆனால் தேங்காய் எண்ணெயில் நிறைவுறும் கொழுப்பு இருப்பதால் அதனைக் குறைவாக உபயோகப்படுத்தலாம் எனவும் கூறப்படுகிறது.
இந்த குழப்பங்களைத் தவிர்க்க முதலில் அவற்றின் குண நலன்களைத் தெரிந்து கொள்ளுங்கள். முதலில் தேங்காய், தேங்காய்ப்பால் மற்றும் தேங்காய் எண்ணெய் என தென்னையின் பாகங்களைப் பிரித்து அவற்றின் நன்மை தீமைகளைப் பட்டியலிடலாம்.
தேங்காயின் குண நலன்கள்
தேங்காய் : காபோவைதட்ரேட், மினரல், புரோட்டின் வைட்டமின் சி, அனைத்து வகை பி காம்ப்ளக்ஸ் சத்துக்கள், நார்ச்சத்து என உடல் இயக்கத்துக்குத் தேவைப்படும் அனைத்துச் சத்துகளும் தேங்காயில் உள்ளன.
தேங்காயில் உள்ள லாரிக் அமிலம் மற்றும் காரிப்ரிக் அமிலம் ஆகியவை வைரஸ் மற்றும் பாக்றீரியல் நுண்கிருமிகளை எதிர்க்கும் திறன் கொண்டதாக உள்ளன. தேங்காயில் உள்ள மோனோலாரின் வைரஸ் செல் சுவர்களைக் கரைக்கிறது.
எய்ட்ஸ் நோயாளிகளுக்கு தாக்கும் வைரஸ் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது.
தேங்காயில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகம். உடலின் வளர்சிதை மாற்றத்துக்குப் பெரிதும் உதவுகிறது. இதன் மூலம் சக்தியை அதிகப்படுத்துகிறது.
தேங்காய் பால் : தேங்காய்ப் பாலில் அதிக புரதம் உள்ளது. இது வயிற்றுப் புண்களை ஆற்றும். நாம் தேங்காய்ப் பாலைக் காய்கறிகளுடன் சமைப்பதால் தரமான சத்துக்களும் , நார்சத்தும் கிடைக்கப் பெறுவதால் அதிலுள்ள நிறைவுறும் கொழுப்பு சமன் படுத்தப்படுகின்றது.
இதனால் தேங்காய்ப் பாலில் சமைக்கப்படும் உணவு ஆரோக்கியமானதாக இருக்கும். அதோடு இவை ஃஷிம்ஸி எனப்படும் நல்ல கொழுப்பை அதிகப்படுத்துகிறது. இதனால் கெட்ட கொழுப்பு குறையும்.
தேங்காய் எண்ணெய் : தேங்காய் எண்ணெயில் லாரிக் அமிலம் மற்றும் மைரிஸ்டிக் அமிலம் ஆகியவை உள்ளன. இரண்டுமே நிறைவுறும் கொழுப்பு. பொதுவாக உடலுக்கு நிறைவுறும் கொழுப்பு தீமை தரக் கூடியது. நிறைவுறா கொழுப்பு நல்லது. இங்கேதான் ஒரு முக்கிய விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். எல்லா நிறைவுறும் கொழுப்பும் எமக்குத் தீமை செய்வதில்லை. மிகவும் கேடான பாமிடிக் அமிலம் ஒரு நிறைவுறும் கொழுப்பு. இது தேங்காய் எண்ணெயில் குறைவு.
ஆனால் இந்த பாமிடிக் அமிலம் சாக்லேட், பிஸ்கட் மற்றும் மாட்டிறைச்சியில் உள்ளது. நீங்களே முடிவு பண்ணிக் கொள்ளுங்கள் எவை தீமையென. ஆக தேங்காய் எண்ணெயில் நிறைவுறும் கொழுப்பு இருந்தாலும் மிகக் குறைவாகவே உள்ளது. அதுவும் லாரிக் அமிலம் மிகவும் நிறைந்தது. இது உடலுக்கு பாதகம் தராது. மிகக் குறைந்த அளவு உபயோகப் படுத்தலாம்.
தேங்காய் எண்ணெயின் நன்மைகள் : தேங்காய் எண்ணெய்யைக் கொண்டு தயாரிக்கப்படும் தைலங்கள் பல்வேறு நோய்களைக் குணப்படுத்துகின்றன. நாள்பட்ட தீராத புண்களுக்கு மருந்தாகத் தரப்படுகிறது. சரும வியாதிகளிலும் தயாரிக்கப்படும் எண்ணெய் முக்கியப் பங்கு வகிக்கின்றது. தைலங்களில்தேங்காய் எண்ணெய்யின்பங்குமுக்கியமானது. அத்தோடு கெட்ட கொழுப்பின் அளவைக் கட்டுப்படுத்துகிறது.
இளநீர் : இளநீர் குடற் புழுக்களை அழிக்கிறது. இளநீரின் உப்புத் தன்மை வழுவழுப்புத்தன்மை காரணமாக கொலரா நோயாளிகளுக்கு நல்ல சத்து. ஆற்றல் வாய்ந்த கரிமப் பொருள்கள் இளநீரில் உள்ளன. அவசர நிலையில் நோயாளிகளுக்கு இளநீரை நரம்பின் வழியாகச் செலுத்தலாம்.
இளநீரில் அதிக அளவில் சத்துக்கள் உள்ளன. சீனிச் சத்துடன் தாதுப் பொருள்களும் நிறைந்துள்ளன. பொட்டாசியம், சோடியம், கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு, செம்பு, கந்தகம், குளோரைட் போன்ற தாதுக்கள் இளநீரில் உள்ளன. இளநீரில் உள்ள புரதச்சத்து, தாய்ப்பாலில் உள்ள புரதச்சத்துக்கு இணையானது. இளநீரை வெறும் வயிற்றில் சாப்பிடக் கூடாது. ஏனெனில் அதில் உள்ள அமிலத் தன்மை வயிற்றில் புண்ணை உருவாக்கும். ஏதாவது ஆகாரம் எடுத்த பின்னரே சாப்பிடவேண்டும்.







மென்மையான சவாரிக் குதிரைகள் அறிமுகமாகியுள்ளன. முன்னர் மரத்தில் உருவாக்கப்பட்ட இவை தற்போது மென்மையான பருத்தி வெளிப்புறத்துடன், குதிரைபோன்ற அமைப்பில் வடிவமைக்கப்பட்டுள்ளன. சவாரிக்குதிரை ஒன்று ஆயிரத்து 200 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

# காகிதப் பூ அலங்காரம்







படத்தில் காட்டியவாறு நூல் சுற்றிய உருளை வடிவ அட்டை அல்லது மட்டையால் உருளை வடிவ அமைப்பைச் செய்க.
பசை
சிறிய அலங்கார கல்
நூல், 2. மட்டை
உருளையைச் சரி பாதியாக மடித்து கத்தரிக்கோலால் வெட்டிக் கொள்க. [விரும்பிய வர்ணத்தை பெற, உருளை வடிய மேற்பரப்பில் விரும்பிய காகிதத்தை ஒட்டுக], 3. படத்தில் காட்டப்பட்டவாறு பூப் போன்று ஒழுங்கு செய்து பசையால் ஒட்டுக, 4. பூ அமைப்பின் நடுப்பகுதியில் கல் ஒட்டி அலங்காரம் செய்க. பின்னர் நூலில் கோர்த்து தொங்க விடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் பருமனாதல்.! காரணம் என்ன?



நாக்கின் சுவையறியும் உணர்வு என்பது மழுங்கிப் போவது தான் உடல் பருமனாதலுக்கான காரணம் என்கிறனர் விஞ்ஞானிகள். சரியான அளவில் சீனி சேர்க்கப்பட்ட இரண்டு தேநீர் கோப்பைகளை ஒரு பருமனான மனிதருக்கும் ஒரு மெலிந்த மனிதருக்கும் கொடுக்கும்போது மெலிந்தவர் அதை விருப்பத்துடன் குடிக்கத் தொடங்குகிறார். அதேவேளை பருமனானவர் சீனி போதுமானதாக இல்லை என்ற காரணத்தை கூறி மேலும் ஒரு கரண்டி சீனியைச் சேர்த்துக்கொள்கிறார்.

அதாவது இனிப்புச் சுவையை உணரும் தன்மையை நாக்கு இழக்கும் போதுதான் நாம் அதிகமான இனிப்பை தேடத் தொடங்குகிறோம் என்பதே அவர்களின் வாதம்.

குறிப்பாக குண்டானவர்கள் அதிகமாக இனிப்பை விரும்புகின்றனர் என்பது ஏற்கனவே நாம் அறிந்த ஒன்றுதான்.

ஆனாலும் குண்டானவர்களுக்கும் மெலிந்தவர்களுக்கும் இனிப்புச் சுவையறியும் தன்மையில் என்ன வேறுபாடு இருக்கிறது என்பதை அறிவதில் இந்த ஆய்வு முக்கியப் படுத்தப்பட்டுள்ளது.

பென்ஸில்வேனியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஹாஜ்நால் மற்றும் பீட்டர் கோவாக்ஸ் ஆகிய இருவரும் ஓ.எல். இ.ரி.எவ் (OLETF) மற்றும் எல்.இ.ரி.ஓ (LETO) வகை எலிகளைப் பயன்படுத்தி இந்த ஆய்வுகளைச் செய்துள்ளனர். குண்டானவர்களின் பண்புகளை ஓ.எல்.இ.ரி.எப் OLETF எலிகள் வெளிப்படுத்தியுள்ளன. தொடக்கத்தில் சாதாரணமான உடல் எடை கொண்டிருந்த இந்த எலிகள் உணவில் திருப்தியடை யாததால்மேலும் மேலும் சாப்பிட்டு குண்டாகியமை அவதானிக்கப்பட்டது.

இதன் காரணமாக நீரிழிவு நோய்க்கும் ஆளாகியிருந்தன. ஓ.எல்.இ. ரி.எவ் (OLETF) எலிகள் மட்டும் அதிகமான இனிப் பைக் கேட்டுவாங்கிச் சாப்பிட்டுள்ளது.

அந்தவகையிலே உடல் பருமன் அதிகமாகும் போது அதிகமாகச் சாப்பிட வேண்டாம் என்பதையும் அதிக கலோரி உணவை தவிர்க்க வேண்டும் என்பதான அறிவுரைகளை மூளை கூறுவதாக சொல்லப்படுகிறது.

ஆனால் குண்டானவர்களின் மூளை என் பது இவ்வாறு அறிவுரை கூறும் திறனை இழந்து விடுகிறது என்கிறார் விஞ்ஞானி ஹாஜ்நால்.

"உப்புச்சுவை, புளிப்புச் சுவை, சாதாரண நீர், ஆறு வகையான அடர்த்தி கொண்ட சீனி ஆகியவற்றை எலிகளின் நாக்கு உணரும்போது அவற்றின் மூளையின் நரம் பணுக்களின் தூண்டலை அறிய மின்வாய்கள் பொருத்தப்பட்டன.

நாவின் மேற்பரப்பிற்குரிய செய்திகளை உணரும் மூளையின் பகுதிக்கு pontine parabrachial nucleus (PBN) என்று பெயர். இனிப்புச்சுவையை நாவிற்கு அறிமுகப்படுத்து வதுபோது எல்.இ.ரி.ஓ (LETO) வகை எலிகள் 100 தூண்டல்களை மூளையின் பகுதிக்கு கொண்டுசென்றன. ஓ.எல்.இ.ரி.எவ் (OLETF) வகை

(23அ) ஆம் பக்கம் பார்க்க...)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பரிபாலனசபை உறுப்பினர்

**திரு. பொ.ஜெகானந்தம்**

(ஜெயா)

அவர்களின் பாசமிகு தந்தையார்

**சரவணமுத்து பொன்னம்பலம்**

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலனசபை உறுப்பினர்கள்**

**ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்**

**உரும்பிராய்** (சி.27226) (13.18.17)

## மரண அறிவித்தல்



பிறப்பு :- 27.03.1976
இறப்பு :- 21.12.2016

**குலநாயகம் ரமேஷ்**

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கட்டடங்கள் திணைக்களம் (மத்திய) - யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குலநாயகம் ரமேஷ் 21.12.2016 புதன்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் குலநாயகம் காலஞ்சென்ற விக்கினேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், கலைச்செல்வி, மோகன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர்), அனுசா, யாமினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சங்கரி, தாரணி, கீர்த்தனி, ஹேதாரன், ராகினி, விநோதினி ஆகியோரின் அன்பு மாமனும், வைஷ்ணவி, வாகீசன், ஜனனி ஆகியோரின் அருமை சித்தப்பாவும், ராஜேந்திரா, கேதாரநாதன், சத்தியசீலன், ஜெயந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.12.2016) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொழும்புத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**24, விபுலானந்தர்வீதி,**
**கொழும்புத்துறை.**

(J/7046) (11,18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

**செல்லத்துரை யோகராசா**

(ஆசாரியார், தலைவர் - தச்சந்தோப்பு அருள் மிகு முத்துக்குமார சுவாமி ஆலய பரிபாலனசபை)



தோற்றம் 11.09.1950
மறைவு 21.12.2016

தச்சந்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை யோகராசா (ஆசாரியார்) 21.12.2016 புதன் கிழமை இறைபதம் அடைந் தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மூத்த புதல்வனும் காலஞ்சென்ற பெரிய தம்பி செல்லத்துரை மற்றும் சொர்ணலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பமலரின் அன்புக் கணவரும் யுஜிதா (கனடா), யுகந்தா, யுவீந்திரன் (கொழும்பு), யுஜீவன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசேந்திரம், காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும் மல்லிகாதேவி, இராசலிங்கம் (பிரான்ஸ்), மகாதேவன் (லண்டன்), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), அருள்நேசன் (CEB யாழ்ப் பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், விக்னேஸ்வரநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), ஸ்ரீதரநாதன் பவானி (ரதி- கனடா), அம்பிகைபாகன்(கர்ணன் - பிரான்ஸ்), காலஞ் சென்றவர்களான பவளமலர், குகனேஸ்வரன் (ரங்கன்), நிமலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் மோகனதாசன் (கனடா), ஜெகன், Dr. அபிரா (யாழ். போதனா வைத்திய சாலை) ஆகியோரின் மாமனாரும் மகிஷாயினி (கனடா), மகிழ்யன்(கனடா), பிரவீன், தனிஷ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**586,மானிப்பாய் வீதி,**
**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 600 4376, 077 918 8454**

## திருமதி இரதிதேவி நிற்சிங்கம்

மணியகாரன் வளவு, கைதடி தென்கிழக்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரதிதேவி நிற்சிங்கம் 22.12.2016 அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் - விசாலாட்சி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா - அன்னபூரணி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நிற்சிங்கத்தின் (பிரதம லிகிதர், விற்பனை அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற யோகேந்திரா மற்றும் பாலேந்திரன், பத்மினி (ஆசிரியை -யாழ்/ விக்னேஸ்வர வித்தியாலயம் கைதடி), மகேந்திரன், சிவசோதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகபாரதி, புவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் விபூசினி, விபூசிதா, அக்ஷயன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2016) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி தென்கிழக்கு,**
**கைதடி.**

(J/6844) (12,18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 205 7223**

## British College of Higher Studies

BCHS

**வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்**

**Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான**

### A1 IELTS Life Skills

இப்பாடநெறியானது எளிதாகக் கற்கக்கூடிய முறையிலும், உத்தரவாதத்துடனான பரீட்சை வெற்றியையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டு எமது நிறுவனத்தில் நடாத்தப்படுகின்றது. 2015 புதிய வீசா நடைமுறையின் கீழ் British High Commission இனால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறி.

***Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான***

### IELTS (Academic / General)

ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்.

**Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months**

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன்கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.

**இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.**

**Diploma in English 2½ Months**

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English Course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாடநெறி.

வகுப்புகள் யாவும் புதிய தொழில்நுட்பத்திற்கமைவாக (Audio & Video Visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்.

எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

Excellent Teacher's Panel & Individual Attention

கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

**புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**

No.15, Sirambiyadi Lane, (Off Stanley Road,) Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)

**Tel: 021 222 4550 Hotline: 077 730 4545**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் பருமனாதல்.!

(23ஆம் பக்கத் தொடர்ச்சி...)




எலிகள் 5 தூண்டல்களை மட்டுமே மூளைக்குக் கொண்டு சென்றன. இதிலிருந்து ஓ.எல்.இ.ரி.எவ். வகை எலிகள் இனிப்பை உணரும்தன்மையை குறைவாகப் பெற்றிருந்தனஎன்பதுதெரிய வந்தது. ஆனால், உப்புச் சுவையை அறியும் தன்மையில் இரண்டு வகை எலிகளும் ஒன்று போல் இருந்தன." என மேலும் அவர் தனது ஆய்வு அறிக்கையில் குறித்துக் காட்டியுள்ளார்.




அதேவேளை ரின்களில் அடைக்கப்பட்டு விற்கப்படும் பதப்படுத்தப்பட்ட உணவுகளில் சேர்க்கப்படும் சீனி மற்றும் கொழுப்பு ஆகியவற்றின் அளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருவதை பேராசிரியர் ஹாஜ்நால் சுட்டிக் காட்டுகிறார்.

ஆக,இதன் விளைவுகள் சொல்வது என்ன..? நடக்கப்போவது என்ன..? குறைவாக உண்ண வேண்டிய குண்டான மனிதன் சுவையை நாடி நலன் கோணி மேலும் ஒரு கரண்டி சீனியைத் தேநீரில் சேர்த்துக் கொள்கிறான்! ஆயுளைக் குறைத்துக் கொள்கிறான். சிந்திக்க வேண்டும்!


## WALK IN INTERVIEW

எமது நிறுவனத்தின் புதிய பிரிவிற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய சிறந்த பணியாளர்கள் உடன் தேவை.

*Manager
*Receptionist
*Data Entry Operators
*English Teachers

தகைமை - A/L சித்தி, ஆங்கில அறிவு, சிறந்த பேச்சாற்றல், கணினி அறிவு, பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம்.
வயதெல்லை - 18 - 30
சம்பளம் 20 000/= - 50 000/=
சுயவிவரக்கோவை, புகைப்படம், கல்விச்சான்றிதழ் என்பவற்றுடன் உடன் நேரில் வரவும்.
Interview Time - 11am - 4pm

WINSTAR JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி பலாலி வீதி, திருநெல்வேலி.
www.winstarjaffna.com
021 320 2789

## வீடு வாடகைக்கு

சங்கானை பிரதான வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. (அரச ஊழியர் குடும்பம் விரும்பத்தக்கது)
077 623 7037

## தவறவிடப்பட்ட பொருள்

சாவகச்சேரி வர்த்தக வங்கி, சாவகச்சேரி சம்பத் வங்கி, சாவகச்சேரி பொதிகை புத்தகசாலை ஆகியவற்றுக்கு இடைப்பட்ட பகுதியில் ஒரு சோடி திறப்புக்கோர்வை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு - 077 301 3755

## பெண் உதவியாளர் தேவை

London இல் பிறந்து வளர்ந்த 16 வயதுடைய India (சென்னை) பல்கலைக்கழகத்தில் கற்கும் தாய், தந்தையுடன் தங்கியிருக்கும் பெண் ஒருவரைப் பார்ப்பதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. அத்துடன் India செல்வதற்கான அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்.
30 வயதுக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
(9 am - 7p.m)
077 175 5720, 077 021 0255

## மேசன் உதவியாள்கள் தேவை

யாழ். மாவட்டத்தில் கட்டடவேலை செய்வதற்கு மேசன்மார், உதவியாள்கள், கம்பி வேலை தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு இல. 077 068 3534

## அளவெட்டியில் விற்பனைக்குண்டு

தக்காளி (பத்மா), கத்தரி (தின்னவேலி ஊதா), மிளகாய் (MI green) நாற்றுக்களும், நடுகைக்குரிய சின்ன வெங்காயம், பச்சைமுறியன் ரக வெங்காயம் மற்றும் கறிவேப்பிலைக் கன்றுகளும் விற்பனைக்குண்டு.
மூர்த்தி - 077 860 4493

## மீண்டும் புதுப்பொலிவுடன் சாறிகளின் சாம்ராஜ்ஜியமான
## சரவணா ரெக்ஸ்

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவு

- திருமணப்பட்டு சாறிவகைகள், Office wear சாறிகள்.
- நவீன டிசைன் சல்வார்கள், சல்வார்த் துணிகள், ஸ்கேட் & பிளவுஸ் வகைகள்.
- பட்டு வேட்டி சேட் வகைகள்.
- சிறுவர்களுக்கான ஆடைத் தினுசுகள் மற்றும் அனைத்து ஆடைவகைகளும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.



நல்லூர் சரவணா ரெக்ஸ்
526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(சிவன்கோயில் அருகில்)
077 844 8045/ 021 221 6866

நெல்லியடி சரவணா ரெக்ஸ்
171, பிரதான வீதி. நெல்லியடி, கரவெட்டி.
(சம்பத்வங்கி அருகில்)
021 226 2992

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1325
சீட்டிழுப்பு திகதி 2016.12.22
வெற்றி இலக்கங்கள்
03 27 39 56 B
7526770 7369158
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 15,204,560/-

## SUPER BALL

சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 592
சீட்டிழுப்பு திகதி 2016.12.22
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
01 09 29 69 E
சுப்பர் ஜக்பொட்
ரூ. 44,725,400/=
Web www.dlb.lk

## சௌபாக்ய வாசனாவ

Development Fortune
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 01
சீட்டிழுப்பு திகதி 22.12.2016 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
07 27 33 49
சுப்பர் இலக்கம் 06
அதிர்ஷ்ட மாதம் மே

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| 5, 248, 260/= | 2, 186, 195 | 1, 124, 130 |

2016.12.24 திகதி சனிக்கிழமை இளஞ்சிவப்பு டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்

நேற்று (22.12.2016) வியாழக்கிழமை தனது 60 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய எமது அலுவலக
மேற்பார்வை குடும்பநல அலுவலர் (தரம் 1)
செல்வி
சந்திரேஸ்வரி ஏகாம்பரம்
அவர்களை சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துவதுடன் தனக்கென வாழாது பிறருக்கென வாழ்ந்து தாய்சேய்நல சுகாதார சேவையில் 26 வருடங்களைப் பூர்த்திசெய்து சேவையிலிருந்து ஓய்வுபெறும் இவ்வேளை அவரது சேவையை மனதாரப் பாராட்டுவதுடன் இவரின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



HAPPY BIRTHDAY!

சுகாதார வைத்திய அதிகாரியும் அலுவலர்களும் ஊழியர்களும்
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சாவகச்சேரி.

## நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு J Star இல் கார்கில்ஸ் பூட்சிற்றி எதிரில்



இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பெண்களுக்கான சிறுமியருக்கான ஆடைகள் மாபெரும் மலிவுவிலையில்
கொட்டன் சல்வார் - 1999/=
மஸ்தானி Grand Net சல்வார் - 3199/=
கொட்டன் சாறி - 999/= இலிருந்து
Grand Top மற்றும் பலவகையான ஆடைகள்
23 முதல் 31 வரை
தொடர்புக்கு 077 818 6460
077 223 3308
62, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



காரைநகர் மணிவாசகர் சபையில் நீண்ட காலம் தலைவராக பணியாற்றி தற்போது சபையின் காப்பாளராக இருந்து சிறந்த சைவப்பணியாற்றிவரும்
பண்டிதர்
மு.சு.வேலாயுதபிள்ளை
அவர்கள் இந்து கலாசாரத் திணைக்களத்தின் "கலாபூசணம்" பட்டத்தினையும், யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் "திருவாசகமணி" பட்டத்தினையும் பெற்றுள்ளமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று சிறந்த சமயப்பணியாற்றவும் நீண்ட ஆயுளுடன் நோய் நொடியின்றி சிறப்புடன் வாழவும் எல்லாம் வல்ல ஈழத்துச்சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.
மணிவாசகர் சபையினர், காரைநகர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



காரைநகர் மணிவாசகர் சபையின் உறுப்பினராக இருந்து சிறந்த சைவப்பணியாற்றிவரும்
சித்தாந்த வித்தகர் வே.நடராசா
அவர்கள் இந்து கலாசாரத் திணைக்களத்தின் "கலாபூசணம்" பட்டத்தினைப் பெற்றுள்ளமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மணிவாசகர் சபையினர், காரைநகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீளமான, குட்டையான தேள்கள் இலங்கையில்தான் உள்ளன

உலகின் மிகவும் நீளமான மற்றும் குட்டையான தேள் இனங்கள் இலங்கையிலேயே இருக்கின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகமும், செக்குடியரசிலுள்ள தேள் இனங்கள் சார்ந்த ஆய்வுத்துறை பேராசிரியரும் இணைந்து மேற்கொண்ட ஆய்வின்மூலமே இந்த விடயம் கண்டறியப்பட்டது.

'இலங்கையில் 18 வகையான தேள் இனங்கள் இருக்கின்றன. அவற்றில் 14 வகையானவை இலங்கைக்கே உரியவை.

இவற்றுள் வடக்கு மாகாணத்தில் வெள்ளை தேள் இனமே ஆபத்தான விடம் கொண்டது. ஏனையவை குறைவான பாதிப்பைத் தரக்கூடிய விடம் கொண்டவை.

தேள் கொட்டினால், உயிரிழப்பு ஏற்படும் என்ற அச்சம் தேவையில்லை. ஆகவே, அவற்றைக் கொல்வதை நிறுத்திக்கொள்வோம். ஆனால், உரிய மருத்துவ சிகிச்சைகள் பெற வேண்டும்' என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர். (வ-5)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி அன்னம்மா



தோற்றம் 02.03.1925 — மறைவு 22.12.2016

கொடுக்குளாய் ஆழியவளையைச் சேர்ந்த இளையதம்பி அன்னம்மா நேற்று (22.12.2016) வியாழக்கிழமை காலமானார்.
அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2016) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உடுத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தபால் கந்தோர் வீதி,
கொடுக்குளாய்,
ஆழியவளை.

தகவல்:
திருமதி நடராசா பாமாதேவி
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### குலநாயகம் ரமேஸ்



தோற்றம் 27.03.1976 — மறைவு 21.12.2016

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

பிரதம பொறியியலாளரும்,
சக உத்தியோகத்தர்களும்
கட்டட திணைக்களம் வலயம்-2,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி வ. தவானந்தம் அவர்களின்
பாசமிகு தாயார்
திருமதி அன்னப்பிள்ளை பரராசசிங்கம்
அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்.

## திருமதி திருமகள் சோமசுந்தரம்



வேலணை மேற்கு 7 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் . வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருமகள் சோமசுந்தரம் 22.12.2016 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-லச்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்புமனைவியும்நாமகள், மலர்மகள், கலைமகள், சரஸ்வதி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும் பாலசுப்பிரமணியம், விக்னேஸ்வரி, பாலச்சந்திரன் (தும்பிக்கையான் புடைவையகம் - முழங்காவில்) காலஞ்சென்ற விமலாதேவி, பாலகிருஸ்ணன், விஜயலட்சுமி, விஜயராணி,காலஞ்சென்ற விஜயரட்ணம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிர்மலா, நாகராசா, ஜெயபிரபா, சிவநாதன், வதனி,நித்தியானந்தம், தயாபரன், கலைச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியும் சதீஸ்வரன், சசிரேகா, சகிதா,சுரேகா, தினேஸ், செந்தூரன், விதுஷன், கரீசன், உயாங்கன், பவதாரணி,கஜந்தன், நிரூசிகா, கனோஜன், கலைவாணி, சிவரூபன், கிருஷன், மதுசன், விபுலாஸ், நபிசன், துஜீபன், துஸ்யந்தன், டிலச்சனா, தனுஜன், சதீஸ்வரன், நிவேதன், தருண், சதுர்ஜா,கனுஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடை பெற்று மதியம் 1.00மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை இந்து அம்பளவி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7 ஆம் வட்டாரம்,
வேலணை மேற்கு,
வேலணை.

தகவல்
குடும்பத்தினர். 0778708115

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 24.11.2016
வியாழக்கிழமை அன்று
சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்
அமரர்
செல்லையா சுப்பிரமணியம் (சோமு)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 22.12.2016 வியாழக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்க்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் 24.12.2016 சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சரசாலை மத்தி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## வேலாயுதர் கந்தையா



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் கந்தையா நேற்று (22.12.2016) வியாழக்கிழமை மாலை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதர் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பஞ்சவர்ணத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் இராசரத்தினம் காலஞ்சென்றவர்களான தங்கமலர், தங்கராணி, தங்கராசா, செல்வராசா ஆகியோரின் அன்புத்தந்தையும் அன்னலட்சுமியின் அன்புமாமனாரும் சுதர்சன் (ஜேர்மனி), ரமேஷ் - சுதாயினி (கனடா), சுதாகரன் (கனடா), நிர்மலன் - சுதர்சினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் கிஷாரா (கனடா), மகிசன் (கனடா) ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2016) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி கிழக்கு,
கைதடி.

தகவல்:
இராசத்தினம் (மகன்)

(லே/7088)(17.19.20)

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 02 . 1939



இறப்பு 22 . 12 . 2016

### திருமதி நாகேஸ்வரி மயில்வாகனம்

யாழ். சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி மயில்வாகனம் நேற்று (22.12.2016) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருமதி சிவயோகேஸ்வரி(வேவி) குகதாசன், திரு.மயில்வாகனம் சிவகுமார்(குமார்), திரு.மயில்வாகனம் விஜயகுமார்(விஜயன்), திரு.மயில்வாகனம் ஜெயகுமார்(பிரான்ஸ்), திருமதி வசந்தகுமாரி மகேந்திரன்(நோர்வே), காலஞ்சென்ற செல்வி விஜயகுமாரி மயில்வாகனம், திரு.மயில்வாகனம் கிருஸ்ண குமார்(நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயார் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2016) வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34, சந்தனமாதா கோவில்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
077 222 4561

தகவல்:
குடும்பத்தினர்

# விரல்களினால் சார்ஜ் ஏற்றும் ஸ்மார்ட் போன்

ஸ்மார்ட் அலைபேசியை தொட்டாலே சார்ஜ் ஏறும்படி விரல்களை சார்ஜராக மாற்றியுள்ளனர் விஞ்ஞானிகள்.

ஸ்மார்ட்போனில் பெரிய பிரச்சினை என்னவென்றால் சார்ஜ் விரைவாகத் தீர்ந்துவிடுவதுதான். எவ்வளவுதான் விலையுயர்ந்த போனாக இருந்தாலும், அதில் புதிய தொழில்நுட்பங்கள் வந்தாலும் இன்றுவரை இந்தப் பிரச்சினை நீடிக்கிறது.

இதனை முறியடிக்கும் நோக்கில் பென்சில்வேனியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஓர்கானிக் பொலிமர் செல்போனைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த ஓர்கானிக் பொலிமரால் செய்யப்பட்ட ஸ்மார்ட்போனின் திரையை தொட்டால் சார்ஜ் ஏறும் விதத்தில் வடிவமைத்துள்ளனர். இதில் உள்ள மற்றொரு சிறப்பம்சம் என்னவென்றால் மழைத்துளி திரையில் விழும்போது அதனை மின்சாரமாக்கி பேட்டரி தானாக சார்ஜ் ஏறும்படி சோதனை நடத்தி வருகின்றனர். (வ)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னப்பிள்ளை பரராஜசிங்கம்



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் கைதடி நுணாவிலை வதிவிடமாகவும் கொண்ட அன்னப்பிள்ளை பரராஜசிங்கம் நேற்று (22.12.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரராஜசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் தவறஞ்சிதம், தவக்குமார், தவராணி, செல்வராணி, இராஜேந்திரம், வசந்தகுமாரி(ஆசிரியர், யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்), இராசகுமார், ஞானதேவன், ஞானறஞ்சிதம் ஆகியோரின் அன்புத்தாயாரும் தர்மலிங்கம், சரஸ்வதி, பாலசிங்கம், கனகசபை, தவறஞ்சினி, தவா னந்தம், கருணாநிதி, ஷாமினி(ஆசிரியர், யா/ கைதடி குருசாமி வித்தியாலயம்), இராஜேந்திரன் ஆகியோரின் அன்புமாமியாரும் தயாநந்தினி, தர்மேந்தினி, பிரபாகரன், பிரபலதன், அனுசன், தாரணி, சுரேன், சாந்தன், பாலசோபனா, பாலநிஜந்தன், பாலநிதர்சன், பாலநிருத்தனா, டிலக்ஷன், டிலக்ஷனா, பிரசன்னா, அர்ச்சனா, அர்ச்சயா, நிறோசன், பிரவீனா, நிதர்சிகா, நிதுர்சன், கிரிஷிகன், பவின்சன், கவிஷனா, அபிநயன், அபிராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சேயோன், சியான், பிரித்திகா, நிஷோன், திரிஷோன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.12.2016) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நுணாவில் மேற்கில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி. தவானந்தம்(றஞ்சன்)
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்
077 440 9918
077 138 7110

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவுகளைக் கையளித்தல்

மூதறிஞர், அமரர்,

**'சிற்பி' சிவசரவணபவன்**



அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுப்பகிர்வும்
நூல் வெளியீடும்

காலம் : சனிக்கிழமை, பி.ப 3.00 மணி



இடம் : இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி, நீராவியடி

தலைமை

செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன்



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# கண்ணீர் அஞ்சலி



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும்,
மகாவித்தியாலய மாவத்தை
( MAHA VIDYALAYA MAWATHA ) கொழும்பை
வதிவிடமாகக் கொண்டவரும், நெடுந்தீவில்
முதன்முறையாக கரமத்தைக் கந்த சுவாமியார்
ஆலயத்தில இராஜகோபுரம் அமைத்தவரும்
முருக பக்தனுமாகிய

**வள்ளல் ஐயம்பிள்ளை பரமலிங்கம்**

அவர்களின் திடீர் மறைவு எம் எல்லோருக்கும் பேரிழப்பாகும். அமைதியான ஆழ்ந்த உறக்கத்தில் அன்னாரின் ஆத்மா கரமத்தை முருகனின் பாதங்களில் சரணடையப் பிரார்த்திக்கின்றோம். துயரில் மூழ்கியுள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அறங்காவல் சபையினர்,**
**கரமத்தைக் கந்தசுவாமி ஆலயம், நெடுந்தீவு -4**

# நெஞ்சம் நெகிழும் ஓராண்டு நினைவலைகளும் அழைப்பும்



## அமரர் கந்தன் துரைசிங்கம்

**தோற்றம்** 23.05.1956 — **மறைவு** 04.01.2016

திதி: தசமி

ஆண்டொன்று சென்றதையா எம்மைப் பிரிந்து
ஆறுமோ நம் துயரம் உறவுகள் பல இருந்தென்ன
ஆற்றுவோர் யார் என எம்மைப் பிரிந்து சென்றீர்கள்
ஆண்டென்ன பல ஆண்டுகள் சென்றாலும் ஆறாது நம் துயரம்
ஆண்டுதோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ என ஆறுதல் அடைகின்றோம்
காலங்கள் ஓடி மறையலாம் எமது அப்பாவின்
நினைவலைகள் மாறாது மாறாது
எங்கள் அப்பாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 04.01.2016 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (23.12.2016) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அநநிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரையும் குடும்ப சகிதம் அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி வீதி , பத்தமேனி,
அச்சுவேலி.

**குடும்பத்தினர்.**

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 09.11.2016 அன்று
சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு



## அமரர் ஆனந்தகுமார் கஜவிந்தன்

**தோற்றம்** 21.01.1997

**மறைவு** 09.11.2016

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (23.12.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீலங்கா வீதி,
உடுவில் வடக்கு,
சுன்னாகம்.

**ஆனந்தகுமார், புஸ்பராணி**
**076 606 1812**

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
22 . 07 . 1948



உதிர்வு
23 . 12 . 2011

## அமரர் முருகேசு பாக்கியநாதன் (சொக்கர்)

**(உரிமையாளர் - விநாயகர் ஏணிங்வேக்ஸ்)**

ஈரவிழிகள் இன்னமும் காயவில்லை
இதயத்தின் வேதனைகள் குறையவில்லை
நினைவகலா நினைவுகளுடன் இறைவனடி இணைந்த நீங்கள்
ஐந்தாண்டுகள் நிறைந்ததப்பா மறக்க முடியவில்லையப்பா எங்களால்
மாறவில்லையப்பா உங்கள் நினைவுகள்
முகம் காணா உங்களை அழைக்கின்றோம்
முடியாமல் தினமும் தவிக்கின்றோம்
உழைப்பால் உயர்ந்து உதிரத்தால் வலுவூட்டி
உத்தமராய் நாம் வாழ உண்மையுடன் வாழ்ந்தீரே அப்பா
எமைப் பெற்றவரே தவமாய் தவமிருப்போம்
ஏழேழு ஜென்மத்துக்கும் எம் தந்தையாய் கிடைக்க
உங்கள் ஆன்மா ஆண்டவரின் திருவடியில்
அமைதிபெற வேண்டுகின்றோம் அப்பா
அனுதினமும் இறையவனை நாமிங்கு.

என்றும் உங்கள் உயிருடன் கலந்திருக்கும்

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம், உடுவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## சுப்பையா திவாகரமூர்த்தி

**(சின்னகிளியண்ணா)**



இணுவிலைப் பிறப்பிடமாகவும் கே. கே. எஸ் வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா திவாகரமூர்த்தி நேற்று (22.12.2016) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-செல்லம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ் சென்றவர்களான பொன்னுத்துரை-இரத்தினம் தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற பாக்கியலட்சுமி (சின்னமணி)யின் அன்புக்கணவரும் பாஸ்கரமூர்த்தி (UK), சுபாஜினி (Swiss), தயாளினி (முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகு, வ.மா), அருள்நிதி (UK), ஜனுஜா (UK) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான தட்சணாமூர்த்தி, சொக்கநாதன்(நாதன் பிரதர்ஸ், கொழும்பு) மற்றும் தில்லையம்பலம், இராசேந்திரம், இராசசௌந்தரி, சௌபாக்கியலட்சுமி, பாலசுந்தரம் (பொறியியலாளர்), இராமச்சந்திரன்(நாதன் பிரதர்ஸ், இணுவில்), சிவசுப்பிரமணியம், விக்னேஸ்வரன், சண்முகராசா ஆகியோரின் சகோதரரும் கனிஷ்டா, ஸ்கந்தரூபன், சுபாஸ்கரன் (ஆசிரியர். யா/வயாவிளான் மத்திய கல்லூரி), சிவகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கிஷன், திஷானி, கிரன், டரிக்ஷன், டதுஷன், மானஷன், அஸ்விதா, சரணியா, சந்துஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ் வீதி,
கோண்டாவில் மேற்கு.
021 224 1742

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதிக்கு...

தொடர்பில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஆளுநர் ரெஜினோல்ட் குரே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண மக்கள் தமது குறைகள் - பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு நேரடியாக முறைப்பாடுகளைத் தெரிவிக்கும் செயலகம் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் அடுத்த ஆண்டில் இருந்து இயங்கவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மாகாண மக்கள் தங்கள் பிரச்சினைகளை ஆளுநர் செயலகத்தில் மேற்படி அலுவலகத்தில் சமர்ப்பித்ததும், நேரடியாக ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் - என்றார்.

'வடக்கில் கடந்த காலங்களில் நிலவிய குற்றச் செயல்கள் தற்போது பெருமளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் கட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கப்படுகின்றது. ஆண்டு ரீதியாக இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது வட மாகாணத்தின் குற்றச் செயல்கள் குறைவாகவே இடம்பெற்றுள்ளன' என்று வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்தக் கலந்துரையாடலில் குறிப்பிட்டார். (த-5-101)

## மைத்திரி...

செயற்படுபவர்கள் தொடர்பாக, சீன அரசிடம் மூன்று சீன நிறுவனங்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளன.

கடந்த 6 ஆண்டுகளாக இலங்கையில் இயங்கி வரும் இந்த நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்குச் சீன அரசு அனுப்பி வைத்துள்ளது.

சீனா தொடர்பாக முன்னெடுக்கப்படும் பொய்யான பரப்புரைகள் குறித்து அதிருப்தியடைவதாகவும், சீன அரசினால் இலங்கை அரசுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியினரே, அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கரில், சிறப்புப் பொருளாதார வலயத்தை அமைக்கும் சீனாவின் திட்டத்துக்கு எதிராக பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## பன்னாட்டு...

தெரிவித்தார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் பாதீட்டைச் சபையில் நேற்றுச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட் டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தின் நீர்வளம், குறிப்பாக யாழ். குடாநாட்டின் நீர்வளம் அதன் அளவிலும் தரத்திலும் வேகமாகக் கீழிறங்கி வருகிறது. இதனைக் கருத்திற் கொண்டு எமது நீர்வளத்தை மீட்புச் செய்வதற்கு வடக்கு மாகாணத்துக்கான ஒரு நீரியல் கொள்கை ஒன்றின் அவசியம் குறித்துப் பலரும் வலியுறுத்தி வருகின்றார்கள்.

எமக்கான நீரியல் கொள்கையை உருவாக்கும் முனைப்பில் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம், 29ஆம், 30 ஆம் திகதிகளில் பன்னாட்டு நீரியல் ஆய்வு மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சபையின் அனுமதியுடன், பிரதித் தலைமைச் செயலாளர் (பொறியியல் சேவைகள்) இணைப்பாளராகக் கொண்டு பூர்வாங்க வேலைகள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளன. இதில் பிறநாட்டில் இருந்தும் நீரியல் நிபுணர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் முன்னேற்பாடாகவே, விவசாய அமைச்சின் சார்பில் பிரதித் தலைமைச் செயலாளர் (பொறியியல் சேவைகள்) தலைமையில் நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர்கள் இருவர், விவசாயத் திணைக்களத்தின் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் ஒருவர் மற்றும் எமது மாகாண சபை உறுப்பினர்கள் இருவர் அடங்கிய அறுவர் குழுவும், யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து இரு பேராசிரியர்களும் பன்னாட்டு நீர் ஆராய்ச்சி மையத்தின் ஏற்பாட்டில் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற நிலத்தடி நீர் முகாமைத்துவம் தொடர்பான ஐந்து வார காலப் பயிற்சிநெறியில் பங்கேற்றிருந்தனர் - என்றார். (த-5-7-8)

## மைத்திரியிடம்...

ஊடகப் பிரிவு அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தனது பதவியிலிருந்து விடைபெறமுன்னர் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்ட பான் கீ மூன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இலங்கை, சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றங்களைப் பாராட்டியதுடன் நல்லிணக்க செயற்பாடுகளுக்கான இலங்கையின் அர்ப்பணிப்பு மிகவும் பாராட்டுக்குரியது எனக் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராகக் கடமையாற்றிய காலத்தில் இலங்கையை புதிய பாதையில் பயணிக்கச் செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட அர்ப்பணிப்பைப் பாராட்டிய அவர், ஜனாதிபதியின் தலைமையில் இலங்கை, எதிர்காலத்தில் மேலும் பல வெற்றிகளைப் பெறும் என்று தெரிவித்தார்.

பதவியிலிருந்து விலகிச்சென்றாலும் இலங்கையின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக வழங்கக்கூடிய அனைத்து உதவிகளையும் வழங்குவதாகவும் பான் கீ மூன் இதன்போது உறுதியளித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக பான் கீ மூன், தொடர்ச்சியாக இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்பைப் பாராட்டிய ஜனாதிபதி, அவருக்குத் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார் - என்றுள்ளது. (வ-5)

## ஜனாதிபதித்...

தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

புதிய அரசமைப்பின் உருவாக்கம் மீதான அரசின் தற்போதைய நகர்வு தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. நிறைவேற்று அதிகாரம்மிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்காக இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆணை வழங்கிய ஒரு தேர்தல் அது.

எல்லா ஜனாதிபதித் தேர்தலிலும் நிறைவேற்று அதிகாரம்மிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கே மக் கள் வாக்களித்தனர். ஆனால் வெற்றி பெற்றதும் ஜனாதிபதிகள் மக்களின் அந்த ஆணையை மீறி நடந்ததுதான் வரலாறு.

நிறைவேற்று அதிகாரம்மிக்க ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பார்கள் என்று நம்பிச் சந்திரிகாவுக்கும் மகிந்தவுக்கும் நாம் ஆதரவு வழங்கினோம். ஆனால், அவர்கள் அந்த வாக்குறுதியைக் காப்பாற்ற வில்லை. இறுதியாக மைத்திரிக்கு ஆதரவு வழங்கி அவரை வெற்றிபெற வைத்தோம். நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறை மையை இல்லாதொழிப்பதற்கான சில வேலைகளை நாம் செய்தோம். இன்னும் பயனில்லை.

எனவே புதிய அரசமைப்பின் ஊடாக நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படவேண்டும்-என்றார். (த-4)

## நெல்...

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், விவசாய அமைச்சு மீதான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவைச் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

2014 ஆம் ஆண்டில் 70 ஆயிரத்து 212 ஹெக்ரேயர் பரப்பில் 100 ஆயிரத்து 714 மெற்றிக்தொன் நெல்லும், 2015 ஆம் ஆண்டில் 105 ஆயிரத்து 735 ஹெக்ரேயர் பரப்பில் 324 ஆயிரத்து 294 மெற்றிக் தொன் நெல்லும் 2016 ஆம் ஆண்டில் 107 ஆயிரத்து 321 ஹெக்ரேயர் விஸ்தீரணத்தில் 300 ஆயிரத்து 662 மெற்றிக்தொன் நெல்லும் விளைவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இரணைமடுக் குளத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகள் காரணமாகச் சிறுபோக நெற்செய்கை 2 ஆயிரத்து 400 ஹெக்ரேயர் பரப்பளவிலேயே மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டு போதிய மழை வீழ்ச்சி இன்மை காரணமாக அனைத்து மாவட்டங்களிலும் உற்பத்தி குறைவடைந்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு நெல் உற்பத்தி சிறிதளவால் குறைவடைந்துள்ளது.

உற்பத்தியில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் வடக்கு மாகாண மக்களின் நுகர்வுக்குப் போதுமானது. மிகை உற்பத்தி ஏனைய மாகாணங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது என்றார். (த-5-7-8)

## கொழும்பிடமே...

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், தேசிய படை வீரர்களின் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

தேசிய படை வீரர்களின் ஒன்றியத்துக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலேயே மேற்படி விடயத்தைச் சுட்டிக்காட்டியதாக, சந்திப்பில் கலந்து கொண்ட ரியல் அட்மிரல் சரத் வீரசேகர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

படையினர் சார்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டது. படையினரைப் பன்னாட்டுப் போர்க்குற்ற நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லும் வகையில் காணாமற் போனோர் பணியகம் குறித்த சட்டவரைவு அமையும். இதன் பின்னணியில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தலைமையிலான குழுவொன்று இருக்கின்றது. சாட்சிகளைப் பாதுகாப்பதற்குரிய சட்டமும் நடைமுறையில் இருப்பதால் மேற்படி விவகாரம் பயங்கரமாக அமையும் எனவும் எமது தரப்பில் கருத்து முன்வைக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, படையினரைப் பழிவாங்கும் எந்தவொரு செயலுக்கும் தான் அனுமதி வழங்கமாட்டார் என்றும் பன்னாட்டு நீதிமன்றம் கொண்டு செல்ல இடமளிக்கமாட்டார் என்றும் குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்புத் தயாரிப்புப் பணி குறித்தும் அங்கு பேசப்பட்டது. அதிகாரங்களைப் பகிர்வதற்கு எதிர்ப்பை வெளியிட்டோம். கொழும்பு அரசின் கீழேயே எல்லாம் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினோம். படைத் தரப்பின் நிலைப்பாடு இதுவென மிகவும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

சரி, அதிகாரப் பகிர்வை நீங்கள் எதிர்க்கின்றீர்கள். அப்படியானால் இந்தப் பிரச்சினைக்கு நீங்கள் முன்வைக்கும் தீர்வுதான் என்னவென ஜனாதிபதி இதன்போது வினவினார்.

இதற்குப் பதிலளித்த நான், அப்படி என்னதான் பிரச்சினை இருக்கின்றது என்று வினவினேன். சிங்களவருக்கு இருக்கின்ற அதேபோல் தமிழருக்கு இல்லாத ஒரு விடயத்தைக் கூறுமாறு ஜனாதிபதியிடம் கேட்டேன். தமிழருக்கு இருக்கின்ற அதேபோல் சிங்களவருக்கு இல்லாத 10 விடயங்களை என்னால் கூறமுடியும் எனவும் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டேன்.

முன்னாள் படை அதிகாரிகள் கைது செய்யப்படுவதற்கும் கடும் கண்டனத்தை வெளியிட்டோம். இதற்கு தானும் பகிரங்கமாக எதிர்ப்பை வெளியிட்டுள்ளார் என்று ஜனாதிபதி எம்மிடம் குறிப்பிட்டார் - என்றார் சரத் வீரசேகர. (த-5)

## குடத்தனையில்...

பட்டுள்ளன. இருப்பினும் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபரின் சிறப்புப் போதைப் பொருள் தடுப் புப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் குடத்தனைக் காட்டுப் பகுதியைச் சுற்றி வளைத்த பொலிஸார், இடத்தை அடையாளப்படுத்தி தேடுதலை முன்னெடுத்தனர். அந்தப்பகுதியில் பொதி செய்யப்பட்டு மறைத்து வைக்கப்பட்ட நிலையில் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. கஞ்சாப் பொதிகளைக் கைப்பற்றிய போதைப்பொருள் தடுப்புப் புலனாய்வுப் பிரினரினர், மேலதிக விசாரணைக்காக அவற்றைப் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் போதைப் பொருள் தடுப்பு புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குடத்தனைக் காட்டுப் பகுதி, கடத்தப்படும் கஞ்சாப் பொதிகளை புதைத்து வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் இடமாக மாறி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் இதே பகுதியில் பருத்தித்துறைப் பொலிஸார் நடத்திய தேடுதலில் 15 கிலோ கஞ்சாப் பொதிகள் 8 பைகளில் பொதி செய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5-109)

## எதிர்பாராமல்...

பர்கள், தமக்கு நியமனம் வழங்குமாறு கோரி வடக்கு மாகாண சபை முன்பாக நேற்றுக் கவனவீர்ப்பிலும் ஈடுபட்டனர். அதில் அவர்கள் முதலமைச்சரையும் கண்டித்தனர்.

'நாங்கள் அதிபர் தரப் பரீட்சையில் துரதிர்ஷ்டவசமாகப் பெயிலாகிவிட்டோம். வயதிலும் கூடியவர்களாக இருக்கின்றோம். தற்போது அதிபர் தரப் பரீட்சையில் மிகவும் இளமையானவர்களும் சித்தியடைந்துள்ளனர். நாங்கள் பல வருட அனுபவங்களைப் பெற்றவர்கள். இன்றுவரை பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றுகிறோம். எங்களை அந்தப் பதவியிலிருந்து விடுவிப்பதை ஏற்கமாட்டோம். எமது பதவியிலிருந்து இறங்கிப் பாடசாலைகளில் ஆசிரியர்களாகக் கடமையாற்ற முடியாது.

வெளிப் பிரதேசத்தில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்த க.வி.விக்னேஸ்வரனை வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக கொண்டுவந்தோம். போரில் பாதிக்கப்பட்ட எங்களது பிரச்சினைகளைப் போக்குவார் என்று நம்பியிருந்தோம். ஆனால் அவர் எங்களைத் துன்பத்தில் ஆழ்த்தும் நிலைக்குக் கொண்டு செல்கிறார். அவ்வாறு இடம்பெற்றால் நாங்கள் சமூகத்தில் முகம் காட்ட முடியாதநிலை ஏற்படும். அதிபராக இருந்தவர் ஆசிரியராக வருகிறார் என்று பாடசாலைகளில் மாணவர்கள் எங்களை மதிக்க மாட்டார்கள்' என்று கடமை நிறைவேற்று அதிபர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

போராட்ட இடத்துக்குச் சென்ற வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் மற்றும் உறுப்பினர்கள் அவர்களுடன் கலந்துரையாடின சபை அமர்வின் தேநீர் இடைவேளையின் போது முதலமைச்சரைச் சந்திக்க ஏற்பா செய்வதாக உறுதியளித்தபடி, மதியம் வைச் செயலகக் கட்டடத் தொகுதியில் திப்பு இடம்பெற்றது.

அதன்போது, 'உங்கள் பிரச்சினை தொடர்பில் ஆராயப்படும். உங்களுக்கு பரீட்சையில் தேர்ச்சியடைந்தவர்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் ந டிக்கை மேற்கொள்ளப்படும் என்று மு மைச்சர் உறுதியளித்தார். இதனால் எ போராட்டத்தைக் கைவிடுகிறோம்' என கடமை நிறைவேற்று அதிபர்கள் தெரி தனர்.

இதேவேளை, இது தொடர்பில் இலங் ஆசிரியர் சங்கம் அனுப்பிய செய்திக் கு பில், கொழும்பு கல்வி அமைச்சின் அ சரவைத் தீர்மானத்துக்கமைய நேர யாகப் புதிய தரம்பெற்ற அதிபர் நியம இடம்பெறவுள்ள நிலையில், கடமைநி வேற்று அதிபர்களைத் தொடர்ந்தும் காக்க மேற்கொண்டுவரும் வடக்கு ம ணக் கல்வியமைச்சரின் செயற்பாட் கண்டிக்கிறோம். கடமைநிறைவேற்று பர்கள் அதிபர் சேவைப் பரீட்சையில் யடையா மல் தமது தகுதியற்ற நிலை மீண்டும் அதிபர்களாக செயற்பட முனை மோசமான செயற்பாடு-என்றுள்ளது.

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 23

**துடுப்பாட்டம்**

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுப் பிரிவினருக்கான மூன் றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் ஆட்டம் ஒன்று தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. இதில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதவுள்ளது.

**எவ்.ஏ. கிண்ணம்**
**வவுனியா லீக்**

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய மட்டத்தில் நடத்திவரும் எவ்.ஏ.கிண்ணத் தொடரில் வவுனியா லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் வவுனியா சிறுவர்பூங்கா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண் சைய்ன் அணியை எதிர்த்து லயன் அணி மோதவுள்ளது.

**ஞானமுருகனின்**
**கால்பந்தாட்டம்**

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளிநொச்சி உருத்திர புரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**மனோகராவின் கால்பந்தாட்டம்**

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ்விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-23-422-108)

## தேசிய பளுதூக்கல் தொடர்; வடக்குக்கு சில பதக்கங்கள்


ஆசிகா

யாழ்ப்பாணம், டிசெ. 23

இலங்கை பளுதூக்கு சங்கம் நடத்தும் கனிஷ்ட, சிரேஷ்ட, இளையோருக்கான தேசியமட்ட தொடரில் வடக்குக்கு ஒரு தங்கம் உட்பட நான்கு பதக்கங்கள் கிடைத்துள்ளன. பொலனறுவையில் உள்ள பன்னாட்டு பளுதூக்கல் நிலையத்தில் தொடர் இடம்பெற்று வருகின்றது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இளையோருக்கான போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி ஆசிகா 63 கிலோ எடைப்பிரிவில் 155 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கதினையும், பாசையூர் சென். அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியலாய மாணவிகளான ஜெ.சுகன்யா 69 கிலோ எடைப்பிரிவில் 110 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப்பதக்கத்தையும், பி.ரதினா 58 கிலோ எடைப்பிரிவில் 80 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி நிலோஜினி 69 கிலோ எடைப்பிரிவில் 95கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்தினையும் சுவீகரித்தனர். (ம-23)


சுகன்யா


ரதினா


நிலோஜினி

## வடக்கின் அடைவில் முன்னேற்றம்

இரவீந்திரன் பெருமிதம்

தென்மராட்சி, டிசெ. 23

தற்போது அனைத்து பிரதேச செயலகங்களிலும் விளையாட்டு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மூலம் கிராமப்புற வீர வீராங்களைகளை இனங் கண்டு அவர்களை எதிர்காலத்தில் சிறந்த வீர வீராங்கனைகளாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன்.

சாவகச்சேரி பொன் விழா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வடக்கின் வர்ண இரவுகள் நிழ்வின் தலைமை உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடமாகாண விளையாட்டுத் துறையினை ஊக்குவிக்க கொழும்பு விளையாட்டு அமைச்சுத் தேவையான உதவிகளை வழங்க முன்வந்துள்ளது. அதன் முன்னேற்பாடாக எமது மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், பிரதேச விளையாட்டு அலுவலர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் போன்றோருக்கு அண்மையில் களுத்துறையில் பயிற்சி முகாம் நடத்தப்பட்டு விளையாட்டின் தொழில்நுட்பங்கள், நுணுக்கங்கள் போன்றவை போதிக்கப்பட்டன. தற்போது வடக்கின் விளையாட்டு அடைவுகளில் பெருமளவான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நகரப்புறமாக இருந்தாலும் கிராமப்புறமாக இருந்தாலும் வீர வீராங் கனைகள் இனங்காணப்படின் விளையாட்டு அமைச்சுடன் தொடர்பு கொள்ளுங்கள் அவர்கள் ஊக்குவிக்கப்பட்டு சாதனையாளர்களாக மாற்றப்படுவார்கள் என்று ரவீந்திரன் மேலும் தெரிவித்தார்.

(ம-9)

## சென். நீக்கிலஸ் வி.க. காலிறுதிக்குத் தகுதி

அல்வாய் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் காலிறுதிக்குத் தகுதி பெற்றது. மனோகராவின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 6 ஆவது நிமிடத்தில் சஞ்சீவனின் உதவியுடன் முதல் கோலைப் பதிவுசெய்தது நீக்கிலஸ். 20 ஆவதுநிமிடத்தில்கலிஸ்ரன்பிறிதொருகோலைப் பதவுசெய்தார். 2:0 என்று நீக்கிலஸின் ஆதிக்கத்துடன் முதல் பாதி முடிவுக்கு வந்தது. இரண்டாவது பாதியில் அன்ரனிஸின் சார்பாக ஒரு கோல் பதிவாகிய போதிலும் அதற்கும் பதிலடி கொடுத்தது நீக்கிலஸ். முடிவில் அந்த அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-422-108)

## தேசியமட்ட மேசைப்பந்தாட்டத் தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 23

தேசியமட்ட மேசைப்பந்தாட்டத் தொடர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது. அரச திணைக்களங்களின் முடிவுகள்.

ஆண்கள் பிரிவில் 20 தொடக்கம் 25 வயதுப்பிரிவில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த சந்துரு சம்பியன் கிண்ணத்தையும் நில அளவைகள் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த புஸ்பகுமார இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

26 தொடக்கம் 30 வயதுப் பிரிவில் தபால் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த சத்துராங்க சம்பியன் கிண்ணத்தையும் பொலிஸ் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த இரான் இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

31 தொடக்கம் 35 வயதுப் பிரிவில் கண்டி நகர சபையை பிரதிநிதித்துவம் செய்த திசநாயக்கசம்பியன் கிண்ணத்தையும் பொலிஸ் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த சுரங்க பீரிஸ் இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

36 தொடக்கம் 40 வயதுப் பிரிவில் யாழ். கல்வி திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த கிங்ஸ்லி சம்பியன் கிண்ணத்தையும் இலங்கை சுங்கத் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த கருணாதிலக இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

41 தொடக்கம் 45 வயதுப் பிரிவில் கண்டி நகர சபையை பிரதிநிதித்துவம் செய்த விதானகே சம்பியன் கிண்ணத்தையும் ஆனோல்ட் இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

46 தொடக்கம் 50 வயதுப் பிரிவில் இலங்கை கல்வித் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த பாலசுப்பிரமணியம் சம்பியன் கிண்ணத்தையும் இலங்கை சுங்கத் திணைக் களத்தை பிரதிநிதித்துவம் செய்த ஜெயவீர இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

51 தொடக்கம் 55 வயதுப் பிரிவில் யாழ். கல்வித் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த ஜெ.மோகன் சம்பியன் கிண்ணத்தையும் கொழும்பு நகர சபையை பிரதிநிதித்துவம் செய்த சந்தனபெரேரா இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

56 தொடக்கம் 60 வயதுப் பிரிவில் கண்டி நகர சபையை பிரதிநிதித்துவம் செய்த சாவீர் சம்பியன் கிண்ணத்தையும் நில அளவைகள் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த சந்திரசேகர இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

பெண்களுக்கான ஆட்டத்தில் 20 தொடக்கம் 25 வயதுப் பிரிவில் நில அளவைகள் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த ஏராங்கி சம்பியன் கிண்ணத்தையும் இலங்கை சுங்கத் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கௌசி இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

26 தொடக்கம் 30 வயதுப் பிரிவில் கொழும்பு நகர சபையை பிரதிநிதித்துவம் செய்த மதுசானி பெரேரா சம்பியன் கிண்ணத்தையும் யாழ். கல்வித் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த வித்தியாதாரணி இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

31 தொடக்கம் 35 வயதுப் பிரிவில் இலங்கை சுங்க திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த வீரசூரிய சம்பியன் கிண்ணத்தையும் கொழும்பு நகர சபையை பிரதிநிதித்துவம் செய்த தாரணிபத்மராாணி இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

36 தொடக்கம் 40 வயதுப் பிரிவில் இலங்கை சுங்கத் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த புஸ்பமாலிங்க சம்பியன் கிண்ணத்தையும் சியுரா இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

41 தொடக்கம் 45 வயதுப் பிரிவில் புகையிரதத் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த நிரோஸி கேரத் சம்பியன் கிண்ணத்தையும் யாழ். கல்வித் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த மைதிலி இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

51 தொடக்கம் 55 வயதுப் பிரிவில் இலங்கை சுங்க திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த சுவர்ணகாந்தி சம்பியன் கிண்ணத்தையும் கைப்பற்றினர். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஐ.சி.சி. டெஸ்ட் அணியில் ரங்கன கேரத்துக்கு இடம்

பன்னாட்டு கிரிக்கெட் சபை இந்த ஆண்டுக்கான தனது சிறந்த டெஸ்ட் அணியை (கனவு அணியை) அறிவித்துள்ளது. இலங்கை அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளரான கேரத் இடம்பிடித்தார்.

இங்கிலாந்து அணியின் தலைவரான அலிஸ்டர் குக், கனவு அணியின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். அவர் ஆரம்ப வீரராகவும் உள்ளார். குக்குடன் களமிறங்கும் பிறிதொரு ஆரம்ப வீரராக ஆஸ்திரேலிய அணியின் டேவிட் வோர்ணர் பெயரிடப்பட்டார். இந்திய அணியின் சகலதுறை வீரரான அஸ்வினும் அணியில் இடம்பிடித்துள்ளார்.

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் டெஸ்ட் கனவு அணி விவரம் - வோர்ணர், குக், வில்லியம்சன் (நியூசிலாந்து), ரூட் (இங்கிலாந்து), வோக்ஸ் (ஆஸ்திரேலியா), பரிஸ்ரெளவ் (இங்கிலாந்து), ஸ்ரோக்ஸ் (இங்கிலாந்து), அஸ்வின், கேரத், ஸ்ராக் (ஆஸ்திரேலியா), ஸ்ரெய்ன் (தென்னாபிரிக்கா) 12ஆவது வீரராக ஆஸ்திரேலிய அணியின் சிமித் ஆகியோர் உள்ளனர். (ம)

# ஆண்டின் சிறந்த வீரர்; தெரிவானார் அஸ்வின்

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் நடப்பு வருடத்தின் சிறந்த வீரராகத் தெரிவானார் இந்திய அணியின் சகலதுறை வீரரான அஸ்வின்.



பன்னாட்டு கிரிக்கெட் சபை தனது கனவு அணி மற்றும் விருதுகளை நேற்று அறிவித்தது. ஒருநாள், ரி-20, டெஸ்ட் என மூன்று விதமான ஆட்டங்களிலும் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்திய அஸ்வின் ஆண்டின் சிறந்த வீரராகத் தெரிவானார். சிறந்த டெஸ்ட் வீரர் விருதும் அஸ்வினுக்குக் கிடைத்தது.

ஒருநாள் ஆட்டங்களுக்கான சிறந்த வீரராக தென்னாபிரிக்காவின் குயின்டன் டி ஹொக்கும், ஒருநாள் மற்றும் ரி-20 ஆட்டங்களின் சிறந்த வீராங்கனையாக நியூசிலாந்து அணியின் தலைவி பேடிஸும் தெரிவாகினர். ரி-20 ஆட்டங்களில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய வீரராக மேற்கிந்தியத் தீவுகளின் கர்லஸ் பிரீத்வைட், சிறந்த நடுவராக எராஸ்மஸ் ஆகியோரும் அறிவிக்கப்பட்டனர்.

அஸ்வினின் தெரிவுக்கு கிரிக்கெட் ஜாம்பவான்கள் பலரும் தமது வாழ்த்தைத் தெரிவித்தனர். சமூக வலைத்தளங்களிலும் அஸ்வினுக்கு வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன. (ம)



## கிவித்தோவாவுக்கு அறுவைச் சிகிச்சை

நட்சத்திர ரென்னிஸ் வீராங்கனையான பெட்ரா கிவித்தோவா மர்ம நபரால் கத்திக்குத்துக்கு உள்ளாகிய நிலையில் அவருக்கு கிட்டத்தட்ட மூன்றரை மணி நேரம் அறுவைச் சிகிச்சை நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

செக்குடியரசின் கிழக்கு பகுதியில் புரோஸ்டெஜோவ் நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் கிவித்தோவா வசித்து வருகிறார். கடந்த செவ்வாய்க்கிழமை காலை கிவித்தோவாவின் வீட்டுக்குள் புகுந்த மர்ம நபர் அவரை கத்தியால் தாக்கினார். கிவித்தோவாவும் தன்னைக் காக்கும் முயற்சியில் ஈடுபட்டமையால் கையில் மட்டும் சில கத்திக்குத்துகள் விழுந்தன. கிவித்தோவா பலமாகச் சத்தம்போட்ட பின்னர் அந்த நபர் அங்கிருந்து தப்பிச் சென்றார் என்று சொல்லப்பட்டது. விரைவில் குணமடைந்து களத்துக்குத் திரும்பும் நம்பிக்கையையும் அவர் வெளியிட்டிருந்தார். ஆனால் காயம் குணமடைய அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியிருந்ததால் மருத்துவ ஆலோசனையுடன் கிட்டத்தட்ட மூன்றரை மணிநேரம் கிவித்தோவாவுக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. (ம)

# ஒருநாள் கனவு அணிக்கு கோக்லி தலைவரானார்

பன்னாட்டு கிரிக்கெட் சபை ஒருநாள் ஆட்டங்களுக்கான தனது கனவு அணியை நேற்று அறிவித்தது. இந்திய டெஸ்ட் அணியின் தலைவரான கோக்லி, இந்த அணியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.



காயம் காரணமாக கடந்த சில மாதங்களாக தென்னாபிரிக்க அணியின் தலைவர் வில்லியர்ஸ் ஓய்விலிருந்து வருகிறார். எனினும் அவர் இந்த அணியில் இடம்பிடித்துள்ளார். டெஸ்ட் அணியில் இடம்பிடித்த ஆஸ்திரேலிய வீரர்களான ஸ்ராக் மற்றும் வோர்ணர் ஆகியோரும் இந்த அணியில் இடம்பிடித்துள்ளனர்.

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஒருநாள் ஆட்டங்களுக்கான கனவு அணி விவரம் - வோர்ணர், குயின்டன் டி ஹொக் (இலக்குக் காப்பாளர்), ரோகித் சர்மா (இந்தியா), கோக்லி, வில்லியர்ஸ், பட்லர் (இங்கிலாந்து), மிச்செல் மார்ஸ் (ஆஸ்திரேலியா), ஜடேயா (இந்தியா), ஸ்ராக், ரபாடா (தென்னாபிரிக்கா), நரைன் (மேற்கிந்தியத் தீவுகள்) 12 ஆவது வீரராக தென்னாபிரிக்காவின் தாகிர் இடம்பிடித்துள்ளார். (ம)



## கறுப்புத் துடுப்புக்கு ஆஸியில் தடை

கறுப்புநிற துடுப்புமட்டையைப் பாவிப்பதற்கு மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரரான ரசலுக்குத் தடை விதிக்கப் பட்டது.

ஆஸ்திரேலியக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் பிக்பாஷ் ரி-20 தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. சிட்னி தண்டர்ஸ் அணிக்காக ரசல் விளையாடி வருகிறார். அவர் தனது முதலாவது ஆட்டத்தில் கறுப்புநிறத் துடுப்பு மட்டையைப் பயன்படுத்தினார். இதற்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் அனுமதியையும் பெற்று இருந்தார்.

ஆனால் கறுப்பு நிறத் துடுப்பு மட்டை பந்தின் இயல்பான தன்மையை மழுங்கடிக்கிறது என்று நடுவர்கள் குற்றஞ்சுமத்தியதை அடுத்து ரசலுக்கு வழங்கிய அனுமதியை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை திரும்பப் பெற்றது. (ம)

# இந்தியா சிறந்த திறனில் உள்ளது

## சனத் தெரிவித்தார்

இந்திய அணி தற்போது வலுவான திறனில் உள்ளது என்று இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய் தலைமைத் தேர்வாளருமான சனத் தெரிவித்தார்.



வலுவான அணியான இங்கிலாந்தை மிக இலகுவாக வீழ்த்தியதை அடுத்து இந்திய அணி எத்தகைய திறனில் உள்ளது என்று வெளிப்பட்டுள்ளது. விராட் கோக்லி உத்வேகம் மிக்க நல்ல தலைவர். அவர் பந்து வீச்சாளர்களை அருமையாக வழிநடத்துகிறார். அவரும் துடுப்பாட்டத்தில் நன்றாக செயல்பட்டு வருகிறார். இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட் ஆட்டத்தில் கருண் நாயர் ஆட்டம் இழக்காமல் 303 ஓட்டங்களைக் குவித்தது எளிதான காரியம் [illegible] பொறுமை [illegible] பிரகாசமான எதிர்காலம் உள்ளது என்று சனத் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஆஸி. ரென்னிஸ் தொடர்; 500 கோடி பரிசுத் தொகை

ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ள ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடருக்கான பரிசுத் தொகை நேற்று அறிவிக்கப்பட்டது. ஒட்டு மொத்த பரிசுத் தொகையும் இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 500 கோடியைத் தாண்டுகிறது.

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஆஸ்திரேலியத் தொடரும் ஒன்று. அடுத்த வருடத்துக்கான தொடர் ஜனவரி 16ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. மொத்தப் பரிசுத் தொகையை விட முதற் சுற்றில் தோற்கும் வீர, வீராங்கனைகளுக்கு வழங்கப்படும் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் கடந்த தொடரை விட (இந்த வருடத் தொடரை விட) அடுத்த தொடரில் 15 சதவீதம் பரிசுத் தொகை அதிகரிக்கப்பட்டது. குறித்த தொடரில் பங்குபற்றுவது தொடர்பாக வீர, வீராங்கனைகள் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்குமாறு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில் பெரும்பாலான முன் னணி வீர, வீராங்கனைகள் தொடரில் கலந்து கொள்வதை உறுதி செய்துள்ளனர். (ம)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
அரசமுகாமைத்துவ உதவியாளர்
புதிய பிரிவு
ஆரம்பம் சனி (24/12)
காலை 9.30 - 12.00 மணிவரை
07.01.2017 தொடக்கம் இப்பிரிவு பிரதி ஞாயிறு 10.00 - 2.00 மணிவரை நடைபெறும்.
பிரிவு II
மாலைநேர வகுப்பு
செவ்வாய், புதன்
மாலை 4.30 - 6.00
076 688 3394,
021 222 3382
ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கும் போட்டிப் பரீட்சை வகுப்புக்கள் 06.01.2017 தொடக்கம் வழமைபோல் நடைபெறும்.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

வங்கியியல் கற்கைநெறி
CBF / IABF இற்கான DBF / DABF
அனைத்துப் பாடங்களும்
ஒரே இடத்தில்
எமது வழமையான ஆசிரியர் குழாம்
ஆம்பம் 24.12.2016 - சனிக்கிழமை
K.ஸ்ரீபரன் (கணக்கீட்டு ஆசிரியர்)
077 459 8430
சத்திரச்சந்திக்கு அருகில் (சிக்னல் சந்தி), யாழ்ப்பாணம்.

சதாபொன்ஸ் கல்வி நிலையம்
மாலுசந்தி - அல்வாய்
A/L கலை, வர்த்தகப் பிரிவுகளுடன்
A/L தொழில்நுட்ப பிரிவுகள்
(பொறியியல் தொழில்நுட்பம், உயிரியல் முறைமை, விஞ்ஞான முறைமை)
24.12.2016 சனிக்கிழமை
காலை 8 மணிக்கு ஆரம்பமாகின்றது.
துறைசார்ந்த பிரபல ஆசிரியர்களால் வகுப்புக்கள் நடத்தப்படும்.

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
2019 A/L - தொழில் நுட்பப் பிரிவு

| | |
|---|---|
| பொறியியற் தொழினுட்பம் | திரு. K.ரவிக்குமார் திரு. R.நிருஜன் திரு. P.சண்முகதாசன் திரு. R. சிவரூபன் திரு. P.கிருபாகரன் திரு. P.கணேஸ் |
| தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் | திரு. A.அரவிந்தன் திரு. R.நிருஜன் திரு. P.விமலநாதன் திரு. R.S.மயூரன் திரு. S.மயூரதாசன் திரு. T.ஆபவன் |
| உயிர்முறைமைகள் தொழினுட்பம் | திரு. M.விஸ்ணுதேவன் திரு. P.நிரோஜனன் |
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் | திரு. S.மயூரதாசன் திரு. T.ஆபவன் |
| விவசாய விஞ்ஞானம் | திரு. M.விஸ்ணுதேவன் திரு. R.மௌலி |
| புவியியல் | திரு. S.ஸ்ரீகிருஸ்ணா திரு. T.லகன்றி |
| சித்திரம் | திரு. A.ஜெயந்தன் |
| ஊடகக்கல்வி | திரு. S.கோணேசலிங்கம் திரு. S.வேல்கஞ்சன் |
| இலகு கணிதம் | திரு. S.ரவிராஜ் |
| வணிகக்கல்வி | திரு. M.சுபன் |
| கணக்கீடு | திரு. S.சதீஸ்குமார் |
| பொருளியல் | திரு. S.கம்சன் |

2015 A/L தொழில்நுட்பப் பிரிவு பெறுபேறுகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ... பல சாதனைகளை நிகழ்த்திக் காட்டிய பெருமையுடன்
ஆரம்பம் T.P : 0772487774
24.12.2016 காலை 8.30
"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு"

வினா - விடை வகுப்புக்கள் ஆரம்பம்
தரம் 6, 7,8 மாணவர்களுக்கான கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக் குரிய விஷேட வினா - விடை வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
தொடர்பு - 077 538 8471
சயன்ஸ் அக்கடமி
நல்லூர் - அரியாலை
(முருகன் ஆலயம் அருகில்) (ஸ்ரான்லி கல்லூரி அருகில்)

O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
13 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
*Dip.in Microsoft office- Word 2016, Excel 2016, Access 2016, PowerPoint 2016, Publisher 2016
*Dip.in DTP - Photoshop CC, CorelDraw X7, PageMaker 7.0, InDesign CC, Illustrator CC
*Dip.in Web Design, Dip. in Graphic Design
*Certificate in Internet & E-mail
சிங்கள Typing இலவசம்
ஆசிரியர்: KRC TP:0779672038

NALIN Information Technologies Pvt Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
நத்தார், புத்தாண்டை முன்னிட்டு
சிறப்புச் சலுகை விலைகளுடன் 31.12.2016 வரை
தரச்சான்று உத்தரவாதம் பெற்ற ஒரேயொரு நிறுவனம்
Authorized Genuine Business Partner

Desktop Computer
HP 280G2 — Processor - Dualcore 4400 (3.3 Ghz); Mother.B. - intel H110; Ram - DDR4_4GB; Hard disk - 500GB; Optical Drive - HP DVD Writer; Monitor - 18.6" LED; FREE OS - DOS; HP Keyboard & Mouse — Rs. 58,500
HP 280G2 — Processor - i3-6100 -6th Gen 3.7 Ghz; Mother.B. - intel H110; Ram - DDR4_4GB; Hard disk - 500GB; Optical Drive - HP DVD Writer; Monitor - 18.6" LED; FREE OS - DOS; HP Keyboard & Mouse — Rs. 68,500
HP 400G3 — Processor - i5-6500 (3.2Ghz) 6th Gen; Mother.B. - intel H110; Ram - DDR4_4GB; Hard disk - 500GB; Optical Drive - HP DVD Writer; Monitor - 18.6" LED; FREE OS - DOS; HP Keyboard & Mouse — Rs. 81,000
HP 400G3 — Processor - i7-6700 (3.4Ghz) 6th Gen; Mother.B. - intel H110; Ram - DDR4_4GB; Hard disk - 500GB; Optical Drive - HP DVD Writer; Monitor - 18.6" LED; FREE OS - DOS; HP Keyboard & Mouse — Rs. 102,500

DELL
DELL VOSTRO 3650 — Processor - i3 - 6100; Ram - 4GB; Hard disk - 500 GB; Display - 15.6" LED; OS - DOS — Rs. 69,500
DELL OptiPlex 3040 MT — Processor - i5 - 6500 (3.2 Ghz); Ram - H110; Hard disk - 500 GB; Display - 18.6" LED; OS - DOS — Rs. 84,500
DELL OptiPlex 3040 MT — Processor - i3 - 6100; Ram - 4GB; Hard disk - 500 GB; Display - 18.6" LED; OS - DOS — Rs. 69,500
DELL VOS TRO 3568 — Processor - i3 - 7100; Ram - 4GB; Hard disk - 500 GB; Display - 15.6" LED; OS - DOS — Rs. 67,900

HP - Lap Top 7th Gen (7th தலைமுறை மடிக்கணனிகள்)
HP 15-BA 010AU — Processor - AMD Dual Core E2-D110 (1.8Guz, 2Mb Cache); Ram - 4GB DDR3L 1600 (1x4GB); Hard disk - 500GB; Display - 15.6" LED; OS - DOS — Rs. 41,000
HP 15-AY 119TU — Processor - intel i3-7100U (2.4 Ghz) 7th Gen; Ram - 4GB DDR3L; Hard disk - 1TB; Display - 15.6" LED; OS - DOS — Rs. 63,500
HP 15-AY119 TX — Processor - intel i3-7100U (2.4 Ghz) 7th Gen; Ram - 4GB DDR3L; Hard disk - 1TB; VGA - AMD RADEOM R5 M430; Display - 15.6" LED; OS - DOS — Rs. 65,000
HP 15-AY120TX — Processor - intel i5-7200U (2.5 Ghz) 7th Gen; Ram - 4GB DDR4; Hard disk - 1TB; VGA - AMD RADEOM R5 M430; Display - 15.6" LED; OS - DOS — Rs. 81,000
HP 15-AY103 TX — Processor - intel i5-7200U (2.5 Ghz); Ram - 4GB DDR3L; Hard disk - 1TB; VGA - AMD RADEOM R5 M430; Display - 15.6" LED; OS - Win 10 Home Ori — Rs. 85,900
HP 15-AU171 TX — Processor - intel i5-7200U (2.5 Ghz) 7th Gen; Ram - 8GB DDR4; Hard disk - 1TB; VGA - NVIDIA GEFORCE 940 MX; Display - 15.6" LED; OS - DOS — Rs. 93,000

HP Laserjet pro1102
From HP Business Partner only
Special Price: Rs. 15,500
The Winner of Best Emerging Retail Partner Awards 2016 Sri Lanka
* நிபந்தனைக்கு உட்பட்டது.
No. 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121 | 077 766 7975
வடபிராந்தியத்தில் மிகச் சிறந்த விலைக் கழிவுடன்
1 முதல் 3 வருடங்கள் வரை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.